Registered as a News Paper
பக்கம் – 16


# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—17 20–26 ஜூன் 2003





## புலிகளின் கப்பல்

# பரிசோதனைக்கு அனுமதித்தும் மூழ்கடிப்பு!

## ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்



## இடைக்கால நிர்வாகம் பற்றி மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்படும்



## அரசியல் வாழ்வில் சட்டபூர்வமான பாத்திரத்தை வகிக்க புலிகள் கடுமையாகப் பாடுபட வேண்டும்

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 20.06.2003

## விளைவுகள் தவிர்க்க முடியாது போகலாம்!

**கால்** நூற்றாண்டுக்காலத்தில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. ஆம் அதை அப்படித்தான் சொல்லவேண்டும். புலிகளின் மற்றொரு கப்பல் சர்வதேசகடற்பரப்பில் வைத்து சோதனை யிடுவதற்கு சிறிலங்கா கடற்படைக்கு அனுமதித்தும் கூட பன்னிரண்டு போராளி மாலுமிகள் கப்பலைவிட்டு இறங்கியும் கூட அது மூழ்கடிக்கப்பட்டும் புலிகள் யுத்தத்தைத் தவிர்த்து பொறுமை காத்திருக்கிறார்கள்.

கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் இதை ஒரு அதிசயம் போலத்தான் உணர வேண்டியிருக்கிறது. இம்முறை இத்தனை தூரம் புலிகளின் பொறுமை காப்பிற்கு விசேட காரணங்களும் இருக்கத்தான் செய் கின்றன.

சமாதானத்தை வற்புறுத்தும் சர்வ தேசத்திற்கு புலிகள் சமாதானத்திற்கான தடைக்காரணிகள் அல்ல என்பதையும் சமாதா னத்திற்காக அழுத்தம் பெறவேண்டியது பேச்சின் மறுதரப்பே என்பதையும் நிரூபிப் பதற்கு புலிகளுக்கு இது வாய்ப்பான தருணம்.

முன்னைய பேச்சுக்களில் இத்தகைய வாய்ப்பு இருந்ததில்லை. இம்முறைப்பேச்சு முற்றிலும் சர்வதேச மயப்படுத்தப்பட்டதனால் அதன் நியாயங்களும் சர்வதேச மயப்படு வதற்கான வாய்ப்பு இம்முறைப்பேச்சுக்கு உண்டு.

புலிகளின் கப்பல் இன்னும் சரியாக மூழ் கடிக்கப்பட்ட இடம் அடையாளம் காணப்படாத பட்சத்தில் அது இலங்கைக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அது ஆயுதங்களை ஏற்றி வந்திருக்க வேண்டும் என்றும் வாதங்கள் உண்டு.

இது குறித்து நோக்குவோமானால் ரோக்கியோ மாநாட்டை புலிகள் புறக்கணித் ததை அடுத்து சர்வதேச அபிப்பிராயம் புலிக ளுக்கும் பாதகமாக மாறாலாம் என்றிருந்த சூழலில் புலிகள் ஒரு ஆயுதக்கப்பலை கொண்டு வந்து சர்வதேச அளவில் தமது நியாயபூர்வ நிலைப்பாட்டை பாழடித்துவிட விரும்பியிருக்கமாட்டார்கள்.

ஏனெனில், முன்னாள் இந்தியத்தூதுவர் திரு.டிக்ஷிக் “92இல் இருந்து புலிகளின் கப்பல் நடமாட்டம் குறித்து இந்தியா இரகசியத் தகவல்களை இலங்கைக்கு வழங்குவது வழக்கமே. அதில் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து உதவி வருகிறது.” என்றிருக்கிறார்.

இது பொதுவாகவே பலருக்கும் தெரிந்ததே. புலிகளுக்கும் தெரிந்ததே. எனவே சமாதான காலத்தில் சர்வதேச ரீதியாக புலிகளின் நற்பெயரைக்கெடுக்க இத்தகைய ஒத்துழைப் புக்கள் கிடைக்கும் ஏன்பதும் தெரிந்ததே.

தவிரவும் யுத்தகாலத்தில் இலங் கைக்கடற்படை தனது எல்லாத்துறை முகங்க ளையும் தனது எல்லாக்கடற் படைத்தளங்க ளையும் பாதுகாக்கவேண்டி' தனது கலங்க ளையும் படையையும் இவற்றிற்காக நிறுத்த வேண்டி இருந்ததால் அதன் பலம் குவி நிலைப்படுத்தமுடியாது சிதைந்திருந்தது. புலிகளின் குடாரப்பு தரையிறக்கத்தின் பின் இத்தகைய படைவலுவின் சிதையும் நிலை மோசமாக இருந்தது.

இப்பொழுது நிலைமை அவ்வாறல்ல. யுத்தநிறுத்தம் அமுலில் இருப்பதால் இவற்றிற்கான பாதுகாப்பும் தேவையற்றது. எனவே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்கரையை கண்காணிக்கவேண்டி கடற் கலங்களையும் படைவலுவையும் ‘வர்ணகிரண’ நடவடிக்கையில் செறிவாக குவிக்க இயலும். ஆதலாலும் புலிகள் ஒரு ஆயுதக் கப்பலை இலங்கை கடல் எல்லைக்குள் கொண்டு வந்து தமது நற்பெயரைக் கெடுத்துக்கொள்ள சர்வதேச மயப்பட்டுவிட்ட இச்சமாதான காலத்தில் முனைந்திருக்க வாய்ப்பில்லை.

பிரதம மந்திரி ரணில் கப்பல் மூழ் கடிக்கப்படும் வரை பாதுகாப்பு அமைச்சுக்கு எதுவும் தெரியாது என்கிறார்.

ஆயின் இது சமாதானதிற்கு எதிரான வியூகத்திற்கான தாக்குதல். இதை முறியடிக்க ரணிலால் முடியவில்லையாயின் அல்லது முனையவில்லையாயின் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மோசமாக பலவீனப்படும். யுத்த நிறுத்த ஒப்பந்தம் பலவீனப்பட்டால் அதன் நேரடி அர்த்தம் யுத்தத்திற்கான வாய்ப்பு பலமுறும் என்பதே.

சமாதானத்தின் மீது கட்டியெழுப்பட்ட ரணிலின் ஆட்சி பாதுகாக்கப்பட வேண்டு மாயின் ரணில் முனைப்பான தற்துணிவோடு இது குறித்து செயலில் இறங்கவேண்டும்.

சமாதானத்தை விரும்பும் சர்வதேச நாடுகள் இது விடயத்தில் ரணிலுக்கு பலமான அழுத்தத்தை பிரயோகிக்கவும் அதற்கான பின்னூட்டல்களை வழங்கவும் வேண்டும். அல்லாவிட்டால் ஒப்பந்தம் பலவீனம் அடைவதும் அதன் விளைவுகள் வெளிப்படுவதும் தவிர்க்கமுடியாது போகலாம்.

## தூரனின் பார்வை

### புலிகளின் பொறுமையைச் சோதிக்க முனையும் சிறிலங்கா அரசும், படைத்தரப்பும்..

# நீறு பூத்த நெருப்பாக கனலும் பேரினவாதிகளின் போர்வெறி

மூர்க்கனும், முதலையும் கொண்டதை விடாதென்பர். பேரினவாதமும் அப்படித்தான். அமைதியையும், சமாதானத்தையும், பேரின வாதிகளும் அவர்களின் ஏவலாளிகளான பாதுகாப்புப்படைகளும் எந்த வகையிலும், எக்காலத்திலும் ஆதரிக்கவும், அங்கீக ரிக்கவும். தயாராக இல்லை என்பதையே கடந்த சில நாட்களாக யாழ் குடாநாட்டிலும் ஏனைய தமிழர் பிரதேசங்களிலும் நடை பெற்றுவரும் நிகழ்வுகள் உணர்த்தி வரு கின்றன.

சமாதானத்தை எந்த விதத்திலும், என்ன விலை கொடுத்தும் முன்னெடுப்பதில் அரசு உறுதியாக இருப்பதாக நாடெங்கும் பறந்து பறந்து, -சர்வதேச சமூகத்திற்கு பிரச்சார ரீதியிலான- தேர்தல் வாக்குறுதிப் பாணியி லான- உத்தரவாதங்களை வழங்கி வரும் பிரதமர் ஒரு புறமும்,-

சமாதானத் தொட்டிலை ஆட்டுவது போல் உலகின் பார்வைக்கு நாடகமாடிக் கொண்டு, அமைதிக் குழந்தையை அலற வைக்கப் பேரினவாத சாத்தான்களுக்கும் உருவேற்றி சன்னதம் கொள்ளவைக்கும் பணியையும் கச்சிதமாக செய்துவரும் சனாதிபதி மறுபுறமுமென.... சிலவேளை களில் பகிரங்கமாகவும், பல சமயங்களில் மறைமுகமாகவும், ஏட்டிக்குப் போட்டியாகவும் இயங்கி வரும் நிலையில்...

அமைத்தித்தீர்வு- நிரந்தர சமாதா னம், என்பவை குறித்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும், சமாதான ஆர்வலர்களான ஏனைய மக்களினதும் நம்பிக்கைகளும் மெல்ல மெல்ல அற்றுப் போகத்தொடங்கி யுள்ளது.

இது ஒன்றும் மறைக்கக்கூடிய விடயமேயல்ல... வெறுமனே வார்த்தைக ளாலும், வரட்டுத்தனமான அறிக்கைகளாலும் சமாளித்து விடக்கூடிய விடயமுமல்ல.

சிங்கள- பௌத்த சிந்தனாவாதி களான சிறிலங்காவின் பாரம்பரிய அரசியல் தலைவர்கள் அவ்வப்போது தங்களை மனித உரிமைகளையும், சமத்துவத்தையும், சமா தானத்தையும் பேணுவதில் ஆர்வம் கொண்ட வர்களாக, பல் வேறுபட்ட ‘சுய’ அரசியல் பதவிசார் நோக்கங் களின் நிமித்தம் ‘போலி முகம்’ காட்டிகுறுநகை புரிந்து வந்துள்ள குறுகிய சில காலங்களுக்குள்ளேயே அவர்கள் தம் சுயமுகத்தை வெளிப்படையாக இனங் காட்டியும் வந்துள்ளமையே வரலாறு.

பண்டார நாயக்கா செய்ததையே இன்னும் கொஞ்சம் ‘மெருகு’படுத்தி சிறிமாவோ செய்தார். பேரினவாதத்திற்கு சட்டபூர்வ அந்தஸ்த்தை வழங்கினார். ஜே.ஆர் அதில் பலபடிமேலேறி நின்று அதற்கு நிறைவேற்று அதிகார அந்தஸ்த்தை அளித்து கௌரவித்தார். அவரைத் தொடர்ந்த பிரேமதாசாவும், சந்திரிகாவும் அதற்கு எப்படி ‘இரத்த வெறியேற்றி’ போஷித்து வந்தார்கள் என்பதை விபரிக்க வேண்டிய அவசியமே யில்லை....

பௌத்தபீடங்களின் ஆவேச ஆசீர் வாதம் அரசபீடங்களுக்கு அனுசரணை யாயிற்று.....

ஓராண்டுக்கும் மேலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் அதன் லாபகரமான பெறு பேறுகள் அனைத்தையும் தென்னிலங் கைக் கும் சிங்கள மக்களுக்குமே வாரி வழங்கி யுள்ளன.

தமிழ் மக்கள் வெறும் வாக்குறு திகளை வழமை போன்று பெற்றுக் கொண் டார்கள்.....

ராலும் நம்பமுடியுமா?

ஓராண்டுக்கு மேலான சமாதானம் சாதித்ததென்ன?

வீதி திறப்புக்களால் மட்டும் தமிழ் மக்களின் ‘விதி’ மாற்றப்பட்டுவிட்டதா? அகற்றப்ப டாத முட்கம்பி வேலிகள், ஆழப் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அபகரிக் கப்பட்ட வாழ்விடங்களில் ஆக்கிரமிப்பாளர் களின் முகாம் கள்... அடுத்து என்ன நடக் குமோ என்ற அச்சத்துடன் கூடிய அவல வாழ்வில் மக் கள்....

தர்மச் சக்கரத்தின் மேலேறி நின்று கொண்டே ‘சமாதானத்திற்கான யுத்தத்’தை காட்டுமிராண்டித்தனமாக பிரகடனம் செய் தார்கள்... நெறிப்படுத்தினார்கள்... மேற் கொண்டார்கள். இது ஒரு தொடர்நிகழ்வாக இன்ன மும்.....

இப்போது ரணிலின் சமாதானகீதம் யுத்த பேரிகைகளின் பின்னணி இசையில் அரங்கேற் றப்பட்டுக் கொண்டிருக்கிறது. மயான அமைதியில் ஆரம்பித்த இந்த நிகழ்வு, இன்றைய நாளில் மரண பீதியை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து கொண்டே யுள்ளது.

செயலற்ற கட்டமைப்புகள்... அர்த்த மற்ற சுற்றுலாக்கள்... அளவுக்கு மீறிய ஆர்ப் பரிப்புகள்.... அதிசயிக்கவைக்கும் அறிவிப் புகள்... என அனைத்தும் சமாதானம் பற்றிய மற்றுமொரு ‘வெறுங்கனவை’ மட்டுமே ஏற்படுத்தின....

அவ்வளவுதான்.

ஆசிய நாயகன் ‘ரணில்’ அதிகார நாயகி சந்திரிகா, இருவரும் அப்பாவித் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கே உத்தர வாதம் வழங்கத் தயாராக இல்லாத நிலையில், வாழ்வுரிமைக்கான தீர்வை நியாயபூர்வமாக வழங்குவார்கள் என எவ

இவை தான் இன்றைய சமாதானத் தில் தமிழ் மக்கள் பெற்றுள்ள நிரந்தர லாபங்கள் எனில், சமாதானத்துடன்கூடிய அமைதிக்கு, சிங்கள அரசும் அதற்கு வக்கா லத்து வாங்கும் சர்வதேச நாடுகள் சிலவும் மரண பீதியுடன் கூடிய ‘மயான அமைதி’ என்ற விளக்கம் கூற முயல்கிறார்கள்.

‘சமாதானச் சபை குழப்பி’யான சந்திரிகாவின் பரிபூரண ஆசீர்வாதம் பெற்ற சிறிலங்காப் பாதுகாப்பு படைகள்- குறிப்பாக கடற்படையும் இரா ணுவமும்- கடலிலும் தரையிலும் போர்ச் சூழலை உருவாக் குவதில் (15ம்பக்கம் பார்க்க....)



# மனிதக்குண்டுகளும் சமாதானமும்

**நிலாந்தன்**

"தனது புதல்வரையும் புதல்வியரையும் மனிதக்குண்டுகளாய் மாற்றும் ஒரு செயற்பாட்டின் முன்னோடிகளாய்ப் புலிகள் அறியப்படுகின்றார்கள்.... அவர்கள் சிறிலங்காவின் அரசியல் வாழ்வில் சட்டபூர்வமான ஒரு பாத்திரத்தை வகிக்கும் தகமை பெற்றவர்கள் என்று உலகத்தை நம்பச் செய்யும் விதத்திலும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் கடுமையாகப் பாடுபட வேண்டும்....."

இப்படிக் கூறியிருப்பவர் றிச்சர்ட்ஆர்மிரேஜ். அமெரிக்காவின் பிரதி அமைச்சராகவும் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பானவராகவும் இருப்பவர் ரோக்கியோ மாநாட்டின் இயக்குநர் இவரே. அந்த மாநாட்டில்வைத்தே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

உண்மைதான். இது மனிதக்குண்டுகளின் காலம். பலஸ்தீனத்தில் மிகச் சாதாரண இலக்குகளுக்கெல்லாம் மனிதர்கள் குண்டுகளாய் மாறி வெடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

காஸ்மீரில், செச்னியாவில், ரியாத்தில், கஸபிலங்காவில், அங்காராவில் என்று அனேகமாக பூமியின் எல்லாக் கண்டங்களிலும் மனிதக்குண்டுகள் அவ்வப்போது வெடிக்கின்றன.

அங்கெல்லாம், மனிதக்குண்டுகள் சில சமயங்களில் பெண்களாகயிருக்கிறார்கள். குறிப்பாக கர்ப்பிணிகள் நோயாளிகள் போன்று உருமறைப்புச் செய்து கொண்டு வருகிறார்கள்.

ஆனால் இந்த மனிதக்குண்டுகளில் பெரும்பாலானவை உதிரியானவை. அவை ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு படைப்பிரிவாக இயங்குவதில்லை.

முன்பு இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் யப்பானிடம் அப்படியொரு வான் படைப்பிரிவு- கமிகாஸி - இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அது ஒரு படைப்பிரிவு என்று சொல்லப்படுமளவுக்கு பெரிதாக எதையும் சாதித்திருக்கவில்லை.

இது தவிர, வரலாற்றில் மத்திய காலங்களில் மேற்காசியாவில், இஸ்லாமியத் தீவிரவாதிகளால் உருவாக்கப்பட்ட ஒரு தற்கொலைப் படைப்பிரிவு ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அது நவீன மனிதக்குண்டுகளைப் போன்றது அல்ல.

இத்தகைய ஒரு பின்னணியில்- உலகிலேயே தற்கொலைப் போராளிகளுக்கென்று ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு படைப்பிரிவு இருப்பது விடுதலைப்புலிகளிடம் தான்.

இதுதான் அமெரிக்கர்கள் அதிகம் கவலைப்படும் ஒரு விசயமாயிருக்கிறது.

கரும்புலிகளின் முன்மாதிரியைப் பின்பற்றி உலகின் பிறபாகங்களில் உள்ள போராட்ட அமைப்புக்களும் தீவிரவாத இயக்கங்களும் மனிதக்குண்டுகளை ஏவிவிடுவதாக அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் அஞ்சுகின்றன.

மனிதக்குண்டுகள்,மரபு ரீதியிலான யுத்த முறைகளுக்குச் சவாலாகவும் புதிர்களாகவும் காணப்படுகின்றன. மரபு ரீதியிலான படைத்துறைப் பாடப்புத்தகங்களுக்கூடாக அவற்றைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. தகவல் யுகத்தின் டிஜிற்றல் யுத்த முறைகளுக்குள்ளும் மனிதக்குண்டுகள் பொலிவிழந்து போகாத புதிர்களாயிருப்பது என்பது அமெரிக்கர்களுக்கு உறக்கத்தைக் கெடுக்கும் ஒரு விசயமாயிருக்கிறது.

உலக மகாயுத்தங்களின் போது அமெரிக்கா யுத்தத்தை தனது எல்லைகளுக்கு வெளியிலேயே வைத்திருக்கமுடிந்தது. ஆனால் 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி யுத்தம் அமெரிக்கர்களின் டிஜிற்றல் கனவுகளைச் சிதறடித்த போது அந்த யுத்தத்தைச் செய்தது விரல் விட்டு எண்ணக்கூடிய சில தற்கொலைப் படைவீரர்களே என்பது அமெரிக்கர்களை நீண்டகால நோக்கில் சிந்திக்குமாறு தூண்டியுள்ளது.

தகவல் பேரரசின் தலைநகரின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆப்கானிஸ்தானின் இருண்ட மலைக்குகைக்குள் வைத்துத் திட்டமிடப்படும் என்று எந்த ஒரு மரபு ரீதியிலான படைத்துறைப் பாடப்புத்தகத்திலும் ஏற்கனவே கூறப்பட்டிருக்கவில்லை.

எனவே மனிதக்குண்டுகளற்ற ஒரு உலகத்தைப் படைப்பது என்று அமெரிக்கா முடிவெடுத்து விட்டது.

தற்சமயம் நிகழும் பலஸ்தீன- இஸ்ரேல் சமாதான முயற்சிகளின் பின்னாலிருக்கும் பிரதான காரணிகளில் இதுவும் ஒன்று. இதைச்சற்று விரிவாகப் பார்ப்போம்.

2005 இல், பலஸ்தீனர்களுக்கு சுயராஜ்ஜியம் ஏற்படுத்திக்கொடுக்கும் "வழி வரைபடம்" ஒன்றை அமெரிக்கா முன்மொழிந்துள்ளது.

இந்த வழி வரைபடத்தை ஊக்குவித்த காரணிகள் இரண்டு.

முதலாவது- ஈராக்கின் வீழ்ச்சிக்குப் பின் மாறியுள்ள மேற்காசிய வலுச்சமநிலைக்கேற்ப பலஸ்தீனர்களுக்கு ஒரு தீர்வைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அமெரிக்காவுக்குத் தோன்றியுள்ளது.

மற்றது- இஸ்ரேலில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் மனிதக்குண்டுத் தாக்குதல்களால்



யூதர்கள் பீதியடைந்திருப்பது.

முதலாவது காரணத்தின் படி ஈராக்கின் வீழ்ச்சிக்குப் பின், மேற்காசியாவின் வலுச்சமநிலை அமெரிக்காவுக்குச் சாதகமாக மாறியுள்ளது. இதுவரை காலமும் அங்கே மன்னர்களைப் பாதுகாத்ததன் மூலம் தனக் கொரு ஆதரவுத்தளத்தை அமெரிக்கா பேணியது.



ஆனால் ஈராக்கின் வீழ்ச்சிக்குப் பின் அங்கே அமெரிக்கா நேரடியாக ஆட்சி செய்யும் ஒரு நிலை தோன்றியுள்ளது. நேரடியாகத் தானே ஆட்சி செய்யவேண்டி வரும்போது ஆகக்குறைந்த பட்ச சனநாயகத்தையாவது பேணவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்குண்டு. இது காலப்போக்கில் தவிர்க்கவியலாதபடி ஈராக்கை ஒப்பீட்டளவில் சனநாயகமயப்படுத்தும். இதனால் அந்தப் பிராந்தியம் முழுவதையும் அமெரிக்கா தனக்குச் சாதகமாக நொதிக்கச் செய்யவும் முடியும்.

இத்தகைய ஒரு போக்கின் வளர்ச்சிக் கட்டங்களில் பலஸ்தீனர்களுக்கும், குர்திஷ்களுக்கும் ஏதாவது ஒரு சனநாயக பூர்வமான தீர்வை வழங்கவேண்டிவரும்.

இதனால் தான், பலஸ்தீனத்தில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு சமாதானத்துக்காவது போக வேண்டியிருக்கிறது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் பலஸ்தீனர்களின் தற்கொலைத் தாக்குதல்கள்.

கொல்லப்பட்ட முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் ராபின் சமாதானம் செய்தபோது பலஸ்தீனர்களின் போராட்டம் கற்களோடு தெருவில் நிற்கும் "இன்ரிபாடா" வாகத்தானிருந்தது.

ஆனால் இன்ரிபாடாவை மதிக்கத் தவறிய யூதர்கள் சமாதானத்தை முறித்ததன் விளைவாக பலஸ்தீனர்களின் அடுத்த கட்டப் போராட்டம் மனிதக்குண்டுகளுடன் தோன்றியது.

இன்ரிபாடாவுடன் சமாதானம் செய்யத் தவறியதன் விளைவை யூதர்கள் இப்பொழுது அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அங்கே மனிதக்குண்டுகள் அற்ப இலக்குகளுக்கெல்லாம் பாவிக்கப்படுகின்றன. இது, ஒரு வித கையறு நிலையில் தான் பலஸ்தீனர்கள் மனிதக்குண்டுகளைப் பாவிக்கிறார்களோ என்று யோசிக்கவைக்கிறது.

முன்பும் ஒரு வித கையறு நிலையில் தான் சிறுவர்களைக் கற்களோடு தெருக்களில் இறக்கினார்கள்.

அது முறியடிக்கப்பட்டபோது மனிதர்கள் குண்டுகளாய் மாறினார்கள். ஆனால் குறிவைக்கப்படும் இலக்குகளை வைத்துப் பார்க்கும் போது மனிதக்குண்டுகளின் அருமை அதிகம் பேணப்படாத நிலையே அங்கு காணப்படுகிறது.

இதை, சமாதானத்தால் தவிர வேறு எதனாலும் சமாளிக்கமுடியாது என்பதைக் கண்டுபிடிக்க யூதர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இவ்வளவு காலம் எடுத்திருக்கிறது.

ஈராக்கின் வீழ்ச்சி, இது விசயத்தில் ஒரு முடிவை எடுப்பதற்குரிய அகப்புற நிலமைகளைத் துரிதமாக உருவாக்கி விட்டிருக்கிறது.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் சரோன், பலஸ்தீனர்களின் நிலத்தில் இஸ்ரேலியத் துருப்புகள் நிலைகொண்டிருப்பதை "ஆக்கிரமிப்பு" என்று கூறுமளவுக்கு அங்கே நிலமை வந்துவிட்டது. இது யூதர்களை மட்டுமல்ல பலஸ்தீனர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதாம்.

அதோடு அண்மையில் அவர் யூதர்கள் மத்தியில் பேசும்போது பின்வருமாறு கூறியுள்ளார்.... "விட்டுக்கொடுத்தலின் வலியை யாரெல்லாம் புரிந்துகொள்ள முடியாதோ அவர்களால் உண்மையான சமாதானத்தை உருவாக்கமுடியாது.... ஏனெனில் அந்த வலியை உணரும் ஒருவர்தான் அத்தகைய வலிமிகுந்த விலை கொடுத்துப்பெறப்படும் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக எதையும் செய்வார்..."

அண்மைக்காலம் வரை பலஸ்தீனர்களின் வீடுகளை புல்டோசர்களால் இடித்துத்தரை மட்டமாக்குமாறு உத்தரவிட்ட சரோன் மேற் கண்டவாறெல்லாம் கதைக்குமளவுக்கு அங்கே சமாதானத்தின் தேவை வலிமையாக உணரப்படுகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் பலஸ்தீனர்களைப் போலன்றி, கஸ்மீரியர்களைப் போலன்றி மிகவும் கட்டுக்கோப்பான ஒரு தற்கொலைப்படையணியை வைத்திருக்கும் புலிகளை; இத்தகைய தற்கொலைப்படைகள் எல்லாவற்றுக்கும் முன்னோடிகள் என்று அமெரிக்கா கூறும் புலிகளை சமாதானத்தால் வசப்படுத்த வேண்டிய தேவை முன்னெப்பொழுதையும் விட இப்பொழுது வலிமையாக மேலெழுந்திருப்பதாக அமெரிக்கா கருதுவது போலத்தெரிகிறது.

சமாதானத்தின் மூலம் புலிகளை சர்வதேச சமூகத்துக்குப் பொறுப்புக் கூறவல்ல ஒரு அமைப்பாக மாற்றிவிட்டால், மனிதக்குண்டுகளற்ற ஒரு உலகத்தைப் படைக்கும் தனது வேலைக்கு மிகப்பிரகாசமான ஒரு தொடக்கமாய் அது அமைந்துவிடும் என்றும் அமெரிக்கா நம்புகிறது.

ரோக்கியோ மாநாடு அதற்குரிய மிக அருமையான, மிக அரிதான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் என்றும் அவர்கள் நம்பியிருந்தார்கள்.

ஆனால் வொஷிங்ரன் மாநாட்டுக்குப் புலிகளை அனுமதிக்க மறுத்ததன் மூலம் ரோக்கியோவுக்குப் புலிகளை அழைத்துப் போகும் தார்மீக அடிப்படையை அவர்கள் இழந்துவிட்டார்கள்.

மட்டுமல்ல, ஒருதலைப்பட்சமான ரோக்கியோப் பிரகடனம் அது ஒரு தலைப்பட்சமானது என்பதினாலேயே புலிகளைக் கட்டுப்படுத்தும் சக்தியற்றதாகிவிட்டது.

இனி, சில விசயங்களை முதலிலிருந்தே தொடங்கவேண்டியிருக்கும்.

இலங்கைத்தீவின் சமாதானம் தேங்கத் தொடங்கிவிட்டது.

இப்பத்தியில், சில வாரங்களுக்கு முன்பு கூறப்பட்டது போல, சமாதான முயற்சிகள் தேங்கிநிற்கும் போதெல்லாம் சிறிய, உணர்ச்சி வசப்படுத்தும் சம்பவங்களேபோதும் சண்டையைத் தொடங்குவதற்கு.



அவ்வாறானதொரு சம்பவம் கடந்த சனிக்கிழமை கடலில் நடந்திருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்புவரை உலகில் மனிதக்குண்டுகள் அதிகம் வெடிக்கும் ஒரு தலைநகரமாக கொழும்பு இருந்து வந்தது.

உலகில், யூதர்களை விடவும், அமெரிக்கர்களை விடவும் மனிதக்குண்டின் ருசிஅதிகம் தெரிந்த மக்களாகச் சிங்களவர்கள் காணப்படுகிறார்கள்.

இந்நிலையில், மனிதக்குண்டுகளற்ற ஒரு உலகத்தைப் படைக்க நினைக்கும் அமெரிக்கா, மனிதர்கள் குண்டுகளாய் மாறத்தேவையில்லாத ஒரு சமூகப் பொருளாதார அரசியல் ஒழுங்கை முதலில் உருவாக்கிக்காட்ட வேண்டும்.

அபகீர்த்திமிக்க, வியட்நாம் படையெடுப்பின்போது ஒரு படைத்துறை அதிகாரியாக பணிபுரிந்த ஆர்மிரேஜ் இதைப்புரிந்து கொள்ள அதிகம் சிரமப்படவேண்டியதில்லை.

இந்த இடத்தில், முன்பு அல்ஜீரிய விடுதலைப்போராளி ஒருவர் கூறிய வார்த்தைகள் அதிகம் பொருத்தமாய் இருக்கும் போலத் தோன்றுகிறது.

அல்ஜீரியர்கள், ஃபிரெஞ் ஆதிக்கத்தை எதிர்த்துப்போராடிய காலத்தில் ஃபிரெஞ்சுப் படைகளால் கைது செய்யப்பட்ட அந்தப் போராளியை பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டார்கள்.

அந்நாட்களில், ஃபிரெஞ் குடியிருப்புக்களை அதிகம் அச்சுறுத்தி வந்த பார்சல் குண்டுகளைப்பற்றிய கேள்வியது: பார்சல் குண்டுகள் வைப்பதை எப்பொழுது நிறுத்துவீர்கள் என்ற தொனிப்பட அந்தக்கேள்வி வந்தது. அதற்கந்தப்போராளி சொன்னார்.... "உங்களுடைய குண்டுவீச்சுவிமானங்களை எங்களிடம் தாருங்கள் நாங்கள் எங்களுடைய பார்சல் குண்டுகளை உங்களிடம் தருகிறோம்...."

மடமையில் தொடங்கி மனம் திருந்த வருந்துவதில் முடிவது சினம். - பைத்தேகரஸ்

# தரையை முத்தமிடும் பள்ளிகளும் படிப்பும்




வெளிவாசல் பாலன்

**பெரும்பாலான** பள்ளிக்கூடங்களிலிருந்து வரும் பிள்ளைகளைப் பார்த்தால் அநேகமாக அவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள் என்று தான் கேட்கத் தோன்றும். அந்தளவுக்கு அந்தப் பிள்ளைகள் தினமும் அழுக்கோடும் களைப்போடும் தான் வருகிறார்கள்.

காலையில் அழகாகவும் சுத்தமாகவும் துடிப்பாகவும் பள்ளிக் கூடத்துக்குப் போகும் பிள்ளைகள் அங்கிருந்து திரும்பும் போது ஏனிப்படி இருக்கிறார்கள்?

அநேகமான பள்ளிக் கூடங்களில் பிள்ளைகள் இருந்து படிக்கக் கதிரைகள் இல்லை. வைத்தெழுதுவதற்கு மேசைகளுமில்லை. ஆகக் குறைந்தது தனித்தனிக் கதிரையோ மேசையோ இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நான்கைந்து பேரிருந்து படிக்கக் கூடியவாறான வாங்குகளும் நீளமேசைகளுமாவது இருக்கலாமல்லவா? ஆனால் அதுவுமில்லை.

ஆண்டு ஐந்துக்குக் கீழே படிக்கும் பெரும்பாலான பிள்ளைகள் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் தரையில் இருந்துதான் படிக்கிறார்கள். நாரி முறிய குனிந்திருந்து அல்லது படுத்திருந்துதான் அவர்கள் தங்களுடைய பாடங்களை எழுதுகிறார்கள்.

பல பாடசாலைகளுக்குப் போதிய கட்டட வசதிகளுமில்லை. இருக்கும் கட்டடங்களில் பாதியும் தற்காலிகக் கொட்டகைகளே. அந்தக் கொட்டகைகளுக்கும் நிலத்துக்குச் சாதாரணமாக மண்ணைப்போட்டே நிரப்பப் பட்டிருக்கிறது. அங்கே பிள்ளைகள் தினமும் புழங்கும் போது அந்தப் பகுதி புழுதியும் தூசியும் நிறைந்ததாக மாறி விடுகிறது.

தவிர, மரநிழலில் பாடம் நடக்கும் போது பிள்ளைகள் அங்கும் தரையில் தானே இருக்க வேண்டியிருக்கிறது?

இப்படிக் கீழேயிருந்து படிக்கும் பிள்ளைகள் எப்படிச் சுத்தமாக இருக்கமுடியும்? அவர்கள் வீட்டுக்குத் திரும்பும் போது எப்படி அழுக்கின்றிப் போகமுடியும்?

யுத்தம் நடந்தபோது இவை ஒரு வகையில் தவிர்க்க முடியாதனவாக இருந்திருக்கலாம். ஏனென்றால் யுத்தத்தின் போது ஒன்றில் அழிவிருக்கும். அல்லது தடைகள் இருக்கும் அல்லது தடைகளும் அழிவுகளும் இணைந்திருக்கும். யுத்தத்தில் பொதுவாகவே நெருக்கடியும் இயல்பின்மையும் உருவாகியிருக்கும் தான். ஆனால், யுத்தம் ஓய்ந்த பிறகு, அதன் பின்வரும் சமாதானத்துக்கான சூழலில், அமைதிநிலையில் எல்லாம் இயல்பின்மையைத் தொடர்ந்தும் பராமரிப்பது பொருத்தமானதல்ல, ஏற்கக் கூடியதுமல்ல.

பாடசாலைகளின் நிலைவரங்களைப் பற்றியும் படிக்கும் மாணவர்களின் நிலைமைகளைப்பற்றியும்பல மீடியாக்களிலும் நிறையப் பேசியாகி விட்டது. இனியென்ன புதிதாகச் சொல்ல வேண்டியிருக்கிறது என்று யாரும் கேட்கக் கூடும்.

உண்மைதான்.

ஆனால், இதுவரையிலும் உண்மையில் நடந்ததென்ன?

எல்லோரும் பக்கம் பக்கமாக எழுதி இந்த மாணவர்களின் அவலநிலையைப் பேசினார்கள் தான். இந்தப் பாடசாலைகளின் துயரக்கதைகளைச் சொன்னார்கள் தான்.

இப்படிச் சொல்லியே ஒருவகையான வியாபாரத்தை செய்து முடித்தாயிற்று. அதாவது, அவலங்களை வைத்தே வியாபாரம் செய்து முடிந்தாயிற்று. ஆனால் உள்ள நிலைமைகளில் தான் எந்த முன்னேற்றமும் இல்லை.

சமாதான காலத்தில் சூழலிலெல்லாம் ஓரளவுக்கு புதிய மாறுதல்களைப் பெற்றுத்தான் வருகிறது. தினமும் வீதிகளில் புதிய புதிய வாகனங்களின் பெருக்கம் கூடிக்கொண்டே போகிறது.

ஒவ்வொரு வீதியிலும் அல்லது ஒழுங்கைகளிலும் புதிது புதிதாக வீடுகளும் கட்டடங்களும் உருவாகி வருகின்றன.

பல கோவில்கள் எதிர்பாராத விதமாக திடீரெனப் பிரம்மாண்டமாய் எழுந்து விடுகின்றன. அவை எழுந்தருளியிருந்த மரங்களைக் கூட புதிய கட்டடங்கள் இல்லாமலாக்கிவிட்டு பெரிதாக எழுந்து நிற்கின்றன - வெட்ட வெளிகளில்.

வேண்டிய அளவுக்கு ஒவ்வொருவரும் சமாதான காலக் கொள்வனவுகளாகப் பலதையும் வாங்கிக்குவிக்கின்றோம்.

ஆனால், எங்களுடைய பள்ளிக்கூடங்கள் மட்டும் எந்த முன்னேற்றங்களுமின்றி யாருடைய கவனிப்பு மின்றிக் கிடந்தழிகின்றன.

எங்களுடைய பிள்ளைகள் புழுதியிலும் மர நிழலின் கீழும் கிடந்தே படிக்கவேண்டியிருக்கிறது.

இது நமக்கும் பெருமையைத்தருகிறதா? அல்லது நாங்கலெல்லாம் இவற்றைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம்?

பாடசாலைகளுக்குரிய அடிப்படைத் தேவைகளைச் செய்வதற்கே அரசாங்கம் தயாராக இல்லை. அதுபற்றிய அக்கறைகள் பெரும் மந்த நிலையில் இருப்பதாகவே அவதானிக்கவும் முடிகிறது.

கல்விக்காகச் செயற்படும் N.G.O.க்கள் இதுபற்றி என்ன சொல்கின்றன அல்லது இதற்கு என்ன செய்கின்றன என்பதுதான் அடுத்ததாக வருவது.

பொதுவாகவே மூன்றாம் உலகநாடுகளின் கல்விவளர்ச்சிக்கென செயற்படும் N.G.O.க்கள் இங்கு உண்டு - அத்தோடு யுத்தகால நிலைமைகளில் கல்விச் சேவைக்கும் சிறுவர் நலனுக்குமாகச் செயற்படும் அமைப்புகளும் இங்கேயிருக்கின்றன.

மாதந்தோறும் அவை தங்களுடைய செயற்பாடுகளுக்குச் செலவு செய்யும் தொகையும், சதாரணமானதல்ல. ஆனால், மாணவர்களின் பரிதாப நிலையோ கொஞ்சமும் மாறுவதாக இல்லை. அவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகளில் பாதிகூட நிறைவேற்றப்படுவதில்லை.

ஒரு நிறுவனம் பாய்களையும் புத்தகப்பைகளையும் கொடுக்கிறது. சிறுவர் கற்றலுக்குரிய சில உபகரணங்களையும் வழங்குகிறது. ஆனால் கொடுக்கப்பட்ட பாய்களில் பாதியை பல வீடுகளில் பார்த்திருக்கிறேன். பல நிறுவனங்களில் கண்டிருக்கிறேன். சிலர் வாடகைக்கும் கொடுப்பதாகக் கேள்வி.

கொடுக்கப்பட்ட - இல்லையில்லை தானமாக வழங்கப்பட்ட பாய்களையே யாரோவெல்லாம் கொண்டு போனபின் பல பிள்ளைகள் வெறுந்தரையில் இருப்பதை உங்களிற் பலர் அறிந்திருக்கவும் கூடும்.

இதுபோக, ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளென்றும், புதிய கற்றல் முறைகள் என்றும் அறிமுகப்படுத்திவரும் நிறுவனங்கள் தங்களுடைய திட்டங்களை மாணவர்களிடம் எடுத்துச் சொல்லக் கூடிய பௌதீக நிலைமைகள் அந்தப் பாடசாலைகளில் இருக்கிறதா என்று அவதானிப்பதில்லை. அந்த மாணவர்கள் இந்தத் திட்டங்களை உள்வாங்கக் கூடிய நிலைமையில் இருக்கிறார்களா என்றும் யோசிப்பதில்லை.

ஆனாலவை, மகிழ்ச்சிகரமான கற்பித்தல் என்றும் மாணவ விருதிக்குப் புத்தூட்டலென்றும் மெல்லக் கற்கும் மாணவர்களைத் துரிதப்படுத்தல் அல்லது ஊக்கப்படுத்தல் என்றும் பல திட்டங்களை முன்மொழிகின்றன. திட்டங்கள் நல்லனதான். நோக்கங்களும் அவை எப்படியானாலும் நல்லன தான் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் யதார்த்தத்தைக் கணக்கிலெடுக்காத எந்த உயரிய திட்டமும் பெறுமதியற்றுப் போகும் என்பதாகவே இருக்கின்றன.

இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் இந்த நிறுவனங்கள் செலவழிக்கும் காசு கொஞ்சமல்ல. மணித்தியாலக்கணக்கான விரிவுரைகளுக்கும், விரிவுரையாளர்களுக்கும் கொடுக்கும் காசும் குறைவானதல்ல.

எங்களுடைய மெய்யான நிலைமையைச் சொல்லி அந்த நிறுவனங்களுக்கு உண்மையைப் புரியவைப்பதில் இதில் எவருக்கும் ஆர்வமில்லை. சூழ்நிலையை விளங்கப்படுத்துவதற்கும் தயாரில்லை. பதிலாகவரும் பணத்தை எப்படியாவது எடுத்துக் கொண்டால் சரி என்ற எண்ணம் தான் எல்லோருக்கும் பெருகிவருகிறது. உண்மையில் சரியாகச் சிந்திக்க வேண்டிய இந்தப் படித்த தரப்பினர் இப்படி பணத்தை மட்டுமே சிந்தித்துக் குறுகிப் போவது பெருங் கவலையைத் தருகிறது.

ஆகமிஞ்சி அந்த நிறுவனங்களுடன் இந்த நிலைமைகளைச் சொல்லிக் கேட்டாலோ. அல்லது வாதாடினாலோ கிடைப்பது மிகச் சொற்பமான உதவிகள் தான் என்றும் சம்மந்தப்பட்ட கல்வித்துறையைச் சேர்ந்த சிலர் கூறுகிறார்கள்.

அதிலும் ஒரு வகை உண்மை இருப்பதையும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

சில பாடசாலைகளில் மேசை கதிரைக்குப் பதிலாக வாங்குகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த வாங்குகள் தானமாக வழங்கப்பட்டவை. அதில் நீங்கள் பார்த்தீர்களானால் மூன்று, நான்கு சிலவேளைகளில் ஐந்து நிறுவனங்களின் பெயர்கள் பொறிக்கப் பட்டிருக்கும்.

சாதாரணவாங்கைக் கொடுப்பதற்கே ஐந்து சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் இணைய வேண்டியிருக்கிறது. ஐந்து நிறுவனங்களின் நிதி தேவைப் படுகிறது. அப்படியென்றால் அவை இதற்காகக் கொடுக்கும் நிதியின் தொகையை நினைத்துப் பாருங்கள். ஆனால் அவை ஒவ்வொன்றும் தங்கள் நிறுவனப் பெயரைப் பொறிப்பதில் காட்டும் அக்கறையோ கொஞ்சமும் குறைந்ததல்ல.

சில பாடசாலைகளில் இந்த நிறுவனங்களின் இரக்கத்தால் கிணறுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு கிணற்றில் பல நிறுவனச் சுவடுகளை இங்கும் காணலாம். மலசலகூடங்களிலும் இதுதான் கதை. அவர்களில்லை என்றால் எமக்குக் கழிப்பறைகளும் இல்லை. நமது பாடும் பெரும் அந்தரம் தான் இப்படி நிறையவுண்டு.

சரி, இவைபோகட்டும். இந்தளவுக்கு எல்லோருடைய இரக்கத்தாலும் தான் நாங்கள் வாழ வேண்டிய தொரு நிலைமை வந்திருக்கிறதே அதைத்தான் கொஞ்சமாவது யோசித்துப்பாருங்கள்.

ஒரு பாடசாலை அதிபரிடம் கேட்டுப் பாருங்கள் பாடசாலைகளின் தேவைகள் பற்றியும் மாணவர் சிரமங்களைப் பற்றியும் அவர்கள் எவ்வளவைச் சொல்லக் காத்திருக்கிறார்கள் என்று அப்போது புரிந்துகொள்வீகள்.

ஏன் உங்களுடைய பிள்ளைகளிடமே அவர்கள் படிக்கும் பாடசாலையைப் பற்றிக் கேட்டுப் பாருங்கள்.

யாரையும் எதிர்பார்ப்பதை விட நாம் செய்யக் கூடியதை, அதிலும் அவசியம் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும், அப்படி அவற்றைச் செய்யவும் முடியும்.

ஆனால் ஒன்று, கல்வியமைச்சின் சுற்றுநிருப்மொன்றின் கூற்றுப்படி இலவசக் கல்விக்குப் புறம்பாக ஒரு பாடசாலை, வெளியேயிருந்து எந்த நிதியுதவியையும் பெறக் கூடாது என்ற கட்டுப்பாடுடன் தான் அந்தச் சுற்றுநிருபம் இதுவரையிலோ இனியோ இந்தப் பள்ளிகளினதும், பிள்ளைகளினதும் தேவைகளை நிறைவேற்றுமா? யாரிடமிருந்து இதற்கான பதிலை எதிர்பார்ப்பது. அப்படியென்றால் சுற்றுநிருபத்தை வைத்துக்கொண்டு தொடர்ந்து நாமும் பிள்ளைகளும் பற்றாக்குறைகளோடு பின்தங்கிகளாகத்தான் இருப்பதா?

இன்று எங்களுடைய பொருளாதார வாசல்கள் பலவாகியிருக்கின்றன. இந்த வாய்ப்பான சூழலில் முடிந்தளவுக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளை நாம் நிறைவேற்ற முயல வேண்டும்.

தளபாடங்களை நாம் செய்து கொடுக்கலாம். மலசல கூட வசதிகளைச் செய்து தரலாம். கிணறுகளைக் கட்டலாம். ஓரளவுக்கு வசதிகொண்ட கட்டடங்களைக் கூட கட்டலாம். இப்படிப்பலதைச் செய்யலாம், செய்ய வேண்டும். மெய்யான சமூக அக்கறையிருக்கு மானால் நாம் இப்படி எவ்வளவையோ இதுவரை யில் செய்திருப்போம்.

ஒரு மருத்துவ அதிகாரி ஒரு தடவை சொன்னார். 'வன்னியை எடுத்துக்கொண்டால், யுத்தகாலத்தில் வன்னியில் இருந்த சனத்தொகை மிக அதிகம். அப்போது ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் நிறைய நோயாளிகள் சிகிச்சைக்கு வருவார்கள். வருவோர்களில் பலர் விடுதியில் தங்க வேண்டிய நிலையிலிருப்போர். ஆனால் விடுதி வசதிகளோ, கட்டில்களோ போதுமானதாக இருக்கவில்லை. உண்மையில் வன்னி முழுவதற்கும் 300 - 350 வரையான கட்டில்கள் இருந்தாலே அப்போது ஓரளவுக்குச சமாளித்திருக்கலாம' என்று. நாமென்ன செய்தோம்? பாயுடன் போனோம் மருந்தெடுக்க.

நாம் எவ்வளவு காசை எப்படியெல்லாமோ செலவழித்துத் தள்ளுகிறோம். ஒரு நாள் நிகழ்வுகளுக்குக் கூட ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நிறுவனத்திலும் பெரும் செலவுகள் நடக்கின்றன.

ஆனால் எங்களுடைய சின்னஞ்சிறு பிள்ளைகள் தரையில், புழுதியில், மரநிழலில் பெரும் பாடுபட்டுப்படிப்பதை நாமேன் சிந்திக்காமல் விட்டோம்.

சில பாடசாலைகளில் மல சல கூட வசதிகளே இல்லை. அந்தப் பிள்ளைகள் தினமும் எவ்வளவு கஸ்ரப்படுகிறார்கள் என்று நினைத்துப்பாருங்கள்.

அதிபர்களைக் கேட்டால் எல்லா இடங்களுக்கும் எங்களின் தேவைகளையும் இங்கேயுள்ள குறைபாடுகளையும் எழுதிவிட்டோம் என்கிறார்கள்.

ஆனால், எங்கிருந்தும் ஒரு ஆக்கபூர்வமான ஆறுதலளிக்கும் பதில் கிடைப்பதில்லை என்று அவர்கள் சலிக்கிறார்கள்.

கல்விக்கு முதன்மை அழித்துவரும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நாமென்கிறோம் பெருமையோடு.

எங்களுடைய பிள்ளைகளின் மீது அதிகம் அக்கறையுடையவர்கள் நாங்கள்.

ஆனால், பாடசாலைகளும் பிள்ளைகளும் இப்படிப் பெரும் அவல நிலைக்குள்ளிருக்கப் பாராமுகமாக இருக்கிறோம்.

யாரோவெல்லாம் எங்களுக்கு உதவுவார்கள் என்றிருந்தால் நாங்கள் அவர்களுக்கடிமையாக இருக்க வேண்டியதுதான். அவர்கள் போடும் பிச்சைக்குக் கையேந்திக் கொண்டேயிருக்கவேண்டித்தான் வரும். எங்களுக்குதவுகின்ற பேரால் பெரும் பயன் பெறுகின்றன 'அந்த நிறுவனங்கலெல்லாம'

எரிக்கப்பட்ட நூலகத்தை வைத்தே எங்களுக்கு 'அவல்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினர்.

பதிலாக நாமொரு நூலகத்தை எல்லோரும் வியக்கும்படி நிர்மாணித்திருக்க வேண்டாமா? இன்று உலகெங்கும் ஈழத்தமிழர்கள் பரந்த அளவுக்கு வசதியுடனிருக்கிறார்கள். நிதிவளமும் உண்டு. அந்தந்த நாடுகளின் மொழி அறிவும் இருக்கிறது எம்மவருக்கு எல்லோரும் இணைந்து எல்லா நாடுகளின் அறிவுச் செல்வத்தையும் ஒருங்கிணைத்து ஒரு நூலகத்தை நிர்மாணித்திருக்கலாமே. அது முழுமையாக உடனடியாகச் சாத்தியமாகாது விட்டாலும் தொடர்ந்து செயற்பட்டு அதனை முழுமைப்படுத்தியிருக்கலாமே. சிங்களவர்கள் நூலகத்தை வைத்து எமக்கு அரசியல் நடத்த முடியாமல் போயிருக்கும்.

இப்படி இப்படியே நாமே செய்யக் கூடியவற்றைச் செய்யத்தொடங்கலாம். வீணே பெறுமதியற்றுச் செலவழியும் காசைத் திரட்டினாலே போதும் நமது துயரும் இழிவும் நீங்குமே.

இதற்கொரு விழிப்புணர்வு வேண்டும். நல்மனது வேண்டும். ஒரு சமூக அக்கறையுடைய செயற்களம் விரியவேண்டும்.

முன்னர் எங்களிடம் இப்படியானதொரு அமைப்புமுறை இருந்ததே. சிரமதானம் என்றும் சன சமூக நிலையங்களூடான பணியென்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பங்களிப்பு என்றும் ஊர்த்தொண்டு என்றும் பல காரியங்கள் நடந்தனவே.

இன்றேன் எல்லாமேயற்றுப் போயின? நாமேன் நலியத்தொடங்கினோம்? நல்வழிகள் பலவும் இழந்தோம்? நமக்கென்ன நடந்தது? ■

எவரால் மனித இனத்துக்கு நன்மை ஏற்படுகிறதோ, அவரே மனிதரில் சிறந்தவர். - முகம்மது நபிகள்

# நறுக்கென...

## தமிழ்க் குழுவினரை பாதுகாக்க... சந்திரிகாவின் தலையீடு.....



தமிழ்க் குழுக்கள் மீதான சனாதிபதியின் அக்கறையும், அபிமானமும் சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல.

தமிழ்க் குழுக்களை சனாதிபதி பாராட்டிச் சீராட்டுவதும் அவர்களுக்குச் சகல வளங்களையும் வழங்கி பாதுகாத்து பராமரிப்பதும் அவரது முழுமையான ஆட்சிக்காலத்தில் அவர்கள் குறுநில மன்னர்கள் போல வாழவழிவகுத்தமையும் வரலாற்றுப் பதிவுகளே...

கொத்தடிமைத் தனத்தினதும், கோடரிக்காம்புக் கொள்கைகளினதும் அண்மைக்கால அடையாளங்களாக இருந்த துணைப்படைத் தமிழ்க் குழுக்கள் தம்மை உறுதியாக 'முத்திரை' பதித்துக்கொள்வதற்கான வசதிகளை 'சந்திரிகா'வே ஏற்படுத்திக்கொடுத்திருந்தார்.

பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் 'ஆமாம்சாமி' போட்டுக்கொண்டிருந்தவர்கள் சந்திரிகா ஆட்சியில் அமைச்சர்களாக்கப்பட்டு ஆசீர்வாதம் பெற்று அதிகார பீடத்தில் கொலுவேற்றிவைக்கப்பட்டனர்.

அக்காலத்தில் அவர்கள் எந்தளவுக்கு நன்றியுடனும், எஜமானி விசுவாசத்துடனும் நடந்துகொண்டார்கள் என்பதனை சந்திரிகா நன்றாகவே அறிவார்.

தமிழ் மக்களை ஈவிரக்கமின்றி இராணுவ வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டு கொன்றழித்த 'சந்திரிகா'வின் பேரினவாத நடவடிக்கைகளுக்கு துணையாகத் 'தாளம்'போட்டு வயிறுவளர்த்த தமிழ்க்குழுக்கள் மீது 'அக்கறை' கொள்ள அநுதாபம் காட்ட சந்திரிகா முனைவது ஒன்றும் அதிசயமல்ல...

சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து கொலை செய்யப்பட்டுவருவது அம்மணிக்குத் தாங்கமுடியாத துயரைக் கொடுத்துள்ளதாம். அதனால் அதில் தான் தலையிட வேண்டிய கட்டம் வந்துள்ளதாம்... சனநாயக வழிக்குத் திரும்பி தங்களுக்குத் துணையாக இயங்கி, தமிழின அழிப்பிற்கு படையாகச்செயல்பட்டவர்களை முப்படைத்தளபதி என்றவகையில் அவர்பாதுகாக்கவேண்டிய கடமையை உணர்ந்து... அவர்களுக்கு மீண்டும் ஆயுதங்களைக் கொடுக்க வேண்டும்' என்றும் கூறியுள்ளார்.

ஆக அதிகாரங்களை மெல்மெல்ல 'பாதுகாப்பு' மட்டத்தில் புடுங்கிக் கொள்ள சந்திரிகா முனைகின்றார் என்பது தெளிவாகிறது...

தமிழர்களை கொன்றழிக்க 'சமாதான யுத்தம்' நடத்தியவர்... தமிழ்குழுக்களைப் பாதுகாக்க 'யுத்த சந்நதம்' கொள்ளத்தொடங்கியுள்ளார்...

தமிழ்க்குழுக்களில் தலைபோகிற வேளையில், தான் தலையிடநேரம் வந்துள்ளதாக சந்திரிகா கூறுவதானது அவர் எதிர்பார்த்திருந்த சில - பொருத்தமான - 'வேளை'கள் நெருங்கிக் கொண்டிருப்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது போலுள்ளது....

பாதுகாப்பு அமைச்சர் தனது பதவியை பாதுகாப்பாக வைத்துக்கொள்வாரா? அல்லது பறி கொடுத்து விடுவாரா? நிறைவேற்று அதிகார வலுவே அதைத் தீர்மானிக்கும் சக்தி....

## நாம் 'ரெடி'....நீங்கள் 'ரெடி'யா?



இப்போது பொ.ஐ.முன்னணியில் அதிகம் பேசுபவர் சரத் அமுனுகமதான்.

சிலவேளைகளில் பொ.ஐ.முன்னணிக்கு தலைவி சந்திரிகாவா, அல்லது (தலைவர்) சரத் அமுனுகமவா என்று சந்தேகம் கொள்ளுமளவிற்கு அன்னாரின் அறிவிப்புகளும், அறிக்கைகளும் அமைந்துவிடுவதும் உண்டு....

சந்திரிகாவும் அவரை அவர்போக்கில் உளற விட்டுவிட்டார் போன்றே உள்ளது....

ஆனால் அவரின் அரசியல் எதிர்வுகூறல்கள் தான் அரசியல் கோமாளித்தனங்களின் அதியுச்ச பிரகடனங்களாக உள்ளன.

இந்தவகையில் அவர் பலவேளைகளில் சந்திரிகாவின் சகோதர ஆலோசகரான - அந்த 'மகாகோமாளி' அநுராவையே திகைக்கவைத்துள்ளார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்....

அண்மையில் அவர் 'யுத்தம்' மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறு குறைவு.... ஆனால் இராணுவத்தை தயாராகவைத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளமையானது....

'யுத்தத்திற்கு தயாராக இரு' என்று அரசுக்கு அறிவுறுத்துவதாக இல்லையா?

சமாதான நகர்வுகளை வலுப்படுத்த எந்த யோசனையையும் தெரிவிக்கமுன்வராத அமுனுகம, யுத்தத்திற்கு தயாராக இருங்கள் எனக்கூறுவதானது, சிறிலங்காவின் ஆளும் 'அரசு' ஒரு போதுமே சமாதானத்திற்கு உள்ளார்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படமாட்டாது.... ஆகவே சமாதானத்திற்கான சாத்தியப்பாடு மிகவும் குறைவு.... என்ற கருத்தை மறுதலையாக உணர்த்துவதாகத்தானே தெரிகிறது.

அமுனுகம முன்னர் ஐ.தே,கட்சியில் இருந்தவர். ரணிலைப் பற்றி நன்கு அறிந்தவர், இப்போது சந்திரிகாவுடன் இருப்பவர். அவரின் மனோநிலையையும் நன்கு புரிந்து கொண்டவர். ஆக அவர் இரு தரப்பினருமே சமாதானத்தை கொண்டுவரப்போவதில்லை என்பதையும் தெரிந்து கொண்டவர்...

அதனால் தான் யுத்தத்திற்கு தயாராக இருக்கச் சொல்லிக் கூறுகிறார்... அது சரி.... மிஸ்டர் அமுனுகம... தங்களின் இந்த அறிவிப்பு விடுதலைப்புலிகளையும் எச்சரிக்கையுணர்வுடன் இருக்க வேண்டிய நிலைக்கு - அதாவது யுத்தத்திற்கு தயாராக இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளிவிடும். என்பதையும் தமிழ் மக்களையும் சமாதானம் மீதான நம்பிக்கையை இழக்க வைத்துவிடும் என்பதையும் நீங்கள் அறிவீர்களா....?

ஒன்றை மட்டும் அறிந்து கொள்ளுங்கள் -

சமாதானமா? யுத்தமா? - என்று தமிழ் மக்களை நோக்கிச் சவால் விட்ட காலம் மலையேறி விட்டது.... இப்பொழுது யுத்தமா? சமாதானமா? என்ற கேள்வியை தங்களுக்குள் தாங்களே கேட்டு முடிவெடுக்க வேண்டியது பேரினவாதிகள் மட்டுமே....

இரண்டையும் அதற்குரிய வழிமுறைகளில் எதிர் கொள்ளத் தமிழ் மக்கள் தயாராகவே இருக்கிறார்கள்.

## போரை வலிந்து உருவாக்கும் சிறிலங்காக் கடற்படை



மீண்டும்.... சமாதானத்தை நிர்மூலமாக்கும் - 'போரை' வலிந்து உருவாக்க முயலும் செயற்பாட்டை கடற்படை செய்துள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் சரக்குக்கப்பல் ஒன்றை மீண்டும் தாக்கியழித்ததன் மூலம் சர்வதேசக் கடற்போக்குவரத்து விதிமுறைகளை மீறியதுடன் போர்நிறுத்த சூழலையும் அவமதித்து நிராகரித்துள்ளது.

எப்பொழுதும் பொய்களையும், புனைகதைகளையும் தனது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கும் காரணங்களாகக் கூறும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சும் - அரச ஊடகங்களும் இந்தச் சம்பவம் குறித்தும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற கதைவிட்டு வருகிறார்கள்.

போர் நிறுத்த உடன்பாடு என்பது எல்லா அநியாயங்களையும் பார்த்துக் கொண்டு மௌனமாக இரு என்ற விதியெதனையும் கொண்டிருக்கவில்லை என்பதைச் சிறிலங்கா கடற்படை அறியவேண்டியது அவசியம்.

அதிலும் சரணடைந்த விடுதலைப்புலிகளைத் தாம் கைதுசெய்யவில்லை எனக் கைவிரிப்பது போரை வலிந்து ஆரம்பிக்க வைக்கும் ஒரு சதியாகவே உணரக்கூடியதாக உள்ளநிலையில் - தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுவரும் தரப்பினர் மௌனம் காப்பதும், பொறுமையை நீடிப்பதும், அமைதிநிலையை குழம்பக்கூடாது என்ற அக்கறையினால் மட்டுமேயன்றி வேறெதனாலுமல்ல...

எந்தக் கப்பலையும் சோதிப்பதற்கு கடற்படைக்கு அதிகாரமுண்டு எனக் கூறும் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன எந்தக் கப்பலையும் 'கண்காணிப்புக் குழுவினரை' அழைத்து அவர்கள் முன்னிலையில் தான் சோதனைகளை நடத்த வேண்டும் என்ற போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகளையும், சமாதானத்தின் மீதான அக்கறையுடன் கடற்படை கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் கூட உணர்ந்து கொள்வதும் அவசியமாகும்.

சோதனையிட உரிமையுண்டே தவிர அதனைத் தாக்கி அழிக்கும் உரிமையை போர்நிறுத்த உடன்பாடு கடற்படைக்கு வழங்கவில்லை.

புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவரும் எந்தக்கப்பலையும் தாக்கியழிக்குமாறு கடற்படைக்கு தான் பணித்துள்ளதாகக் கூறும் மாரப்பன, அந்தக் கப்பலில் ஆயுதங்கள் தான் இருந்தது என்பதை நிரூபித்து விட்டே அதனைத் தாக்கியழிக்க உத்தரவிட்டிருக்க வேண்டும். தனது பதவியைப் பாதுகாக்க பாதுகாப்பு அமைச்சர் எதனை வேண்டுமானாலும் கூறலாம்.

ஆனால் பதவியைப் பாதுகாக்க முனைந்து அநியாயத்திற்கு நியாயம் கற்பிக்க முனைவது - தேசத்தைப் பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கை என அவர் நினைப்பாரேயானால் அது ஒரு 'பாதுகாப்பான' விவகாரமாக இருக்காது.

கடற்படை போரை வலிந்து வரவேற்கும் தீவிர செயற்பாட்டில் இறங்கியிருப்பது தெளிவாகி வருகிறது.

செங்குட்டுவன்

## மதலவடிமயிலர்



**செய்தி: சமாதான முயற்சியில் தடங்கல் ஏற்பட்டதால் சர்வதேச ஆயுத தரகர்கள் கடும் உற்சாகம்....**

*மயிலர் :- ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் தான் பாருங்கோ... தடங்கலுக்கே இந்த உற்சாகம் எண்டால் சமாதான முயற்சிகள் தோல்வி கண்டால்.... கேட்கவே வேண்டாம்.... சண்டையிலையும் சாவிலையும் சந்தோசம் அநுபவிக்க நினைக்கிற கூட்டமும் இருக்கத்தான் செய்யும்...அடுத்தவன் உயிருக்கு 'உலை' வைச்சுக் கொண்டே தன்ரை வீட்டு 'உலை'யை ஏற்ற நினைக்கிறவையை என்னெண்டு சொல்வதாம்?*

**செய்தி: - தென்பகுதி மக்களுக்கு புலிகள் நிவாரணம் வழங்கி இனவாதிகளைத் தலைகுனிய வைத்துவிட்டனர்.**

*மயிலர்:- முந்தி இதே இனவாதிகள் தானே இடம் பெயர்ந்த தமிழ் அகதிமக்களின் நிவாரணத்தை வெட்டி சாதனைபுரிந்தவர்கள். அது சரி தன்மானம் உள்ளவன் தான் அவமானத்தால் தலைகுனிவான்.... இனவாதிகளுக்கு ஏது தன்மானம்.... அவர்கள் அவமானத்தால் கொதிப்படைவார்களேயன்றி....பிழை உணரமாட்டார்கள் பாருங்கோ...*

**செய்தி:- இலங்கை - இந்திய கடற்பகுதியில் போராளிகளின் நடமாட்டம் இல்லை... இந்திய கடலோரகாவற்படை பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு....**

*மயிலர்:- இதைப்போய் அந்த அலம்பல் சுப்பிரமணிய(ஆ)சாமியின் காதில் தான் ஓங்கிக் கத்திச் சொல்ல வேண்டும். பணிப்பாளர் நாயகம் அவர்களே...அவர் தான் கடலில் மட்டுமல்ல அவற்றை வீட்டுக் கொல்லைப் புறத்திலும் போராளிகள்... அதாவது புலிகள் நடமாட்டம் அதிகரித்துவிட்டது என்று புலம்பிக் கொண்டே அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார் பாருங்கோ...*

**செய்தி:- கடற்படை காட்டிய இடத்தில் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கான ஆதாரம் இல்லை.**

*மயிலர்:- அநியாயத்தை நியாயப்படுத்த 'ஆதாரம்' காட்டுறவையின்ரை கதை இப்படி அதலபாதாளத்தை நோக்கியதாகத்தான் இருக்கும் பாருங்கோ.... சொல்லுறவன் சொன்னா கேட்கிறவனுக்கும், நம்புறவனுக்கும் மதியென்ன பாருங்கோ...*

# மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள்

# கனவுகளைத் தொலைத்தவர்கள்!



பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இலங்கைப்பெண்கள், கைகளில் காசுடன் நாடு திரும்புகிறார்களோ என்னவோ, கர்ப்பிணிகளாக அநேகமானோர் திரும்புகின்றனர்.

இவர்களுக்கு உதவுமுகமாக கொழும்பு விமான நிலையத்திற்கு அருகேயே விடுதியொன்றும் இயங்குகின்றது. வீட்டிற்குத் தெரியாமல் குழந்தைகளைப் பெற்றெடுக்க இவ்விடுதி உதவுகிறது.

சுமார் ஏழு இலட்சம் இலங்கைப் பெண்கள் வெளிநாடுகளில் பணிப் பெண்களாக பணிபுரிகின்றனர். இவர்கள் வறுமை காரணமாகவே வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள். சிங்கள, முஸ்லிம் பெண்களே இவர்களில் அதிகமானோர்.

சமீபகாலமாக தமிழ் பெண்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் படையெடுக்க ஆரம்பித்து விட்டனரோ என சந்தேகிக்கும் அளவிற்கு கொழும்பிலுள்ள 'லொட்ஜ்'கள் காணப்படுகின்றன.

ஏழெட்டுப்பெண்களுடன் ஒரு ஆண் ஒரே அறையில் தங்கியிருப்பதைக்கண்டு ஆரம்பத்தில் நான் என்னவென்று புரியாமல் விழித்ததுண்டு. விசாரித்த பின் தான் விடயம் புரிந்தது. வெளியூர்களில் இயங்கும் சப்ஏஜெண்டுகள் இவ்வாறு பெண்களைத்திரட்டிக் கொண்டு வருகிறார்கள்.

இப்போது, தெற்கில் ஏராளமான வெளிநாட்டுத்தொழில் ஏஜெண்டுகள் தோன்றியுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்பும் தொழிலே இப்போது அமோகமாக நடக்கின்றன. பத்திரிகைகளில் இவற்றின் விளம்பரங்களை இன்று அதிகம் பார்க்க முடிகிறது. ஏஜெண்சிகளிடையே போட்டிகளும் அதிகம்.

“கட்டணம் அறவிடப் படமாட்டாது. பாஸ்போட்டுடன் வந்தால் உடன் பயணம்”, என ஒரு ஏஜெண்சி விளம்பரப்படுத்தும். இன்னொன்று “பாஸ்போட் கூடத் தேவையில்லை அதுவும் இலவசமாகப் பெற்றுத்தரப்படும்” எனக் கூறும்.

இந்த நிறுவனங்களுக்கு எல்லா ஊர்களிலும் தரகர்கள் உள்ளனர். அதாவது சப் ஏஜெண்டுகள். இவர்களுக்கு தொழில் அமோகமாக நடக்கிறது. ஆனால் இவர்களை நம்பிச்செல்லும் பெண்களின் கதைதான் சோகமாக இருக்கிறது.

கொழும்பிற்குச் செல்கையில் நான் தங்கியிருக்கும் அந்த லொட்ஜிலும் சப் ஏஜெண்ட் ஒருவர் அடிக்கடி பெண்களுடன் வருவார். அவர் கூட்டிக்கொண்டு வருபவர்கள் அதிகம் தமிழ்ப்பெண்கள். படிப்பறிவு குறைந்த, வறுமையுற்ற கிராமத்துப்பெண்களாகவே இப்பெண்களின் தோற்றம் காணப்படுவதுண்டு. அந்த நபர் அழைத்து வரும் பெண்கள் யாவரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறியமுடிந்தது. வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் யுவதிகளே கணிசமான அளவு இன்று மத்திய கிழக்குநாடுகளுக்குச் செல்ல வருகின்றனர் என்பதை அவதானிக்க முடிகிறது. எல்லோரும் இளம்பெண்கள். பதினாறு வயதிற்கும், இருபத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டோர். ஆனால், சிங்கள, முஸ்லிம் யுவதிகளில் அதிகமானோர் திருமணம் செய்தவர்களே வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

வடக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் இருந்து புலம் பெயர்ந்த பெண்களை எடுத்துக் கொண்டால், தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் எவரும் இல்லை என்று சொல்லுமளவிற்கு மிகக்குறைவு. இங்கிருந்து ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்ற ஆண்களுக்கு மணப் பெண்களாகவே இவர்கள் சென்றனர்; செல்கின்றனர். அங்கு சென்ற பின்பு பொருளாதார தேவைகளின் நிமித்தம் தொழில் புரிகின்றனர். குடாநாட்டிலிருந்து மத்தியகிழக்கு நாடுகளுக்கு தொழில் புரியச்சென்றவர்கள் மிகவும் குறைவு எனலாம்.

வவுனியா கிராமங்களிலிருந்தும், கிழக்கிலங்கை கிராமங்களிருந்தும், மலையகப் பகுதிகளிலிருந்தும் வறுமை காரணமாக குறிப்பிடக்கூடிய அளவு பெண்கள் இன்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றனர். தாம் எதிர்கொள்ளப்போகும் ஆபத்துக்களை அறியாமலேயே பல பெண்

**வேனிலன்**

கள் செல்கின்றனர். காசோடு திரும்பிவரலாம், வாழ்வின் வறுமைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்ற கனவுளோடு செல்லும் இந்த அபலைப் பெண்களில் சிலர் இரண்டு வருட ஒப்பந்தத்தில் சென்று இரண்டு வாரங்களிலேயே திரும்பி வரும் நிலைமைகளும் ஏற்படுகின்றன.

அண்மையில் வவுனியாவில் இருந்து டுபாய் நாட்டிற்கு பணிப் பெண்ணாக சென்ற யுவதி ஒருவர் ஒரு வாரத்திலேயே திரும்பி வந்து விட்டார். தான் வேலைக்கமர்ந்த வீட்டு உரிமையாளர்களின் இம்சை தாங்க முடியாமல் அவர் இம்முடிவை எடுக்கவேண்டி வந்தது. திரும்பி வந்ததும், கொழும்பு எஜெண்சி அப்பெண்ணை தடுத்து வைத்துவிட்டது. டுபாய் அனுப்புவதற்கு தமக்கேற்பட்ட செலவை செலுத்தினாலேயே பெண்ணை விட முடியும் என அப்பெண்ணின் உறவினரை மிரட்டத்தொடங்கியது. குறிப்பிட்ட அப்பணத்தைச் செலுத்திய பின்னரே அப்பெண்ணை மீட்க முடிந்தது.

பதினாறு வயது கூட பூர்த்தியாகாத பெண்கள் கூட போலியான பிறப்புப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய கிழக்கிற்கு அனுப்பப் படுகின்றனர். அப்படியான சிறுமியொருத்தியை நான் சந்திக்க நேர்ந்த போது, அவள் வெளிநாடு செல்ல வந்த கதையை அறியவிரும்பினேன்.

தான் குடும்பத்தில் மூத்தபிள்ளை எனவும், தந்தை இறந்தபின் தாயார் இன்னொரு திருமணம் முடித்ததாகவும், தனது சித்தப்பாவே அதாவது தாயாரின் இரண்டாவது கணவனே தன்னை வெளிநாடு அனுப்ப சப் ஏஜெண்டிடம் ஒப்படைத்ததாக அவள் கூறினாள். விமானமேறுவதற்கு முதல் நாள் அவள் அழுது அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டாள்.

“பாருங்கோ இதுகளை கூட்டிக் கொண்டு வந்து ஏஜெண்சி செலவில 'ரிக்கட்டிங்' எல்லாம் செய்த பிறகு ஏலாதெண்டு சொல்லி அடம் பிடிக்குதுகள்” என்று அலுத்துக் கொண்ட சப்ஏஜெண்ட் ஒருவாறாக அந்தச்சிறுமியை விமானமேற்றி அனுப்பிவிட்டார்.

இவ்வாறு பெற்றோரின் பொறுப்பின்மைகளாலும் வறுமை காரணமாகவும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் புரியச்செல்லும் இளம்பெண்கள் அங்குள்ள தங்கள் எஜமானர்களினாலேயே பாலியல் வக்கிரங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். வயது வித்தியாசங்களின்றி எஜமானன், அவனது மகன், உறவினன் என அனைவராலும் பாலியல் வன்முறைகளுக்கு இலக்காகும் பெண்களின் கதைகளை பத்திரிகைச்செய்திகளில் தினசரி பார்க்க முடிகிறது.

இவைபற்றி நன்கு உணர்ந்திருந்தும், இலங்கை அரசாங்கம் இவ்வாறான தவறுகளை தவிர்க்க நடவடிக்கை எடுப்பதாக அடிக்கடி அறிக்கைகள் மூலம் அறிவிக்கின்றதே தவிர உறுதியான எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

சில தினங்களின் முன்பு கொழும்பு சென்றிருந்தபோது லொட்ஜில் ஒரு பெண்ணைக் கண்டேன். கையில் குழந்தையுடன் வெளிநாடு செல்ல வந்துள்ளதாக அறிய முடிந்தது. காதிலோ கழுத்திலோ எந்தவொரு நகையும் கிடையாது. விரக்தியுற்ற தோற்றம். மற்றப்பெண்களுடன் அவள் கதைத்துக்கொண்டிருந்ததைக் கேட்க முடிந்தது.

“நான் சவுதியிலிருந்து வந்து ஏழு மாதம் தான் ஆகிறது. திரும்பவும் போகப்போறன்”

“உங்கள் கணவரெங்கே”

“அவரைக் காணேல்லை”

“சொந்தக்காரர் ஒருவரும் இல்லையே”

“எல்லாரும் கைவிட்டிட்டினம்” என்ர நகைகளைக்கூட பறிச்சுப் போட்டினம்.

“பிள்ளைக்கு எத்தனை வயது?”

“நான்கு மாதம்தானாகிறது. இதைக்கொண்டு போகமுடியாது. யாரிட்டையும் கொடுத்திட்டுத்தான் போகவேணும்”

உரையாடலைக் கேட்டதும் எனக்குப் புரியத்தொடங்கியது. கட்டுரையின் தொடக்கத்தில் சொன்ன விடயம்தான். அந்தப் பெண்ணை விடவும் அந்தப் பிஞ்சுக் குழந்தையை நினைக்க மனதிற்குள் ஏதோ செய்தது. அந்தப் பிஞ்சு யாரிடம் போய்ச்சேரப் போகிறதோ... யாரை அம்மா அப்பா என அழைக்கப்போகிறதோ...அதன் எதிர்காலம் எவ்வாறிருக்கப் போகிறதோ.. கற்பனை செய்ய மனம் வலித்தது.

எனது வந்த அலுவல்களைப் பார்க்க வெளியே புறப்படும் போது அக்குழந்தையை கண்ணுற்றேன். தனது எதிர்காலம் பற்றி எதுவுமே அறியாத அந்தப்பிஞ்சு தாயின் மடியில் கைகளை ஆட்டியபடி மகிழ்ச்சியாக சிரித்தபடி இருந்தது. •

---

**படித்ததில் பிடித்தது**

## ஊருக்குப் போயிருந்தேன்

என்
பாசத்துக்குரிய
பழைய முகங்களே

உங்களுக்கு நான்
அந்நியமில்லை

என்
வெள்ளைச் சட்டை
உங்களுக்கு
விரோதியில்லை

புகழ் என்னும்
போதைவஸ்து
உங்கள்
பெயர்களைக் கூடவா
மறக்கடித்து விடும்?

எனக்குத் தெரியும்
பொருளும் தலைமுடியும்
ஒரே ஜாதிதான்
இரண்டும்
உதிர்ந்து விடுவது நிச்சயம்
அன்றி
குறைந்து விடுவது சத்தியம்
உங்கள்
வார்த்தைகளில் வீசும்
வட்டார வாசனை
நுகர வந்தேன்

நான்
பழகிய பழைய கண்களைப்
பார்க்க வந்தேன்
நான் என்ன மழையா?
ஏன் ஒதுங்குகிறீர்கள்?
இதற்காகவா வந்தேன்
இவ்வளவு தூரம்?

என் ஏமாற்றத்தின் நீளம்
முந்நூறு மைலா?

என் உடம்பில் இருக்கும்
இரத்தம் தான் புதிது
இருதயம் பழசுதான்.

உங்கள்
காய்த்துப் போன
கைகளின் ஸ்பரிசம்
என் உள்ளங்கைகளுக்கு
ஞாபகம் இருக்கிறது

உங்கள்
கிண்டலில் இருக்கும்
மண்ணின் மணம்
எப்போதும் பிடிக்கும்
எனக்கு

என்ன இது?
இந்தச் சின்ன வருஷங்களின்
இடைவெளியில்
காலம் - தன்
முத்திரை குத்தியே
உங்களைக்
கிழித்து விட்டதே

உங்களில் சிலருக்கு
நரைத்து விட்டதே

வீடு பழுதானதென்று
வெள்ளையடிக்கிறதோ
முதுமை?

அந்தக்
கண்களில் மட்டும்
நான்
பார்த்த ஏழ்மையின்
பழையரேகைகள்

எந்தச் சூரியோதயமும்
உங்கள்
வறுமை இருட்டின்
வேர்களை இன்னும்
விசாரிக்கவில்லை.

எங்கே?
உன்னைத் தன்
தோள் நாற்காலியில்
தூக்கிக் கொண்டு
அத்தனை சினிமாவுக்கும்
அழைத்துச் செல்வானே

எங்கே
அந்த
ஆதிதிராவிட அண்ணன்.
எனக்குப்
பிரியமாக் கடன் கொடுக்கும்
பெட்டிக் கடைக் கிழவருக்கு
மரணமா?

அந்த வேப்பமரங்களை ஏன்
வெட்டி விட்டீர்கள்?

என்
பள்ளித் தோழர்களுக்குச்
சொல்லிவிட முடியுமா?

இது ஒரு
புது மனோநிலை

சந்தோஷமும் துக்கமும்
சரிவிகிதத்தில்

பேசுங்கள்
பேசுங்கள்

என் கிளைகள்
வெளியே விரிந்து விட்டாலும்
என் வேர்கள் வசிப்பது
இங்கேதான்
இங்கேதான்.

**வைரமுத்து**

---

இதயக் குமுறலை மூழ்கடிக்கும் கலையாக, இதமான சிரிப்பு அமைகிறது பெரும்பாலும். – ஹார்லிகாலெரிட்ஜ்




# தாமரைச்செல்வியின் பச்சை வயல் கனவு

நீண்டநாட்களின பின் காலை நேர வானத்தை ரசனையுடன் பார்த்தார் சிவப்பிரகாசம். சில நாட்கள் சுகயீனமாய் இருந்த உடல் இன்று கொஞ்சம் தென்பாய் இருக்கிறது. படுக்கையில் படுத்திருந்தபடியே எதிரே பார்த்தார். கண்ணுக்கெட்டியவரை பரந்து கிடந்த நீல வானம் தூரத்தே பற்றைகளும் உயர்ந்த மரங்களும்... இடையே ஆல மரக் கிளைகளுக்கூடாக தெரியும் பொட்டுப் பொட்டான வெளிகள்.

அதன் வலது புறக்காணி சிறுபோக வயல் விதைப்புக்காக தயாராகி கொண்டிருந்தது. நேற்றும் இரண்டு பேர் வரம்பு செதுக்கிக்கொண்டிருந்தார்கள். சித்திரை முடிய வைகாசியில் விதைப்புத் தொடங்கி விடும்.

இந்தக்கரும்புத் தோட்டம், ஸ்கந்தபுரம் பகுதி வயல்களுக்கு அக்கராயன் குளத்திலிருந்து தண்ணீர் வருகிறது. நெல் விதைத்து ஒரு மாதத்திலேயே பச்சை ஆடையை போர்த்தியது போல நிலம் பரந்து கிடக்கும். அதைப் பார்க்கும் போது மனதுக்குள் ஏற்படும் பரவசம் தனியானது.

அது யாருடைய வயலோ...
எவருடைய பயிரோ...

ஆனாலும் நெஞ்சுக்கு நெருக்கமான உணர்வை அந்தப்பச்சை நிறம் அவருக்குள் ஏற்படுத்தும். கடந்த ஆறு வருடங்களாக இந்த வீட்டு விறாந்தையில் படுத்திருந்தபடியே அந்தப் பயிர்களின் வளர்ச்சியைப் பார்த்துக்கொண்டிருப்பார். உரத்தடை, மருந்துத்தடை என்று அரசு விதித்திருந்த அத்தனை தடைகளையும் தாண்டி பயிர்கள் வளர்ந்து நெற்கதிர்கள் தள்ளிநிற்கும்.

உடம்பு ஆரோக்கியமாய் இருந்த நாட்களில் மாலை நேரங்களில் தெருக்கரை தாண்டி ஆலமரம் சுற்றி அந்த வயற் கரையில் நடந்து திரிந்திருக்கிறார். அந்த பச்சை நிற விரிப்பைப்பார்க்கும் போதெல்லாம் அவர் மனம் விம்மித்தணியும். ஊரில் உள்ள தனது வயற்காணிகள் நினைவுக்கு வரும். பொன்னாய் விளைந்த மண் முள்ளுப் படர்ந்து பற்றை பிடித்து காடு பற்றிக் கிடக்குமே என்று மனம் ஏங்கித்தவிக்கும்.

இப்போது ஆறேழு மாதங்களாக நோயின் வேகம் அவரைப்படுக்கையில் விழுத்திவிட்டது. படுக்கையில் இருந்தாலும் பார்வை மட்டும் தூர அந்தப்பச்சை நிறத்துக்காக துழாவும்.

பார்வையால் மட்டுமே பார்க்கமுடிந்த பச்சை நிறம்.

ஆறு வருடங்களாகிவிட்டது.

ஆனையிறவு முகாமில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்ட இராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வீடுவாசல் விட்டு ஓடி வந்து ஆறு வருடங்களாகிவிட்டது.

இடம்பெயர்ந்து ஓடி வந்த பிறகு எல்லாமே வெறுமையாகிவிட்டது போன்ற உணர்வு. இப்போது ஆனையிறவில் இருந்து இராணுவம் துரத்தப்பட்டுவிட்டது. சமீப நாட்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் ஊர் திரும்பும் நம்பிக்கையை உறுதிப்படுத்தின. கனவு தானோ என்று நினைக்கும் அளவுக்கு ஒரு நம்பமுடியாத நிகழ்வாக A-9 சாலை இன்று திறக்கப்படவிருக்கிறது எத்தனை மாற்றம்.

வானில் இரைச்சலும் எறிகணை வெடிக்கும் அதிர்வுகளும் சூட்டுச்சத்தங்களும் இல்லாத அமைதி.

அவர் படுக்கையில் படுத்திருந்தபடியே தலையை மட்டும் மறுபக்கம் திருப்பிப் பார்த்தார். கிடுகளினால் வேய்ந்த நீளமான வீடு. மண் சுவர்பாதி எழுப்பி மீதிக்கு உரப்பைகளை விரித்து அடித்து அறைகளாக்கப்பட்டிருந்தது. முன்புற விறாந்தையின் இடது பக்கம் அவரது கட்டில். அரைச் சுவருக்கு மேலாக வானத்தையும் தூரத் தெரியும் பற்றைகளையும் ஆலமரத்தையும் அடுத்துள்ள வயலையும் அவரால் பார்க்க முடிந்தது. புழுதி பரவநீண்டு கிடக்கும் தெருவையும் அதில் பயணிக்கும் மனிதர்களையும் கூட பார்க்கமுடிந்தது. படுக்கையில் கிடக்க வேண்டிய நிலை ஏற்படுத்தும் துயரை மறக்க இந்தக் காட்சிகள் தான் அவருக்கு உதவியாய் இருக்கின்றன.



அவரை அன்போடு கவனித்துக் கொள்ளும் குடும்பத்தவர் அவருக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்று அவரைச் சுற்றிலும் சத்தமும் சந்தடியும் தான். மூன்று குடும்பங்களும் வசிக்கக்கூடிய வீடாகவே அவர்கள் போட்டுக் கொண்டார்கள். 96 யூலை 26 இல் கிராமமே கதறிக்கொண்டு ஓடிவந்ததை இன்னமும் மறக்கமுடியவில்லை. ஆனையிறவு இராணுவ முகாமுக்கு அருகே அவர்களது கிராமம் இருந்ததனால் அவர்கள் பட்டதுயரம் கொஞ்சமல்ல.

83 ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த துயரது. காணி பூமி கல்வீடு வளவு, மா, பலா, தென்னஞ்சோலை என்று வாழ்ந்த அரச வாழ்வு எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து யூலை 26 உடன் முற்றாக அழிந்து போனது. தன் உழைப்பால் மட்டுமே உயர்ந்த வாழ்வையும் செல்வாக்கையும் பெற்றுக் கொண்ட சிவப்பிரகாசம் என்ற மனிதரின் கம்பீரமான வாழ்வும் சரிந்து போனது.15 மைல் ஓடி வந்து ஸ்கந்தபுரத்தில் நின்று மூச்சு விட்டார்கள். ஊரை விட்டு ஓடி வந்ததில் உடைந்த மனது மீண்டும் எழச் சிரமப்பட்டது.

இன்றைக்கு...

மழையின் மெல்லிய சாரலின் இனிமையாய் ஊர் திரும்பும் நம்பிக்கை.இன்றைக்குA-9 பாதை திறக்கப்பட இருக்கிறது. மனதுக்குள் பரபரப்பு வானொலிச் செய்தி கேட்க வேண்டும். வானொலி சொல்லும் செய்திகளை உடனுக்குடன் அவரின் காதில் சத்தமாகச் சொல்லிப்புரிய வைப்பதில் சாந்தன் கெட்டிக்காரன்.

வாசல் பக்கம் பார்வையைத் திருப்பினார்.

சாந்தன் படலையைத்திறந்து சைக்கிளில் இரண்டு பெரிய தண்ணீர் கான்களைக்கட்டிக் கொண்டு உள்ளே வந்தான்.

குடிப்பதற்கான நல்ல தண்ணீரை கரும்புத்தோட்டத்துக் கிணற்றில் அள்ளி வருகிறான். 20 வயதுப்பிள்ளை இப்படித் தண்ணீர் சுமந்து வருவதில் வெட்கப்பட மாட்டான். சாந்தன் மீது அவருக்கு எப்போதுமே வாஞ்சை அதிகம். முகத்தின் சாயலில், சில செயல்களில் எப்போதோ ஒரு பிறவியாகத் தோன்றும். அவருடைய இருபது வயது இளமைக்காலத்தை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பவன் தன் மகனை விட இந்தப் பேரனே தன் மனதுக்கு நெருக்கமானவனாக இருப்பதாய் எப்போதும் அவர் உணர்வதுண்டு. இவனுக்கு அடுத்தவனான சுசீலனுக்கு துருதுருப்பு அதிகம். பாதை திறக்கும் நிகழ்வுக்கு போகப் போவதாய் சுசீலன் புறப்பட்டபோது சாந்தன் தடுத்தான்.

''சும்மா ஆட்களை அங்க விடமாட்டினம். நீ போய் வீணாய் அலையப்போறாய்."

" நீ போகாட்டி விடு. நான் போய் போறன்."

''எதுவரைக்கும் போவாய்."

"பளை வரைக்கும் போயிட்டுத்தான் வருவன்."

சுசீலன் சைக்கிளை எடுத்துக்கொண்டு நேற்றேபோய் விட்டான்.

நேற்று கிளிநொச்சிக்குப் போனவன் இன்று ஆனையிறவு கடந்து பளைவரை போவானோ தெரியவில்லை. நாளை அவன் வரும்போது நிறைய புதினங்கள் கொண்டு வருவான்.

பாதை திறப்பு என்பது எத்தனை பெரிய விஷயம்.

மூச்சடைத்துக்கிடக்கும் இருட்டு அறையின் யன்னல் திறந்தது மாதிரி.

பாராசக்தி கையில் சாப்பாட்டுத் தட்டுடன் அருகில் வந்தாள்.

மூத்தவன் முருகானந்தன் அவரை சற்று உயர்த்தி தாங்கிப்பிடிக்க அவள் இடியப்பத்தை அவர் வாய்க்குள் சிறிது சிறிதாக வைத்தாள்.

நரைத்த தலையும் சுருக்கம் விழுந்த முகமுமாக இருந்தவளைப் பரிவோடு பார்த்தார். குழந்தையைப் பராமரிப்பது போல பராமரிக்கிறாள்.

நாற்பத்தியெட்டு வருடங்கள் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை.

கண்களில் பனிப்படலமாய் நீரின் துளிர்ப்பு.

அவரின் வாய்கழுவி துடைத்து அவரைப்படுக்க வைத்து விட்டு அவள் தட்டுடன் போக அவர் களைப்போடு படுத்துக்கொண்டார்.

சிறிது புரண்ட போது முருகானந்தனும் அடுத்தவன் விக்கினேஸ்வரனும் வாசலில் நின்று யாருடனோ கதைப்பது தெரிந்தது.

"திரும்பவும் ஊருக்குப் போகவேணும் எண்டு ஐயா ஒரே கேட்டபடி, எங்கட ஊரில இப்பதான் வெண்புறா வந்து மிதிவெடி, கண்ணிவெடியளை எடுத்து துப்பரவு செய்யினம். அதுக்குப் பிறகுதான் ஒரு கொட்டில் போட்டுப் போகலாம். இப்ப பரந்தன் சந்தியில தான் கொஞ்சம் ஆள் நடமாட்டம் இருக்குது. இவற்ற ஆசைக்கு கெதியாய் குமரபுரத்துக்கு போயிடவேணும்."

கண்ணைச் சுருக்கி கூர்ந்து பார்த்தார். யாருடன் பேசுகிறான் என்று தெரியவில்லை.

"ஐயா ஒரே படுக்கைதான். இங்க உள்ளுக்கு வாங்கோ"

ஐயா.... ஐயா.... உங்களைப் பார்க்க விநாசி மாமா வந்திருக்கிறார்."

விநாசி என்ற பெயர் அவர் காதில் விழுந்ததும் நெஞ்சும் ஒரு தடவை பலமாக துடித்தது. கண்கள் பரபரப்புடன் எதிரே துழாவியது.

அந்த ஒல்லியான உருவம் அருகே வந்து நிற்க.

"விநாசி! " அவரின் மெலிந்தகுரல் நடுக்கத்துடன் ஒலித்தது.

கண்களைப் வெட்டிக் கூர்ந்து பார்த்தார்.

"விநாசி! என்ன உன்ர கோலம்" மனம் பரிதவித்து பதறியது.

"சிவம்" வந்தவர் உடைந்து போய் அழுகையில் குலுங்கினார்.படுக்கையிலிருந்தவரின் கைகளை தடவிவிட்டார். அவர் இமைக்காமல் விநாசியையே பார்த்தார்.

தலை நரைத்து கண்கள் ஒடுங்கி மெலிந்த முகத்தில் ஏராள கவலை வரிகளுடன் மிக ஏழ்மைத்தோற்றத்தில்.....

அய்யோ... விநாசி... அவரால் தாள முடியவில்லை. ஆறு வருடங்களில் இத்தனை முதிர்வா... இத்தனை தளர்வா... காலத்தின் துயர்கள் அந்த கலைஞனின் முகத்தில் இத்தனை வரிகளையும் தீட்டிவிட்டதா...

அந்த நாட்களில் விடிய விடிய ஆடும் கூத்தில் மணி மகுடம் சூடி, பட்டாடை அணிந்து காத்தவராயனையே கண் முன்னே நிறுத்தும் அந்த விநாசியா இது....

இந்த மூப்பு இந்த தளர்வு தனக்கும் தானே என்ற எண்ணம் திடுக்கென்று எழுந்தது. இருவருக்கும் ஒரே வயதுதானே.

"எப்பிடி இருக்கிறாயடா"

"ஏதோ இருக்கிறன்" உலகத்து விரக்தியெல்லாம் அந்தக்குரலில் ஒலித்தது. "காயப்படாத மனிசருமில்லை. காயப்படாத மனங்களுமில்லை."

இடப்பெயர்வோடு நன்றாய் நொந்து போனானோ...

நீண்ட நாட்களுக்குப் பின் பார்த்தது... தமது நிலைமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டார்கள். பேச்சின் இடையே விநாசி சொன்னார்.

"எங்கட கார்த்திகேசரும் கடுமையாய் இண்டைக்கோ நாளைக்கோ எண்டு கிடக்கிறாராம். சாவகச்சேரியிலயிருந்து இடம் பெயர்ந்து போய் யாழ்ப்பாணத்தில பிள்ளையளோட இருந்தவர், சாவகச்சேரியில அவற்ற வீடு வாசலெல்லாம் இடிஞ்சு போயிட்டுதாம்."

விநாசியின் வார்த்தைகளைக் கேட்ட அவருக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. இங்கே உழைத்து இங்கேயே வீடு வாசல் என்று தேடியதன் சொத்தும் தங்கவில்லை. இங்கு உழைத்து சாவகச்சேரியில் வீடு வாசல் தேடிய கார்த்திகேசுவின் சொத்தும் நிலைக்கவில்லை. கடவுளே....

நெஞ்சின் ஆழம் வரை வலித்தது.

நூற்றாண்டின் முக்கால் பங்கு காலம் போய்விட்டது.

இந்த விநாசி, கார்த்திகேசு இன்னும் எத்தனை பேர்....

எங்கெங்கோ பிறந்தவர்களை இந்த கிளிநொச்சி மண்தான் ஒன்றிணைத்தது.

வாழ்ந்ததும் நிமிர்ந்து எழுந்ததும் சரிந்து விழுந்ததும் இந்த மண்ணில் தான்.

இன்றைக்கு ஒவ்வொரு திக்கிலும் சிதறிப்போன நிலையில் மிஞ்சியிருப்பது. மனப்பாரம் மட்டுமே.

எல்லோரினதும் கடைசிக்காலமா இது. விநாசி கதைத்துவிட்டுப் போன பிறகும் அந்த அதிர்வு வெகுநேரம் வரை மனதில் இருந்தது.

கண்களை இறுக மூடிக்கொண்டார்.

"அப்பு... அப்பு... "

எங்கோ தூரத்தில் சாந்தனின் குரல் கேட்டது.

கண்களைத் திறக்கத்தோன்றவில்லை.

நீண்ட தூரம் ஓட்டப்பந்தயத்தில் வேகமாக ஓடி இலக்கை எட்டப்போகும் நேரக் களைப்பு...

மறுபடி " அப்பு.... அப்பு.... என்ற பதட்டக்குரல்.

அவர் மெதுவாய் கண்களைத்திறந்தார்.

மிக அருகாமையில் தெரியும் சாந்தனின் பரிவான முகம்.

அந்த முகத்தை உற்றுப்பாத்தார்.

இவன் எனது இன்னொரு விம்பம்.

எங்கோ தென்மராட்சியில் ஒரு மூலைக்கிராமத்தில் பொறுப்பில்லாமல் திரிந்த நான் இருபது வயதில் தானே இந்த கிளிநொச்சிமண்ணில் கால் வைத்தேன்.


ஐம்பதைந்து வருசம் இருக்குமா...

இருக்கும்.

அது இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த வருடம்.

(தொடரும்.....)

சிறந்த சாதனைகள், பெரும்பாலும் இளமையின் சாதனைகளே. - பெஞ்சமின் டிஸ்ரேலி



# தானக்குணத்தவன்...

வந்தோரை வரவேற்பது மட்டுமல்ல
வலிந்தோரை வளர்க்கும்
வரலாறும் எமதாய் என்றும்...

சிறிய இயற்கையால்
சிதைந்தயெம் உறவுகளே!

வாயை வயிறைக் கட்டி
வளம் சேர்த்த வாழ்வெல்லாம்
வெள்ளம் கழிவிப் போன போது

உங்கள் கண்ணீரில்
வன்னியும் மூழ்கித்தான் போனது

நொந்தவனே நோவறிவான்...!


நீங்கள் நீரில் இழந்தவை போல
நாங்கள் கந்தகத் தீயில்
காவு கொடுத்தது கனதியானது

உமக்கனுப்பிய எம்
உணர்வின் துளிகளினுள்ளே...
ஒரு பாலைப்பழம்
விற்கும் பாலகன்
ஒரு பாயிழைக்கும் ஆச்சி
ஒரு ஒட்டியுலர்ந்த உழவன்
உள்ளிருக்கின்றான்
இது
இவர்களின் அட்சயப் பாத்திரத்தின்
அன்புத் திரட்டலல்லவா?

ஊடக உளறல் போல
இவையொன்றும் இராசதந்திரமல்ல
உறவுகளை புரிந்தோரின்
புதிய தொரு புறப்பாடு...
உயிரை அதன் உணர்வை
மதிப்போரின்
ஒத்துணர்வின் வெளிப்பாடு...

உளறும் வாய்களுக்கொரு
மேற்கோள்
புரிந்து கொள்க!
“தன்மானத்தை போல
தமிழன் தானக் குணத்திலும்
தலை நிமிர்ந்தவனே....”

**மா.பரமேஸ்வரன்**



# காற்றின் காதோரம்

காற்றே...!
உன்னைக் காதலிக்கிறேன்
நெருப் பெரிந்த - என்
தாயகத்துத் தரிசு நிலங்களை
யெல்லாம்
நீ குளிர்வித்தாயல்லவா....

காற்றே!
உன்னைச் சுவாசிக்கிறேன்
பிரிந்த என்னூர்ப்
புழுதியெல்லாம் சுமந்து
வந்து
என்னுயிருக்குள் அனுப்பு
கிறாயே
ஆதலால்.....
காற்றே!
உனை வியக்கிறேன்.
தென்றலாய்க்குளிர்விக்கும்
நீதானே....
புயலாய் மாறிப்
பூமியையும் புரட்டிப்
போடுகிறாய்...
என் மூத்தோரின்
மூச்செல்லாம்
உன்னுள் முடிச்சவிழ்ந்து
ள்ளதால்
உன்னைத் தழுவப் பிரியப்
படுகிறேன்.

காற்றே!
உறவுகளுக்காய் உயிரையே
உனக்குள் கரைத்தார்களே -
அந்த
உன்னதமானவர்களின்
உறக்கம்
கலையாத படி உன்னை
வணங்குகிறேன்
வாழ்த்துகிறேன் - என்
கண்ணீரால்
அர்ச்சிக்கிறேன.

**இரணையூர் ரமணி**



சிறுகதை

# ஆசைகளைச் சுமந்தபடி

**சூரியன்** ஏக்கத்தோடு அந்த குடியிருப்பை எட்டிப் பார்த்தான். தன் ஏதாவது ஒரு விடியலில் அந்த குடியிருப்பிற்கு விடிவு வராதா என்ன ஏக்கம் சூரியனிற்கு.

காட்டையழித்து காலத்தின் தேவை கருதி அமைக்கப்பட்ட சிறிய குடியேற்றத்திட்டம் அது. இங்கொன்றும் அங்கொன்றுமாக சிறிய குடிசைகள் எப்போதோ வேய்ந்திருக்க வேண்டும். இருப்பினும் (UNICEF) இன் படங்கை போத்தி இன்று வரை குற்றுயிருடன் நின்று கொண்டிருந்தது. குடிசைகளின் வாசலில் இன்றைய நாளை எப்படிக் கடத்துவது என்ற யோசனையுடன் சில காய்ந்த உருவங்கள்.



இன்னும் பசி வந்திடவில்லை என்பதைக் காட்டிக்கொண்டு ஒரு குழந்தை மண்ணை சிரட்டையில் அள்ளி விளையாடிக்கொண்டிருந்தது. சற்றுத்தூரத்தில் வற்றிப் போய் கொண்டிருக்கும் கிணற்றில் தகரடப்பாவினால் அள்ளிய நீரை மண் பானையில் அள்ளி நிரப்பிக் கொண்டிருந்தாள் அக் குழந்தையின் தாய். குழந்தை எப்போது உணவு கேட்டு அழத்தொடங்குவானோ என்ற பயம் அவளிற்கு. இன்று சரி தனது கணவரிற்கு ஒழுங்கான வேலையொன்றும் கிடைக்காதா என்ற அவா அவளிற்குள்.

தண்ணீர் பானையுடன் குடிசையினுள் நுழைந்தவள் வெளியே தன் மூத்த மகளின் குரல் கேட்டு வாசலை பார்த்தாள். “அம்மாட்ட கேட்டிட்டு வாறன்” வெளியில் உள்ள மற்றப் பிள்ளைகளுடன் அவள் கதைப்பது கேட்டது. மெல்ல உள்ளே நுழைந்தவள் “அம்மா பாலத்தடி கோயில்ல கஞ்சி ஊத்திறாங்க நானும் போகவா”

என்று கேட்டவாறு தாயின் முகத்தை பார்த்து நின்றாள்.

இங்கிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் இருக்கும் கோயிலிற்கு இந்தக் காட்டுப் பாதையால் தனது பிஞ்சு மகள் போவதையிட்டு அவள் பெத்த மனம் பதைத்தாலும் பசியால் வீட்டில் இருந்து வாடும் குழந்தையைப் பார்த்து துன்புறுவதை விட இது எத்தனையோ மேலானது என்பதால் சரி என்று தலையாட்டினாள்.

வெளியே உள்ள அட்டாளையில் அடுக்கி வைக்கப்பட்ட பாத்திரங்களில் சற்று பரவாயில்லாத நெழிவு சுழிவுகளோடிருந்த பாத்திரத்தை எடுத்தாள் அதை மார்போடு அணைத்துக்கொண்டு புறபட்டவளை வாசல்படியில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தாள் தாய். பின்ப ஏதோநினைத்துக்கொண்டவளாக “ராசா...” என்று கூப்பிட்டாள். என்ன என்பதுபோல திரும்பி தாயைப்பார்த்த மகளிடம் “நீயும் குடிச்சிட்டு தம்பிக்கும் கொஞ்சத்தைக் கொண்டுவா ...” என்றாள் கெஞ்சும் குரலில். இதை சொல்லும் போது அவள் மனம் அவமானத்தாலும் வேதனையாலும் குமைந்து கொண்டது. ஒரு குழந்தையின் பசியை தீர்க்க இன்னொன்றிடம் கெஞ்சும் நிலை. தாயின் வேண்டுகோளிற்கு இணங்கி ‘சரி’ என்பது போல தலையசைத்து விடைபெற்றாள். அவளது தாய் பெருமூச்செறிந்தவாறே உள்ளே சென்று விட்டாள்.

அந்த குடியிருப்பில் உள்ளவர்களும் ஒரு காலத்தில் சொந்த மண்ணில் வளமுடன் வாழ்ந்தவர்கள்தான். காலத்தின் கோலத்தால் சொந்த மண்ணையும் நல்வாழ்க்கையையும் தொலைத்துவிட்டு இன்று அகதிகளாக இந்த குடியிருப்பில் குடியிருக்கிறார்கள். அந்தக் குடியிருப்பில் பெரும்பாலான குழந்தைகள் அங்கு தான் பிறந்திருந்தனர். வாழ்க்கையில் சந்தோஷம் என்ற பதத்தை அவர்களில் எவரும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் உலகத்தில் பசி மிகக் கொடிய நோய். தாங்கள் அந்நோயில் நித்தம் செத்து பிழைக்கும் நோயாளிகள். அந்த ரீதியிலேயே அவர்கள் வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் பிரச்சினையே வயிறாக இருந்தது. பல நாட்களில் சம்பாத்தியம் இல்லை.சில நாட்கள் கிடைக்கும் சம்பாத்தியம் அவர்கள் அடிப்படைத்தேவைக்கே போதுமானதாக இல்லை. இது போதாது என்று நோய்களும் தொடர்ச்சியாக இவர்களை குத்தகைக்கு எடுத்திருந்தது. இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு நடுவே அந்த உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன.

அந்த குழந்தை பட்டாளம்

**செம்பருத்தி**

கிடைக்கப் போகும் கஞ்சியை ஆவலுடன் எதிர்பார்த்தபடிநகர்ந்துகொண்டிருந்தது. ஒவ்வொருவரினதும் கையில் நெளிந்து போன அலுமினிய பாத்திரங்கள். சிலர் கரிபடிந்த பிளாத்திக்கு கிண்ணங்கள் சிலவற்றையும் கொண்டு வந்திருந்தனர். அவர்கள் மொத்தம் ஆறுபேர், அதில் சற்று பெரியவனாக தென்பட்ட குமாருக்கு வயது பனிரெண்டு தான் இருக்கும்.

மணல் பாங்கான ஒரு பாதை வழியே அவர்கள் பயணம் நிகழ்ந்து கொண்டு இருந்தது. வழக்கமான குழந்தைகளிடம் காணப்படும் சிரிப்போ கூட்டமாகச் சேர்ந்து போகும் போது காணப்படும் குதூகலமான ஒலிகளோ அவர்களிடம் காணப்படவில்லை. அத்தனைதென்பும் அவர்களிடம் காணப்படவில்லை.

ஆடிக்காற்று சுழன்று வீசி மணலை அவர்கள் மீது வீசிவிட்டு சென்றது. கண்களை கசக்கியபடியே தொடர்ந்தும் அவர்கள் நடந்து கொண்டிருந்தனர். தனது மூன்று வயது தம்பியை இடுப்பில் சுமந்தபடி ஏழு வயது செல்லம் நடந்துகொண்டிருந்தாள். பாவம் அவளால் தொடர்ந்தும் நடக்க முடியவில்லை. தம்பியை கிழே இறக்கிவிட்டுவிட்டு தனது எண்ணெய் காணாமல் விரிந்து கிடந்த தலை மயிரை ஒதுக்கி விட்டாள். குனிந்து தனது பாவடையால் முகத்தில் உள்ள வியர்வையை துடைத்துகொண்டாள். அவள் பார்வை மங்கலாக இருந்தது. தலை சுற்றியது. நேற்றைய காலைக்கு பிறகு அவள் எதுவுமே சாப்பிட்டிருக்கவில்லை. நின்று நிதானித்து தொடர்ச்சியாக பெருமூச்சுக்களை விட்டாள். திரும்பவும் தம்பியை தூக்கி இடுப்பில் வைக்க முயன்ற போது அவளால் முடியவில்லை மெதுவாக அவனை நடத்தி கூட்டி செல்லத்தொடங்கினாள். பாவம் அந்த குழந்தையும் தள்ளாடித் தள்ளாடியே நடந்தது. தனது மூக்கில் இருந்து ஒழுகும் சளியை புறங்கையால் இழுத்து துடைத்து முகத்தில் அப்பிக் கொண்டது. அதன் வெற்று உடலில் வழிந்த வியர்வை அதன் மீது படிந்திருந்த புழுதியில் கோடுகளை வரைந்திருந்தது.

செல்லத்தை அடுத்து சரசு என்ற ஐந்து வயது சிறுமி மிகுந்த சிரமத்தின் மத்தியில் தனது போலியோ காலை இழுத்து இழுத்து நடந்து கொண்டிருந்தாள். அளவில் பெரியதான அவள் சட்டை அவளது ஒவ்வொரு நடைக்கும் தோள் மூட்டிலிருந்து வழுகிக் கொண்டு இருந்தது. அதை மெல்ல இழுத்து விட்டவாறே நடந்துகொண்டிருந்தாள். தனது வரண்ட நாவால் உதட்டை ஈரப்படுத்த முயன்று தோற்றுப் போனாள். எங்காவது தண்ணீர் கிடைக்காதா என்று சற்று முற்றும் பார்த்தபடியே நடந்துகொண்டிருந்தாள்.

சரசுவிற்கு சற்று முன்னதாக ராமு போய்க் கொண்டிருந்தான். அவனது கால் முழுவதும் புண்கள் பாதி ஆறியும் பாதி ஆறாமலும் இருந்தது. கையிலும் சிறிய பரு போன்ற அடையாளங்கள். ஒரு கையால் மற்ற கையை மாறிமாறி சொறிந்து கொண்டே நடந்துகொண்டிருந்தான். வெய்யில் இப்போது நன்றாக ஏறிவிட்டதால், சுடு மணல் அவன் நடக்கும் போது தெறித்து அவன் புண்களில் அப்பி எரிவை ஏற்படுத்தியது “ல....ஸ்...” என்று அடிக்கடி காலை வேதனையுடன் உதறி உதறி நடந்து கொண்டிருந்தான்.

ராமுவிற்கு அருகில் எமக்கு ஏற்கனவே அறிமுகமான ராசு வந்து கொண்டு இருந்தான். இடுப்பில் நிற்கமாட்டேன் என்று அடம்

பிடித்த காற்சட்டையை ஒரு கையில் பிடித்திருந்தான். அவன் குச்சி குச்சி போன்ற கை,கால்கள் பார்வைக்கு விநோதமாக இருந்தது. தோளின் வெளிப்புறத்தே சொரசொர வென்று படைபடையாக வெடித்து இருந்தது. முகத்தில் பெருகிய வியர்வையை குனிந்து தனது அழுக்கு சட்டையில் துடைத்தவாறே வந்துகொண்டிருந்தான்.

எல்லோரிலும் இருந்து பிரிந்து பாதையோரம் இடைக்கிடையே காணப்படும் நிழலோரமாக நடந்து வந்துகொண்டிருந்தான் குமார். இந்தக் கூட்டத்தில் அவனுக்கே சற்று வயது அதிகம். தொடர்ச்சியாக பல தடவை மலேரியாவால் பாதிக்கப்பட்ட அவனது உடல் மிகவும் பலவீனமாக இருந்தது. அவனது எண்ணெய் காணாத பரட்டை தலைமயிர் உலர் காற்றில் அசைந்து கொண்டிருந்தது. அவனிற்கு மண்டையை பிளக்கும் போல தலையை வலித்தது. வாயெல்லாம் கைத்து ஒட்டத்தொடங்கியது. பசியாலும் பலவீனத்தாலும் உடம்பு இடைக்கிடையே நடுங்கியது. கிணற்றில் இருந்து கேட்பது போல அவன் குரல் சன்னமாக இடைக்கிடையில் சம்பாசித்து கொண்டு வந்தது.

இப்போது அவர்கள் மனல் பாதையை விட்டு வயல் வரம்பினூடாக நடக்கத்தொடங்கி இருந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் விதியை நொந்தவாறு நடந்துபோய்க்கொண்டிருந்தார்கள். அந்த வயதிற்கேயுரிய ஆசைகள், கற்பனைகள் அவர்கள் மனதிலும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அந்த ஆசைகள் எல்லாம் அடிப்படை வசதிகளின்றி தவிக்கும் அவர்கள் நிலையை நன்கு புலப்படுத்த கூடியதாக இருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் ஆசைகளை மனதில் அசைபோட்டபடி நடந்து கொண்டிருந்தனர்.

குமாரிற்கு பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகளை பார்க்கும் போதெல்லாம் ஒரு ஏக்கம் வரும், தானும் இதே போல சீருடையணிந்து பாடசாலை போகமாட்டோமா என்று அவன் ஏங்காத நாட்களில்லை. தந்தையை இழந்து தாயின் உழைப்பில் வயிறு கழுவும் அவனுக்கு இதெல்லாம் சாத்தியப்படக்கூடியதா என்ன? இருப்பினும் தானும் சீருடையணிந்து பள்ளி செல்வது போல அடிக்கடி கற்பனை பண்ணி மகிழ்வான் இப்போதும் தன்னை ஒரு பாடசாலை மாணவன் போல கற்பனை செய்து கொண்டு நடந்துகொண்டு இருந்தான்.

சரசுவிற்கு சுதந்திரமாக ஓடியாடி விளையாடும் குழந்தைகளை கண்டாலே துக்கம் தொண்டையை அடைக்கும். தன்னாலும் அப்படி ஓடியாடி விளையாடமுடியவில்லையே என்ற வேதனை அவளிற்கு இரவு நேரத்தில் பக்கத்து வீட்டு தாத்தா சொல்லும் கதைகளில் வருவது போல ஒரு தேவதை தனக்கும் காட்சி தந்து தன் கால் ஒழுங்காக வரவரம் தர மாட்டாளா? என்று அவள் ஏங்குவதுண்டு. அவள் கற்பனையில் அவள் ஒரு சுறு சுறுப்பான சிறுமி. நண்பர்களை சீண்டி விட்டு அவள் ஓடுவாள். யாருமே அவளை பிடிக்கமுடியாத வேகத்தில் இப்போதும் அவளிற்கு அப்படியான ஒரு கற்பனை தான் இருந்தது. எல்லோரிற்கும் முன்பு தான் செல்வது போலவும் மற்றவர்கள் தன்னை பிடிக்க முடியாமல் பின்னால் வருவது போலவும், தான் அவர்களைப் பார்த்து சிரிப்பதுபோலும் கற்பனை செய்துகொண்டு நடந்தாள்.

ராசு தனது கற்பனையில் எப்போதும் காணப்படு சாப்பாட்டைத்தான். எப்போதாவது தான் விரும்பிய உணவை வயிறு நிரம்ப உண்ணும் சந்தர்ப்பம் கிடைக்காதா? என்று அவனுக்குள்ளூர ஏக்கம் அவனது சாப்பாட்டில் தண்ணீர் தான் முக்கிய இடத்தை வகித்தது. எப்போதாவது கோயில்களில் கிடைக்கும் பொங்கலும் வாய்க்கு மட்டும் தான் போதுமாக இருந்தது. அவனது கற்பனையில் விதம்விதமான உணவுகள் தட்டு நிறைய இருக்கும். அவன் இஷ்டம் போல வயிறார உண்பான். இப்போதும் பலவிதமான உணவுகளை நினைத்தவாறே அவன் நடந்து கொண்டிருந்தான்.

செல்லத்திற்கு நல்லதாக ஒரு சட்டை போட வேண்டும் என்று வெகு நாளைய ஆசை. அவளுக்கென்று தைத்ததாகவோ, தனக்கு சரியான அளவாகவோ உள்ள சட்டை ஒன்றும் அவள் ஞாபகத்திற்கு வரவில்லை எல்லாம் யாரோ போட்டு கழித்த பழசுகள் நிறம் மங்கிய பின்பு தான் அவளிற்கு கிடைக்கும். அதுவும் அவள் அம்மாவோ அல்லது அப்பாவோ கெஞ்சிப் பெற்றுக்கொண்டது தான். அவள் தானும் அழகான ஆடை அணிந்தால் எப்படி இருக்கும் என்று அடிக்கடி கனவு காணுவாள்.அவள் ஒழுங்கான ஆடை அணிவதே கனவில் தான். பச்சை வயலும், நீலவானமும், குளத்தில் உள்ள தாமரை, அல்லி மலர்களும் அவளிற்கு விதம் விதமான நிறத் துளிகளை நினைவுபடுத்தியது. அவற்றின் நிறங்களில் தான் ஆடையணிந்து நடப்பதாக நினைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தாள்.

ராமு பாவம் அவன் ஆசையே, அவன் நிலையை எமக்கு உணர்த்துவதாக இருந்தது. கையிலும், காலிலும் மாறி மாறிவரும் புண்கள் அவற்றை மாற்ற மருந்து எடுக்க வசதியில்லை. யார்யாரோ சொன்னார்கள் என்பதற்காக காட்டில் உள்ள சில பச்சை இலைகளை அரைத்து பூசி அது உள்ளதையும் கெடுக்க நரக வேதனைதான் பட்டிருக்கிறான். இந்த புண்களுடன் வெறுங்காலால் நடப்பது எவ்வளவு சிரமம். நல்ல தொரு செருப்பு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். எவ்வளவு மண்ணும், கல்லும், முள்ளும் அவன் புண்களை பதம் பார்த்தனஎன்பது அவனுக்கு தானே தெரியும். ஆனால் அவனது நியாயமான இந்த ஆசை கூட இது வரை நிறைவேறவில்லை.

எல்லோரையும் போலவும் செல்லத்தின் மூன்று வயது தம்பிக்கும் ஒரு ஆசை, ஒருமுறை அவர்களது குடியேற்றத் திட்டத்திற்கு வந்த வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அங்குள்ள குழந்தைகளிற்கெல்லாம் பால் வழங்கினார்கள். அதன் பின்பு யாருமே அங்கு வரவில்லை. ஒரு முறைபருகிய போதும் அவனுக்கு மீண்டும் அது வேண்டும் போல இருந்தது. தாயிடமும் "அம்மா பாப்பா" என கேட்டிருக்கிறான். பாவம் தாயின் நிலையை உணரும் பக்குவம் அவனுக்கு இருக்கவில்லை. வீதியால் எந்த வாகனம் போனாலும் யாராவது பால் கொண்டு வருகிறார்களா என ஆவலுடன் எட்டிப்பார்ப்பான்.

"டாண்" "டாண்" என்று ஒலித்த கோயில் மணி அவர்கள் சிந்தனையை கலைத்தது. வயல் வெளிகளினூடாக வந்த அந்த ஒற்றையடிப்பாதை ஒரு மண் சாலையில் ஏறியது. தூரத்தில் கோயில் கோபுரம் தெரிந்தது. அவர்கள் தங்கள் நடையை விரைவுபடுத்தினார்கள். "அந்தோ" அக்கோயிலில் முகப்பில் ஏற்கனவே ஒரு பெரிய கூட்டம் கையில் பாத்திரத்துடன் கஞ்சிக்காக முண்டியடித்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த அவர்களிற்கு "திக்" என்றது. உடல் உள சோர்வுகள் யாவற்றையும் மறந்து வெறி பிடித்தவர்கள் போல அந்த கூட்டத்துடன் முண்டியடிக்க ஓடத்தொடங்கினார்கள்.

இப்போது அவர்கள் யாவரினதும் ஒரே ஆசை அங்கு ஊற்றப்படும் கஞ்சி கிடைக்க வேண்டுமே என்ற ஒன்றாகவே இருந்தது. ●

## முல்லைக்கமல்

# எழுத்து-பிரம்மம்: சில குறிப்புகள்

ஒரு பின்மாலையில் ஊரின் மத்தியபகுதி ஏதோவொரு எதிர்பார்க்கையோடு காத்திருப்பதாகப் பட்டது. மைதானத்தின் புல்வெளியில் இன்று ஏதோவொரு வெறுமை மண்டிக்கிடக்கிறது. பிற்பகல் 3.30க்கு புல்வெளிமைதானத்தைத்தாண்டிய கட்டடத்தில் ஏதோவொரு படைப்பின் அறிமுகத்தை எல்லோரும் சேர்ந்து மேடையேற்றப் போகின்றார்கள்.



டொல்பின்களில் இரண்டொன்று முன்னமே அந்தப்படைப்பையும் அதன் படைப்பாளியையும் மைதானத்துக்கு எடுத்து வந்திருந்தது. ஒரு சிறுவன் வந்த டொல்பினிலிருந்து இறங்க மறுத்து விட்டவன்போல அடிக்கடி அதன் கதவைத் திறந்து மூடிக்கொண்டிருக்கின்றான். காற்று முகத்தில் காந்தலை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. ஒருவர் மைதானத்துக்குள் போகவும் இன்னொருவர் மைதானத்தை விட்டுப் புறப்படவும் சரியாய் இருந்தது. எங்கே போகிறார் இவர்? ஏன் இவருக்கு இந்த படைப்பின் அறிமுகவிழா பிடிக்கவில்லையா? அல்லது அதன் ஒழுங்கமைப்பு நபராய் இருக்குமோ. விழாவுக்கான ஏதோவொன்றைத் தவற விட்டிருப்பார் போல்.

நாங்கள் அவ்விடத்துக்கு போகவும் பலரும் அங்குவரவும் ஒரு அரை மணித்தியாலங்களை பொழுது விழுங்கிக்கொண்டது. ஏதோவொரு பத்திரிகைக்காரன். கயஸ்சில் வந்து இறங்குகிறார். முகமெல்லாம் வியர்வைத்துளிகள். கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டிருக்கிறார். விழா தொடங்க இன்னும் நேரமிருக்கிறது.

ஒலிபெருக்கியை பெரிதாக முடுக்கி விடயாரும் விரும்பவில்லைப் போலும். மெல்லிய இசையில் ஏதோவொரு பாடலை ஒருபாடகன் பாடிக்கொண்டிருந்தான். மிகவும் கஸ்ரப்பட்டு அவன் அந்த மெட்டை இசைக்கிறான் போல குரலில் ஏதோவொரு கடுமை. எனக்கு அப்பாடல் அன்னியமாய்த் தான் நின்றது. இசையென்றால் ரசிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

எல்லோரும்உள்ளே வந்து விட்டோம். மேடையின் வெறுமையை நான் விரும்பவில்லை. யாரோ சிலர் மேடைக்குப்போவதா விடுவதா என இழுபடுகிறார்கள் போல. மேடைக்கு முன்னால் விவாதம் நடத்துபவர்கள் போல. பலரும் நின்றுகொண்டிருந்தனர்.

நரைத்ததலைகளில் அனுபவம் இருப்பதை யாவரும் அறிவீர்கள். மேடையின் முன்னே நிற்பவர்கள் இப்போது அசைவு காட்டுகிறார்கள். பிரமத்தின் அசைவு உலகத்தின் அசைவைத் தீர்மானிக்கிறது. நடராஜரின் நடனம் உலகை இயக்குகிறது. நடராஜரின் அசைவும், குமிழ்ச் சிரிப்பும் இல்லையெனில் பூமியின் அசைவும், உயிர்களின் இரக்கத்தையும் யாரும் கண்டிருக்கமுடியாது.

மேடையில் யாவரும் ஏறியாகிவிட்டது. ஒலிபெருக்கியின் மைக்கை யாரோ. சரிசெய்தார்கள். தலைமைதாங்குபவர் இப்போது பேச்சுக் குத்துக்காலை துடைத்துவிடுகிறார். சபை யோரின் கவனம் இப்போது அவரின் செய்கையில் லயித்திருக்கிறது. பிரமன் எப்போதும் இயங்கிக்கொண்டு இருக்கவேண்டும். செயலை அவன்எப்போதும் நிறுத்தியதில்லை. அவனின் கையாலேயே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவனின் குமிழ்ச் சிரிப்பில் எல்லோரும் அன்பைப் பொழிகிறார்கள்.

விழா ஆரம்பமாகிவிட்டது. படைப்பின் சிறப்பை பல வழிகளிலும்சொல்லியாகிவிட்டது. படைப்பாளி மோனத்தவத்தில் மூழ்கியிருக்கிறான். மேடையின் சம்பிரதாயங்கள் நிறைவேறியாகி விட்டதன் பின்னால் படைப்பாளியின் மோனத் தவத்தை காலம் பின்னிக்கொண்டிருக்கிறது. படைப்பாளனுக்கு இப்போது அந்தரம். அவை சிரிப்பொலிகளால் நிரம்ப பதிலுக்கு படைப்பாளன் புன்னகைக்கிறான். அதன் மோனத்திலேயே கண்விழித்தவன் போல அருகில் இருந்தவனின் உரையாடலும் அவரை ஈர்க்கவில்லை. அவையில் பார்வையை ஓட்டுகிறார். அவை நிரம்பிவழிகிறது.

தொடர்ந்து படைப்பின் காலத்தை அதன் படைப்பாளியின் பெயரில் யாரே பேசித்தொலைக்கிறார்கள். நடுவுநிலைமை என்பது உலகத்தில் இப்போது இல்லை. எதுவும் சார்பானது. நடுநிலைமை கூட பலத்தின் பக்கம் அல்லது வலுவான சந்தர்ப்பத்தின் பக்கந்தான். காலத்தை உற்பத்திப் பொருளால் தீர்மானிக்க முடிவதில்லை மாறாகக் காலமே உற்பத்திப்பொருளின் காலத்தைத் தீர்மானிக்கிறது. பிரமன் இப்போது படைப்பின் மீது பார்வையைச் செலுத்துகிறான்.

மேடையில் சுடரும் தீபத்தின் ஒளியில் ஒரு பெரும் நடனத்தை யாரும் ரசிக்கவில்லை. காற்று தீபத்தின் அசைவைத் தீர்மானிப்பது போல தொடர்ந்து அசைகிறது. அது காற்றுகருவி. தீபம்கர்த்தா காற்றும் அசைய தீபமும் அசையும். அசைவுறுதல் இரண்டுக்கும் பொது. இந்தசன சமுத்திரம் அசைவும் பொது.

பொருளின் கோணத்தை. பத்துத்திக்கிலும் இருந்து பார்வை கொள்ளுவது படைப்புப்பிரமத்தின் லாவகம் . ரசனையின் தீவிரத்தில் அநேகம் இப்போது மறந்து போகிறது. மறதி இல்லையேல் பலரும் இறந்து விடுவார்கள். மறதிதான் புதினத்தை தேடவழி செய்கிறது. அதோடு மறந்ததையும். காண்பதை மறப்பது மரணமல்ல. அதுதான் மறத்தலின் சூக்சுமம். மறத்தலும் ஒரு படைத்தலே. காண்பதை மறக்கிற போது திரும்பத்தேடத்தொடங்குகிறோம். எனவே தேடலில் ஒரு பொதுப்பிரம்மம். உயிர்களின் தேடல் மரணமும் கூட ரசனைமிக்கது.

உயிர்கள் இப்போது தீபத்தின் அசைவைப்போல அசைவு கொள்கின்ற இன்னொரு பேச்சாளி மேடையின் சொர்பெருக்குத்தனத்தை செங்குத்தாய் நின்று வெட்டுகிறார். மேடை முப்பரிமாணம் கொள்கிறது. இதுவரை இருந்த பரிமாணத்தை மேடை இழந்து போகின்றது. புதிய கருத்தா தனது கண்டு பிடிப்புக்களையும் படைப்பின் சூக்சுமத்தையும். படைப்பாளனின் பரமரகசியத்தையும் அவிழ்க்கத் தொடங்கிவிட்டார். படைப்பு மட்டும் மேடையின் மேசையில் கிடந்து துடிக்கிறது. சத்திர சிகிச்சைக்கு உட்பட்ட ஒரு நோயாளியைப் போல. அதன் குருதியும் நிணமும் பேச்சாளனின் கண்டுபிடிப்புக்குள் கிடந்த லைகிறது. பேச்சாளன் சோர்ந்து போய்விட்டார், பேச்சுக் குத்துக்காலில் சாய்ந்துபடுத்தாகிவிட்டது. கைவிரல்களில் புது இசங்களின் லாவகம். அவரால் பேச்சை நிறுத்த முடியவில்லை. பிரமத்தைப்பற்றி மேடையில் உளரத் தொடங்குகிறார். பிரமத்தைப் பற்றிய குறிப்புகளில் லயிக்கிறார்.

பிரமம் குமிழ்ச்சிரிப்பை எல்லா உயிர்கள் மீதும் கவியச் செய்துள்ளது. பிரமத்தின் படைப்பையும் பரப்பிரமத்தின் லாவகத்தையும் பட்டியல் படுத்தத் தொடங்கிவிட்டார். பட்டியலின் இடையில் குழப்பம் வருகிறது. அவதாரங்களின் பெயரில் மந்திரங்களை ஜெபிக்கிறார். எல்லோர் முகத்திலும் புன்னகை. தொடர்ந்து உயிர்களில் அசைவு.பிரமம் அசையவில்லை. அதற்குத் திகைப்பு. மனம் அசைகிறது. ஆதலால் உயிர்கள் அசைகிறது.

மறுபடியும் பேச்சாளன் சோர்ந்துபோய் விட்டான். தொடர்ந்து சில நிமிடங்களை காலம் கண்ணீரோடு வாங்கிக்கொண்டது. புன்னகையைத் தொலைத்தபடி ஏதோவொரு சிந்தனைக்குள் யாவரும். பேச்சாளன் பேச்சை முடித்து விட்டான். சப்பென்றிருந்த அவையில் பிரமத்தின்சிலை உயிர்பெறுகிறது. சித்துக்களுடன் குமிழ்ச்சிரிப்பும்.

பிரமம் இப்போது தனது காலக்கணிப்புகளை உயிர்கள் மீது சொரிகிறது. கடந்த பேச்சாளனின் குரூரத்தை மெச்சியபடி புன்னகையிருக்க பிரமத்தின் சொற்கள் மட்டும் அசரீதியாய் ஒலிக்கிறது. பட்டியல்களின் தவறுதல்கள் காலத்தின் தவறன்று அது கருத்தாவினுடையது. கருத்தாவிற்கு பிரமத்தின் விமர்சன பாவம் அசூசைத்தருகிறது. பிரமத்தின் அபயக்கரத்தின் துணையோடு எறிந்த பொல்லுகளையும் சொல்லம்புகளையும் மாரீசங்களாக்கி விடுகிறதா பரப்பிரம்மம். பிரமத்தின் எச்சரிக்கைக்கு பேச்சாளனின் முதுகு வளைந்து கொள்கிறது.

பொழுது சாய்ந்து கொண்டே போயிற்று படைப்பின் லேபிளை (உறைகளை) உரித்தபடி அட்டையின் லாவண்யத்தில் ஒரு சிறுவன் பொழுதையும் மறந்தான். சூரியன் மட்டும் மேற்க்கில் சரிகிறது. சகல சௌபாக்கியங்களுடனும்.

அன்றைய புதினங்களுடனும்... ●

மகத்தான சாதனைகள் சாதிக்கப்படுவது, வலிமையினால் அல்ல; விடாமுயற்சியினால். - ஜேம்யல் ஜான்ஸன்




# தெளிவு பிறந்தது

பிரியனும் சுதனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரே வகுப்பில் கல்வி கற்று வருகின்றனர்.

வழமைபோல் அன்றும்பாடசாலை சென்றிருந்தனர். பாடசாலை முடிந்தவுடன் வகுப்புத் தலைவர்களை வகுப்பாசிரியர் நிற்கச்சொல்லியிருந்ததால், பிரியன் நின்றான்.

"பிரியன் நான் போறன் நீ நிலவனுடன் வா'' என்றான் சுதன். பிரியன் தலையசைத்தான்.

பாடசாலை விட்டு வீடு சென்று கொண்டிருக்கும் வழியில், மாணவர்களில் சிலர் புத்திசுவாதினமற்றிருந்த பெரியவரோடு சேட்டை செய்தனர். கற்களாலும் தடிகளாலும் அவருக்கு எறிந்தனர். வேதனை தாங்க முடியாமல் அவர் கூடாத வார்த்தைகளால் ஏசினார். அவர்கள் கைகொட்டிச் சிரித்தனர். சுதனும் சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டே கல்லெறிந்தான். அந்தக்கல் அவரின் நெற்றியை பதம் பார்த்தது, இரத்தம் சீறிப் பாய்ந்தது. இரத்த்த்தைக் கண்டவுடன் அவர்கள் எல்லோரும் அவ்விடத்தை வீட்டு ஓடத்தொடங்கினார்கள்.

பெரியவர் வலிதாங்காது துடித்தபடியே தன் கைப்பையில் வைத்திருந்த கஞ்சல் துணியால் அவர்களை ஏசி,ஏசி இரத்தத்தை துடைத்துக் கொண்டிருந்தார்.

வகுப்பாசிரியர் கூறிய சில அறிவுரைகளைசிந்தித்துக் கொண்டே, பிரியன் அவ்வீதியால் வந்து கொண்டிருந்தான். பெரியவரின் நெற்றியில் இரத்தம் வழிந்து கொண்டிருப்பதைப் பார்த்த அவன், அவரருகே சென்றான். பெரியவர், பிரியனை, சுதன் போன்றே நினைத்து ஏசத்தொடங்கினார். அவன் பொறுமையாக அவரோடு பணிவாகக் கதைத்தான். பெரியவர் அவனின் கரங்களைப் பற்றிப் பிடித்து தன் நெற்றியைத் தொட்டுக் காட்டினார், கல்லெடுத்து எறிந்தும் காட்டினார். அவனுக்கு அழுகை வந்தது.

எல்லோரும் இவரை யேன் துன்புறுத்துகின்றார்கள்? அவரின் முகத்தைக் கழுவி காயத்தைக் கட்டினான்.''

''என்ன மச்சான் உனக்கு வேற வேலையில்லையா? இந்த விசரோடு அலட்டிக் கொண்டு நிக்கிறாய். உன்னையும்விசரெண்டு நினைக்கப்போயினம்.''

சுதனின் வார்த்தைகள் பிரியனுக்கு கோபத்தை வரவழைத்தது. சுதன் அறியாமல் கதைக்கிறான் என்பதை உணரவும் அவனின் கோபம் தணிந்தது.''

''சுதன் இந்த அப்பா யாழ்ப்பாணத்தில் நல்ல வசதியாய் இருந்தவராம். 95 இடப்பெயர்வோட தன்ர குடும்பத்தையும் உறவுகளையும் இழந்திட்டாராம் அதை யோசித்தே மனநோயாளியாகிட்டாராம்.''

இதை விளங்கிக் கொள்ளாமல் அவரைதுன்பப்படுத்துகின்றீர்கள். இன்றைக்கும் நெற்றியில்காயம்.

பிரியன் என்னை மன்னித்துக் கொள்ளடா நானும் இன்று கல்லெறிந்தேன், இனிமேல் இந்தத்தவறைச் செய்ய மாட்டேன். நீ என்னைத் திருத்தியது போல் மற்றவர் களை நானும் திருத்துவேன் என்றான் மனந்திருந்தியவனாக சுதன்.

**பா.இசைவிழி**

# கேளு கண்ணே

*பள்ளிக் கூடஞ் சென்று பாடம்*
*படித்து வரும் கண்ணே!*
*தூயமான சுத்தமதைப்*
*பேண வேண்டும் கண்ணே!*

*ஆடை அணி உணவில் சுத்தம்*
*அமைய வேண்டும் கண்ணே!*
*அவற்றினோடு சூழல் சுத்தம்*
*பேண வேண்டும் கண்ணே!*

*எடுத்த பொருள் ஏதெனினும் அதனை*
*இருந்தபடி வைத்திடடா கண்ணே!*
*எவ்வளவோ வேலை சுகம் பாரு*
*எல்லோரும் போற்றுவார் கண்ணே!*

**யோ.ருஷாந்**
**தரம் -03,**
**கிளி/தருமபுரம் ம.வி**

# தேடல்



**புதையல் எடுக்க வழி எது - நீங்கள் உதவி செய்யலாமே**

# உதவிக் கெட்டார்







## வாரம் ஒரு குறள்

பகைமையுடையவர்களுக்கு இடையில்நல்லெண்ணங்களை உருவாக்கவும், இணக்கப்பாடுகளை ஏற்படுத்தவும் பல வழிகளில் முயற்சிகள் செய்யப்படுகின்றது. இப்படியான முயற்சிகளில் தூதுவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். ஆகவே இந்தத் தூதுவர்கள் நல்லெண்ணங்களை வளர்க்க வேண்டு மானால், அவர்கள் முதலில் நல்லெண்ண சிந்தை உடையவர்களாக இருக்க வேண்டும். இல்லையெனில் அம்முயற்சி என்றுமே நல்ல முடிவைத்தராது.. ஆகவே தூது செல்கின்றவர்கள் வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப நடந்தால் நலமாகவே இருக்கும். அவருடைய குறளைப் பாருங்கள்.

**"அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை**
**தூதுரைப்பார்க்கு**
**இன்றியமையாத மூன்று"**

## குறுக்கெழுத்துப் போட்டி 25




### இடமிருந்து வலம்

01. திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
07. தானிய வகைகளில் ஒன்று குழம்பி உள்ளது.
15. காது.
22. கவிஞனால் எழுதப்படுவது தலைகீழாக உள்ளது.
26. நவரத்தினங்களில் ஒன்று இறுதி எழுத்தைஇழந்துள்ளது
34. மலர்

### மேலிருந்து கீழ்

01. காத்தல் கடவுள்.
08. தலை முறை.
12. சூரியன், சந்திரன் மறைதல்.
15. திரு

### குறுக்கெழுத்துப்போட்டி இல.23 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. அமாவாசை. | 01. அணைக்கட்டு. |
| 08. தோடை. | 02. மாதோட்டம். |
| 11. பல். | 03. வாடைக்காற்று. |
| 21. காதணி. | 06 பல்லி. |
| 30. பூ. | 11. பரணி . |
| 31. பயறு. | 22. பதவி. |

### குறுக்கெழுத்துப்போட்டி இல.23இன் பரிசுக்குரியவர்

**கு. பிரஷாந்தன், தரம் -04**
**கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.23 இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. பா.யதுகுலன், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
02. பெ.பாலகிருஸ்ணன், இறம்பைக்குளம், வவுனியா.
03. யோகா சுந்தரலிங்கம், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
04. சு.சோபியா, R.C.வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.
05. மா. தயாநிதி, No -96, பாலிநகர்.

இளையவர்களே! ☞
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.25
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# வீடு

**வீடு நல்ல வீடு**
**கல்லால் கட்டிய வீடு**
**ஜன்னல்கள் உள்ள வீடு -எங்கள்**
**அழகான வீடு**

**வெய்யில் மழை எல்லாவற்றிலும் - எம்மைக்**
**காக்கும் நல்ல வீடு**
**எமக்கு உதவும் வீட்டை**
**சுத்தமாக வைத்திருப்போம்.**

**பா.தனுசன்,**
**தரம் -7A**
C.C.T.M.S




**உலகில் முதல் விமானத்தின் வடிவம் இது. 1901ல் ரைட் சகோதரர்கள் வடிவமைத்த Flyer -1 விமானம் இது. விமானமாதிரியில் ஓர் வில்ரைட் எப்படிப் பறந்தார் என்பது காட்டப்பட்டுள்ளது.**

☞ அமைதி, எல்லா வேளைகளிலும் களங்கமற்ற தன்மையின் அறிகுறியாகிவிடாது. – பைரன்பிரபு.



## தொடர்கதை



### அத்தியாயம் -2

# இடம் பெயர்ந்தவன்

பிளானறி ஓ கொணரின்

தமிழில் சு.மகேந்திரன்

'காசே எல்லாக்கெடுதிகளுக்கும் காரணம்' என ஒவ்வொரு நாளும் நீதிபதி கூறிக் கொண்டு இருப்பார். 'காசு தனக்கு துக்கத்தையே கொடுக்கிறது எனவும் நீகிரோகளாகிய நீங்கள் அதிக பணம் புரள்வதனால் தான் திமிராக இருப்பதாகவும் சொல்வார்.

நீதிபதியே அறிந்தவனாகிய கிழவன் 'ஒரு நீகிரோவுக்கு கூலி கொடுக்க முடியாத வறிய நிலையில் தான் எதிர் பார்த்து இருப்பதாகவும் அன்று தான் உலகம் தன்னிலை அடையும்' என நீதிபதி முன்பு தனக்கு கூறியிருந்ததாகவும் கூறினான்.

'அந்த நாள் வரும்காலம் வெகுதூரத்தில் இல்லை.' என முன்னே வந்து இடுப்பில் கையை வைத்தபடி கழுத்தை நீட்டிய படி அவள் சொன்னாள். ' நீங்கள் மதி நுட்பம் உடையவர்களாக இருக்க வேண்டும். இனிமேல் இங்கு நான் எந்த விதமான மடத்தனங்களையும் பார்த்துக்கொண்டு இருக்கப் போவதில்லை. இப்போது என்னுடன் தான் கட்டாயமாக வேலை செய்யவேண்டிய நிலையில் உள்ள ஒருவன் இருக்கிறான்'

கிழவனுக்கு எப்போது பேச வேண்டும். எப்போது மௌனம் காக்கவேண்டும் எனத் தெரியும். 'நெடுங்காலமாக அவர்கள் வருவதையும் போவதையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம்' என்றான். நீட்டி முழங்கியபடி இதனைக் கூறினான்.

'எப்படிப்பார்த்தாலும் சோட்லி குடும்பத்தவர்கள் மிகவும் மோசமானவர்கள் அல்ல என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர். 'நான் அந்த கறீட்ஸ் குடும்பத்தவர்களை நன்கு நினைவில் வைத்துள்ளேன்.'

'கொலின்களுக்கு முன்பிருந்தவர்கள்' என்றான் கிழவன்.

'இல்லை றீங்பீல்ட்ஸ்களுக்கு முன்பிருந்தவர்கள்' அவள் கிழவனைத் திருத்தினாள்.

"சுகந்தமான கடவுளே" அந்த றீங்பீல்ஸ்கள் என்றான் கிழவன். 'இவ்வகையானோர் வேலையே செய்வதில்லை'

'நாங்கள் அவர்கள் வருவதையும் போவதையும் கண்டு கொண்டே வருகிறோம்' என்ற வசனத்தை பல்லவி போல் கிழவன் கூறினான். ஆனால் நாங்கள் இப்போது வந்துள்ளவர்கள் போல் ஒருவரையும் ஒருபோதும் முன்பு கண்டதில்லை என அவளது முகத்தை நேருக்கு நேர்பார்க்கக்கூடிய அளவுக்கு நிமிர்ந்து கொண்டு சொன்னான். வயதால் மங்கிய அவனது கிறிம்சன் நிறக்கண்களில் ஒட்டடை படர்ந்தது போல் சவ்வு படர்ந்திருந்தது. அவன் மண் வெட்டியிலிருந்த கைகளை கீழே கொண்டு போகும் வரை அவனைக் கடுமையான பார்வையுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவன் குவியலாகக் கிடந்தவற்றை சிறிய பகுதிகளாக்கி பின் ஒற்றைச்சக்கரத் தள்ளுவண்டிக்கு சமீபமாக கஸ்ரத்துடன் இழுத்துச் சென்றான். 'முன்பு சோட்லி ஏதாவது கழுவ வேண்டும் என யோசித்து முடிவு எடுப்பதற்கான நேரத்துக்குள், கௌசக் தொழுவத்தையே கழுவி முடித்து விடுகிறான்' என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர்.

'இவன் போலில் இருந்தா வந்தவன்' எனக் கிழவன் முணுமுணுத்தான்.

'இல்லைப் போலந்திலிருந்து'

'போலில் இங்கு உள்ளதைப் போல் இல்லைப்போல் இருக்கிறது. வேலைகளை அங்கு வேறு வகையில் செய்வார்கள் போலும்' என மடத்தனமாக முணுமுணுத்தான்.

'நீ என்ன சொல்கிறாய்?' என அவள் கேட்டாள். 'அவனைப் பற்றி ஏதாவது சொல்வதாக இருந்தால் பலமாகச்சொல்' எனமிஸிஸ் மக்கின்ரயர் கூறினாள்.

அவன் மௌனமானான். ஒரு முழங்காலை மடக்கி அசாதாரண நிலையில் நின்று கொண்டு துடைப்பத்தை நீண்ட தொட்டிக்குள் செலுத்தினான். ' அவன் இங்கு அனுமதிக்கப்படாத எதையாவது செய்தால் உடனே நீ எனக்கு முறைப்பாடு செய்யலாம். இதனை நான் எதிர்பார்க்கிறேன்.'

'முன்பு இருந்தது போல் எதுவுமே இல்லை. அவன் காரியங்களைச் செய்ய வேண்டிய விதத்தில் செய்கிறானா? இல்லையா? என தெரியவில்லை. வேறு விதமாக செய்கிறான். அவை வேறு எவரும் செய்யாதவை போல் உள்ளன.'

'அவள் கதையை மேலும் வளர்க்காமல் அவனில் குறை கூற எதுவும் இல்லை. அவன் இங்கு தொடர்ந்து இருப்பதற்காகவே வந்துள்ளான்.' என்றாள். இதற்கு 'முன் இவனைப போல் ஒருவனையும் நாம் வைத்திருந்ததே இல்லை.' என முணுமுணுத்தபடி வினயமாகச் சிரித்தான் கிழவன்.

'உலகம் மாறுகிறது உலகில் என்ன நடக்கிறது உனக்குத் தெரியுமா?'

'மக்கள் பெருகிக்கொண்டே போகிறார்கள். அதில் சாமர்த்தியமும் சிக்கனமும் பலமும் உள்ளவர்களே தப்பிப் பிழைப்பார்கள்' அம் மூன்று சொற்களையும் கூறும் போது கைகளில் தட்டியபடி கூறினாள். பச்சை நிற தண்ணீர் அடிக்கும் குழாயை கையில் பிடித்தபடி இடம்பெயர்ந்தவன் கதவடியில் நிற்பதைத் தான் நின்ற கொட்டகையையும் தொழுவத்தையும் இணைக்கும் பாதையைப் பார்த்த போது கண்டு கொண்டாள் மிஸிஸ் மக்கின்ரயர். அவனை அவள் அணுகும் போதெல்லாம் அவனில் தெரிந்த விறைப்பான தன்மை அவளைச் சற்று மெதுவாக செயற்பட வைத்தது. அவனுடன் இலகுவாகக் கதைக்க முடியாமல் இருந்ததே அதற்கான காரணம் ஆகும். எப்போதாவது அவனுடன் பேசவேண்டிய தேவை ஏற்படும் போதெல்லாம் தலையை அசைத்து கத்திப்பேச வேண்டியிருந்தது. இதையெல்லாம் பக்கத்து கொட்டகை ஒன்றில் இருந்து யாராவது ஒரு நீகிரோ பார்த்துக் கொண்டு இருப்பானோ! என எப்போதும் அவளது உள்ளுணர்வு உறுத்தியபடி இருக்கும். மிருகங்களுக்கு சாப்பாடு போடும் தட்டு ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டு கைகளைக் கட்டியபடி 'உண்மையில் இனிமேல் இப்படி நடக்காது' என அவள் கூறினாள். 'உலகம் முழுவதும் வேலை செய்தே ஆக வேண்டிய நிலையில் உள்ளவர்களால் நிரம்பி யிருக்க எனது கடைசிக் காலத்தை கொலின்சுகளுடனும், சோட்லிகளுடனும் இனிக்களிக்க மாட்டேன். சீவிய காலம் முழுவதும் உதவாக்கரைகளுடன் காலத்தைகளித்தாகி விட்டது.' என்றாள் திரும்பவும் மக்கின்ரயர்.

'எப்படி இவ்வளவு தேவைக் கதிமானோர் உண்டாகினர்.' என்றான் கிழவன்.

'மக்கள் எல்லோரும் சுயநலவாதிகளாகவே உள்ளனர். அவர்களுக்கு அதிக பிள்ளைகள் வேறு இப்படி இருப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை'


அஸ்ரர் சக்கரவண்டியை கைப் பிடியில் பிடித்தபடி அதனைக் கதவுப்பக்கமாக கொண்டு சென்றவன் சிறிது தாமதித்தான். அவனின் உடலில் பாதி அளவுக்கு வெயில் பட்டுக்கொண்டு இருந்தது. எந்தப் பக்கமாக போகவேண்டும் என்பதை மறந்து விட்டவன் போல், முரசுகளை சப்பியபடி அங்கு நின்று கொண்டிருந்தான்.

(தொடரும்)

---

## ஊக்கமாத்திரை

# நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்



ஆம் மனிதனின் முன்னேற்றத்திற்கு முதலாம் எதிரி சோம்பல் தான். சோம் பேறியாக இருக்கும் ஒருவரால் எதையும் சாதிக்க முடியாது. தகைமை இருக்கலாம் திறமை இருக்கலாம் எவை இருந்தும் வாழ் வில் முன்னேற உழைப்புத் தேவை! கடின உழைப்பின் மூலம் அதிஸ்ட தேவதை எங்கள் காலடிக்கு வருவாள்.

இதைத்தான் பட்டுக் கோட்டையார் அல்லும் பகலும் இருகல்லாய் இருந்திட்டு அதிஸ்டம் இல்லை என்று அரற்றிக் கொண்டார் என்று கூறுகிறார்.

உண்மைதான்! நாம் சோம்பேறிகளாக இருப்பதால் வாழ்வில் எத்தனையோ விடயங்களை இழந்து விடுகின்றோம். எமது இளைஞர்களில் பலர் வீணேபொழுதைக் கடத்திக் கொண்டு எமக்குத் தொழிலில்லை, உத்தியோகம் இல்லை என்று விரக்தியுடன் திரிகிறார்கள் இந்தப்பரந்த உலகில் அரச உத்தியோகத்தை விட்டால் வேறு தொழில் கிடையாதா? கிராமம் எங்கும் வயல்களும் தோட்டங்களும் பரந்து கிடக்கின்றன. எமது அயராத உழைப்பால் அவற்றைப் பொன்விளையும் பூமி ஆக்கிடலாம். கோழிப் பண்ணைகள் விலங்குப் பண்ணைகள் அமைக்கலாம். நகரங்களில் இருக்கவே இருக்கிறது வியாபாரம்! முதல் அதிகம் இல்லாமலே தலைநகர வீதிகளில் தினம் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் எத்தனையோ பேரைத் தரிசிக்கின்றோம். காலையில் ஒரு பெட்டி அப்பிள் பழத்தையோ தோடம்பழத்தையோ வாங்கி வீதியோரம் நின்று விற்பனை செய்துவிட்டு மாலையிலே காசைக் கொடுக்கும் சிங்கள் முஸ்லிம் இளைஞர்கள் எமக்கு வழி காட்டுகிறார்கள். நாம் மட்டும் அதிஸ்டம் எனும் மாயையிலே மூழ்கி எண் சோதிடரை வலம் வருகின்றோம். அதிஸ்ட மோ துரதிஸ்டமோ எப்போதாவது வருவது. ஆனால் உழைப்பின் அறுவடை அனுதினமும் ஈட்டக் கூடியது.

இளைஞர்களே வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்? தேவை உற்சாகமும் முய ற்சியும் தான். சும்மா இருந்து கொண்டு போதைப் பொருட்களுக்கும் நீலப் படங்களுக்கும் அடிமையாகி நாமும் கெட்டு நம்மைச் சார்ந்தவர்களையும் கெடுத்து எமது பண்பாடு கலாச்சாரம் அனைத்தையும் கைவிட்டு நாட்டையே கெடுத்துக் கொண்டு விதியின் மேல் பழி போடுவது நியாயமா?

உழைப்பின்றி எதையும் எட்ட முடியாது. ஒரு இளைஞன் தனது பக்தி மூலம் தனது பதினாறாவது வயதில் இறைவனிடம் முத்தி கேட்டான். இறைவனும் மனமுவந்து நீ வெள்ளை நரியைக் கண்டதும் முத்தியடைவாய் என்று அருள் புரிந்தார். அன்று முதல் அவன் வெள்ளை நரிக்காகக் காத்திருந்தான். வயது ஏறிக் கொண்டு போனதைத் தவிர வெள்ளை நரியும் வரவில்லை. முத்தியும் கிட்டவில்லை. எழுபது வயதாகிவிட்டது. இராணுவம் அவரது கிராமத்தைச் சுற்றிவளைக்கவே அருகிலுள்ள காட்டுக்குள் ஊரவர்களோடு ஓடினார். அங்கே அன்று வெள்ளை நரியைக் கண்டார். முத்தியும் கிடைத்தது.


பதினாறு வயதிலேயே பக்கத்திலுள்ள காட்டுக்குப் போய் வெள்ளை நரியைத் தேடிக் கண்டு பிடித்து முத்தி அடைந்திருக்கலாம். ஆனால் அவனது சோம்பலினால் 54 வருடம் தாமதமானது. ஆம்! வாழ்வில் முன்னேற உடனடியாக சுறு சுறுப்பாக இயங்குவோம்.

ச.முருகானந்தன்

---

ஒருவேளை கூட நீ சிரிக்காது கழித்த நாளே, நாட்களில் அடியோடு பாழாகிப் போன நாள். - எஸபேஸ்ட்டியன் சேம்ஃபோர்ட்

# நவீன அறிவியல் இயற்கை அல்லது உள்ளூர் உற்பத்திகளின் சாவு



அந்நியப் பொருட்களின் வருகை அதிகரிப்பால் இப்பொழுது தமிழர் தாயகத்தில் உள்ளூர் உற்பத்திகள் வீழ்ந்து விட்டன.

மிகவும் அதிக கேள்விகளைக் கொண்ட உள்ளூர் உற்பத்தித் துறை எழமுடியாதளவு அந்நியப் பொருள் இறக்குமதியாளர்களால் வீழ்ந்து விட்டது.

பிரம்பு நாற்காலி உற்பத்திக்கான பிரம்புத்தடிகளும் நிபுணத்துவமும், தொழிலாளர்களும் இருந்த இடத்தில் அவர்களின் தொழில்துறை சிங்கள தேசத்தினூடாக வெளிநாடுகளில் இருந்து வரும் பிரம்பு உற்பத்திப் பொருட்களால் வீழ்ச்சியடைந்து விட்டது. பிரப்பம் தடிகளை வெட்டி நார்களாக்கி கதிரைகளைப் பின்னும் தொழில் உடையோரின் வாழ்வு பிளாஸ்ரிக் நார்களின் வருகையால் வீழ்ந்து விட்டது.

லஞ்ச்சீற் எனப்படும் பொலித்தீன் உணவுப்பொதித்தாளின் அபரிமிதமான வருகையால் வாழைத்தடல் உற்பத்தியென்ற பாரம்பரிய தொழில்துறை காணாமல் போய் விட்டது. உணவகங்களுக்காக வாழையிலை வெட்டல், தாமரை இலை வெட்டல் எல்லாம் இல்லாது போய்விட்டது. இந்தவாழைஇலை, தாமரை இலை வாழைத்தடல் என்பன பாரம்பரியமானதும் ஒருவருக்கு மட்டும் பயன்படுத்துவதால் சுகாதாரமானதும் உக்கியழிவதால் சூழல் பாதுகாப்புக்கு ஏற்றதுமானதாகும். லஞ்சீற் எனப்படும் பொலித்தீனால் இன்று சூழல் மாசடைவு என்ற பாதிப்பைத் தவிர எதுவித நன்மைகளும் இல்லை.

மிக மிக நவீன பாணிகளில் பைகளும் தொப்பிகளும் அலங்காரப் பொருட்களும் உற்பத்தியாகி வந்த பனம் பொருள் தொழில்துறை பிளாஸ்ரிக் பைகள்தொப்பிகள் அலங்காரப் பொருட்களின் அதிகளவு இறக்குமதியால் வீழ்த்தப்பட்டு விட்டது. தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்கள மக்கள் கூடுதலாக ஆர்வமாக பனம்பொருளையே தேடுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதைவிட உடலுக்குக் கேடான சூழல் பாதிப்புக்கு ஆதாரமான பிளாஸ்ரிக் நாற்காலிகள் மேசைகளின் வருகை மரத்தளபாட, பிரம்புத்தளபாட தொழில்துறையை வேரோடு பிடுங்கி எறியத் தொடங்கி விட்டது.

கண்ணாடிக் கலங்களை பிளாஸ்ரிக் போத்தல்கள் ஒதுக்கிக் கொண்டு வருகின்றன. ஆற்றுக்கரை கோரைப் புற்களைக் கொண்டு சுயசார்பாக பொருள் வருமானத்தை ஈட்ட சாதாரணமான பாய் உற்பத்தியை பிளாஸ்ரிக் பாய்களின் வருகையும் இந்திய புற்பாய்களின் அதிகரித்த வருகையும் ஓரங்கட்டி விட்டன.

(Foam) எனப்படும் நுரை மெத்தையின் வருகையில் தும்பு மெத்தை உற்பத்தியும் தலையணைக்காக பருத்திப் பஞ்சு பதப்படுத்தல் துறையும் பாதிப்புற்றுள்ளன.

நைலோன் கயிறுகளின் வருகை அதிகரிப்பால் சுயசா[illegible]பான தும்புக்கயிற்றுத் தொழில் அருகி வருகின்றது. முன்னர் எம்மிடம் இருந்த பருத்தித் துணி உற்பத்தி நெசவு சாலைகள் முற்றாகவே காணாமல் போயுள்ளன.

இப்படியாக துல்லியமாக எமது தொழில் துறைகளை எடுத்துக் கொண்டு பார்த்தோமானால் வெளிநாட்டு இறக்குமதிகளால் அவை வீழ்ந்தும் காணாமல் போயும் உள்ளன. இதனால் வேலையற்றோர் தொகை அதிகமாகியுள்ளது.

பிளாஸ்ரிக்கிலான புதிய பொருட்களின் பயன்பாட்டை நிராகரித்தவர்கள் நவீன உலகை ஏற்கத் தவறுபவர்கள் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படும். ஆனால் இதனையே நவீன உலகம் எனக் கருதினால் அதுவே தவறான கருத்தாகும்.

இந்த நவீன உலகின் பொருட்கள் என நாம் கருதுபவை அனைத்தும் சூழலுக்குக் கேடானவையாகும். உலகளவில் இதற்கு வலுவான எதிர்ப்பு இருக்கிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பு இருக்கிறது. அதி நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பாரம்பரிய உற்பத்திகளை ஆர்வமுடன் பயன்படுத்துகின்றன.

உலகம் முழுவதும் அவற்றைத் தேடிக்கண்டு பிடித்து அவற்றைத் தாம் உற்பத்தி செய்ய உரிமைப் பதிவையும் செய்கின்றன.

ஏனெனில் அவையே சூழல் மாசடைதலைத் தடுக்கும். உடலாரோக்கியத்தைப் பேணும். உண்மையில் நவீன உலகில் எமது தொழில்துறை அரும்பெரும் அறிவியல்.

எங்களைப் போன்ற தேசங்களில் சூழலைப் பாதிக்கச் செய்யும் உடலாரோக்கியத்தை கெடுக்கும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் மேலை நாட்டவர்கள் தாம் தமது சூழலைக் காக்கச் செய்யத் தீவிர கவனம் செலுத்துகின்றனர்.


நோர்வேயில் பெற்றோலியவளம் மிக அதிகம். ஆனால் அங்கு பெற்றோலின் விலை மிகமிக அதிகம். காரணம் என்னவெனில் பெற்றோலின் விலையைக் குறைத்தால் வாகனப் பாவனை அதிகமாகும். சூழல்கெடும். ஆனால் எம்மைப் போன்ற தேசங்களில் பெற்றோலின் விலையைக் குறைக்கவே பெரும் தொழிநுட்ப உலகம்விரும்புகிறது. ஏனெனில் அவர்களின் உற்பத்தியை இங்கே அதிகம் சந்தைப்படுத்துவதற்காக நவீன உலகத்திற்கான நுட்பங்கள் நம்மிடம் உள்ளன. அவை அழிந்து விட்டன. அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றை மீட்பதால் நாம் நமது சூழலைப் பாதுகாக்க முடியும்

**தி. தவபாலன்**

---

## பன்முகம் -24

# வள்ளுவரும் கதிர்காமரும்



எனக்குள் ஒரு விசித்திரமான கற்பனை தோன்றியது.

சிறிலங்காவின் முன்னை நாள் வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமரையும், திருவள்ளுவரையும் சந்திக்க வைத்துப் பார்த்தால் என்னவென்று.

ஏனெனில் கதிர்காமரும் அமைச்சர், திருவள்ளுவரும் அமைச்சராகஇருந்தவர் என்பது ஆய்வாளர்களின் கருத்து. எனவே வெளிநாட்டு அமைச்சர் என்ற மட்டில் அவரைச் சந்திப்பதற்கு வள்ளுவருக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. வெவ்வேறு நாட்டு அமைச்சர்கள் சந்திக்கும் போது பரஸ்பரம் தங்களது நாடுகளைப் பற்றி மற்றவர்களுக்குக் கூறுவதும் மற்றவர்களின் நாட்டு நடப்புகளைப்பற்றி அறிந்துகொள்வதும் இயல்பானதே.

அதிலும் இலங்கையிலே இந்துக்களில் பெயர் பெற்ற வணக்கத்தலத்தின் பெயரைத் தன் திருநாமமாகக்கொண்ட அவரை வள்ளுவர் பக்தி சிரத்தையோடு வரவேற்றிருப்பார்.

"எடுத்தஎடுப்பிலேயே வள்ளுவர் நீங்கள் ஒரு இந்து தானே?" என்று கேட்கவும் "இல்லை நான் கிறிஸ்தவன்"

"அப்போ உங்கள் பெயர் கதிர்காமர்என்று?"

"அது அப்பா அம்மா வைச்ச பெயர்"

"மன்னிக்க வேண்டும் நீங்கள் தமிழர், இந்து சமயப் பெயர் வைத்திருக்கிறீர்கள்... ஆனால் நீங்கள் உங்கள் தாய் மொழியில் பேசுவதற்கு முடியாமல் தடுமாறுகிறீர்களே!"

"ஹி....ஹி...உண்மைதான் எனக்கு தமிழ் பேசவராது பேசுவது எழுதுவது சிந்திப்பது, ஏன் வாழ்வது கூட ஆங்கிலத்தில்தான். தமிழன் என்று என்னைச் சொல்லுவது கூட எனக்குச் சங்கடம் தான். ஆனால் இந்த வெளிவிவகார அமைச்சுப் பதவி கிடைத்தது நான் தமிழன் என்றபடியால்தான்... தமிழீழத்திற்கு தமிழர்களே ஆதரவில்லை. தமிழர்கள் சிறிலங்காவில் சமத்துவமாக நடத்தப்படுகிறார்கள் என்று வெளியுலகிற்கு காண்பிக்க வேண்டும் என்பதற்காகத்தானே தமிழ் பேசத்தெரியாத நான் தமிழன் என்று கூறிக்கொண்டு இந்தப் பதவியில் இருக்க முடிகின்றது."

"ஓஹோ அப்படியா விடயம் உங்கள் நாட்டில் பசி பஞ்சம் என்பது இல்லையா?"

"அப்படிப்பெரிதாக ஒன்றும் இல்லை. ஆனால் பயங்கரவாதிகளுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்கப்போய் மக்கள் இடம்பெயர்ந்து போய் உழைப்பில்லாமல், உணவில்லாமல் கொஞ்சம் கஸ்ரப்படுகிறார்கள் அவ்வளவுதான்"

"அப்படியென்றால் உணவுப்பசி மட்டுமல்ல, பிள்ளைகள் படிக்க முடியாத நிலை ஏற்பட்டு அறிவுப் பசியும் இருக்கும் அல்லவா?"


"அது தவிர்க்கமுடியாதது தானே"

"சரி பசிப்பிரச்சினை போகட்டும் பிணி நோய் என்ற தொல்லைகள் இல்லையா?"

"அதற்கும் இந்த பயங்கரவாதிகள்தான் காரணம் ஏனென்றால் மக்களின் நோய்க்கு அனுப்பும் மருந்து வகைகளை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். அதன் காரணத்தால் நாங்கள் மருந்துத்தடை, மலேரியா நுளம்புக்கான மருந்துத்தடை இப்படியாக தடைகள் போடுவதால் நோய்கள் இருக்கத்தான் செய்கின்றன."

"அப்படியென்றால் அதிகப்படியான சாவுகள், இழப்புகள், பிரிவுகள் காரணமாக உளப் பாதிப்பு அடைந்தவர்கள் இருப்பார்களே?"

"இருக்கிறார்கள் தான். அவை கூட தவிர்க்க முடியாதுதான் ஆனால் பயங்கரவாதத்தை ஒழித்து விட்ட[illegible] எல்லாம் சரியாகவிடும். அதற்காக[illegible] எத்தனை ஆயிரம் பொதுமக்களும் இறந்தாலும் பரவாயில்லை என்று படையெடுத்து சூரியகதிர் நடவடிக்கையும் எடுத்தோம். பயங்கரவாதிகள் வன்னிக்காட்டுக்குள் புகுந்து கொண்டார்கள். பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். இன்னும் சொற்பப் பேர் தான் உள்ளார்கள். அவர் களையும் எமது தளபதி இருபதாம் நூற்றாண்டின் துட்டகைமுனு அநுருத்த ரத்வத்தை விரைவில் அழித்துவிட திட சங்கற்பம் பூண்டுள்ளார். எனவே விரைவில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதானத்திற்கான யுத்தம் வெற்றி பெற்றதும் இப்பொழுது இருக்கும் பசிப்பிணி எதுவுமே எமது நாட்டில் இருக்காது"



"சமாதானத்திற்கான யுத்தமா? அதை எப்படிச்செய்கிறீர்கள். சாத்வீகமாகவா?"

இல்லை இல்லை, எங்கள் எதிரி நாம் நினைப்பதை விட புத்திசாலிகள் அவர்களிடம் அரச படைகளிடம் உள்ளது போல வலிமை மிக்க படை பலமும் ஆயுத பலமும் உள்ளது. எனவே தான் அதி நவீன போர்க்கருவிகள் குண்டுவீச்சு விமானங்கள் யுத்தக்கப்பல்கள் எல்லாம் வாங்கிக்குவித்துக் கொண்டு இருக்கிறோம்.

கதிர்காமரின் இந்த விளக்கங்களை கேட்ட வள்ளுவர் சிரித்தார். பின்னர் கேட்டார். "நீர் என்னுடைய திருக்குறளை படித்துள்ளீரா..? ஓம் மறந்து விட்டேன். உமக்குதான் தமிழே தெரியாதே. பிறகெப்படி திருக்குறள் படித்திருப்பீர்"

"எனது திருக்குறளில் ஒரு அதிகாரம் 'நாடு' என்னும் தலைப்பில் உள்ளது. அதில் நாடு என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் கூறியுள்ளேன்."

"உருபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதிருப்பது நாடு"

அதாவது பசி நோய் சண்டை இல்லாது இருப்பது தான் நாடு. அதன்படி பார்க்கப் போனால் நீங்கள் வாழுவதும் ஆளுவதும் நாடேயல்ல காடு. இத்தகைய நல்ல கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக என்றாலும் தமிழரான நீங்கள் தமிழ் படிக்கக்கூடாதா? என்று கேட்டார் வள்ளுவர்.

வள்ளுவர் கூறிய இந்தக் கருத்துத்தானும் கதிர்காமருக்கு அன்று வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது புரிந்திருக்குமா என்று எனக்குள் நானே கேட்டுச் சிரித்துக் கொண்டேன்.

**நாவண்ணன்**

☞ சிறியவற்றைத் துச்சமாகத் தள்ளுபவன் சிறுகச் சிறுக வீழ்ச்சி அடைவான். – அப்பாக்ரிஃபா




# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம் - 05

குவைத் யுத்தத்தின் பின் எப்படி அவரது ஆதரவு மோசமாகச் சரிந்தது.? இது நான் கேட்கவேண்டிய கேள்வியல்லவா; கேட்டேன்.

*"அமெரிக்காவின் தூண்டுதலால் U.N தடைபோட்டது உங்களுக்குத் தெரியும். அதோடுதான் ஈராக்கில் வறுமை மோசமாகியது. வேலைவாய்ப்புகளும் இல்லாது போனது.*

*உங்களுக்குத் தெரியுமா? ஈராக்கின் பொருளாதாரம் என்பதே அதன் எண்ணெய்தான். அதை ஏற்றமுடியாது போனபோது அதன் பொருளாதார வீழ்ச்சி சொல்லமுடியாதது. வறுமை என்றால் மிகக் கொடிய வறுமை. அதிகமான மக்களுக்குச் சாப்பாடு ஒரு நேரம்தான். அதுவும் உருளைக்கிழங்கையும் தக்காளியையும் - இரண்டும் தான் அங்கு மலிவு - போட்டு அவித்து மசித்துவிட்டு சாப்பிட்டால் பின்பு மறுநாள்தான் அது மறுபடியும் அவர்களுக்குக்கிடைக்கும். இது தான் அவர்களுக்கு நிரந்தரச் சாப்பாடாகிவிட்டது."*

ஒரு நாட்டில் வேலை வாய்ப்பின்மையும் வறுமையும் இருந்துவிட்டால் அது சமூகத்தில் நிகழ்த்துகின்ற தாக்கம் சாதாரணமானதல்ல. அது சமூகத்தின் ஆணிவேரையே ஈடாட்டி விடுகிறது. பின் எந்தக் காரணியாலும் அதனை நெறிப்படுத்துவதென்பது இயலாத காரியமாகிவிடும். அப்படிப்பார்த்தால் ஈராக் சீர்குலைவின் எல்லைக்கே போயிருக்க வேண்டுமே.

அப்படி எண்ணினேன். ஆனால் அப்படியே கேட்டுவிடவில்லை. இப்படிக் கேட்டேன்.

"அப்படியென்றால் மக்கள் எப்படி சமாளிக்கிறார்கள். அரசு ஏதாவது உதவி வழங்குகிறதா?"

*"எப்படிச் சமாளிப்பதா? ஒரே கொள்ளையும் கொலையும் தான். உங்களால் நம்ப முடியுமா? ஒரு 'லையிற்றரை'க் கையில் வைத்திருப்பதைக் கண்டாலே கத்தியால் குத்திவிட்டு பறித்துக் கொண்டோடுவார்கள். அங்கு நடமாடுவதே மிகப் பயங்கரம். அவர்களுக்கும் வேறு வழியில்லை.*

*குவைத் யுத்தத்திற்கு முன்னம் ஒரு 'டொலர்" மூன்றரை ஈராக்கிய 'டினார்'. ஆனால் அமெரிக்கரின் பொருளாதார முற்றுகையின் பின் ஒரு 'டொலர்' இரண்டாயிரம் 'டினார்'.*



*எப்படியிருக்கிறது பொருளாதார வீழ்ச்சி. ஒரு தரமான வைத்தியரின் சம்பளம் இருபத்தைந்து 'டொலர்' ஒரு கிலோ இறைச்சி மூவாயிரம் 'டினார்' எப்படியிருக்கிறது நிலைமை.*

"அப்படியானால் அரசாங்கத்தை எப்படி நடத்த முடியும்? நிதி எங்கிருந்து வருகிறது?"

இப்படி நான் கேட்டேன். இப்படி நான் கேட்கும் போது அரபுலகங்களின் நிதி ஆதரவோ அல்லது வேறு நாடுகளின் நிதி ஆதரவோ இருக்கக் கூடும் அதற்கான தகவல்கள் ஒரு வேளை இவரிடமிருந்து கிடைக்கலாம் என்றெண்ணியே கேட்டேன். பதில்



*"எண்ணெய்க் கடத்தல் மூலமாகத்தான் ஓரளவு நிதி வருகிறது. நானும் அதைத்தான் செய்கிறேன். அமெரிக்கனுக்குத் தான் இது கடத்தல் விடயம் நாங்கள் எங்களுடைய எண்ணையைத் தான் விற்கிறோம். அமெரிக்கனால் எங்கள் எண்ணெய்கள் மோசமான விலையில் விற்பனையாக வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் பிரதான எண்ணெய் வருவாய் சிரியா மூலமான பைப் லைனிங்கில் தான் கிடைக்கிறது. உங்களுக்குச் சொல்லக் கூடியவாறு அரசாங்கத்தின் நிதி தொடர்பாக ஆழமாக எனக்கெதுவும் தெரியாது"* என்றார்.

சிரியாவுக்கான பைப் லைனிங் பற்றி இந்தச் சண்டையின் பின்னர் நான் கேள்விப்பட்டதுதான். அமெரிக்க இராணுவம் அதைக்கண்டு ஆதாரப்படுத்தியும் இருந்ததே. அதனால் சிரியா மீதான அமெரிக்காவின் தாக்குதல் ஒன்றிற்கு வாய்ப்பிருப்பதாக ஊடகங்களில் பேசப்பட்டது. ஆனால் இவர் மிகச் சாதாரணமாகச் சொன்ன இந்த விடயம் பற்றி மேலும் அறிய ஆர்வமாக இருந்தேன்.

"சிரியாவுக்கான பைப் லைனிங் எப்பொழுது தொடங்கப்பட்டது? பாரிய அளவில் இருக்கிறதா? இந்த வருமானம் எங்கே போய்ச் சேருகிறது.?"

*"வேறு எங்கே போவது எல்லாம் சதாமிடம் தான்* (அப்படிச் சொல்லும் போது அரசியலுக்கு அப்பாலான ஆத்திரம் இருப்பது போல எனக்குப்பட்டது.) *பைப்லைனிங் என்றால் மிகப் பாரிய அளவிலான முறையில் தான் செய்யப்பட்டிருக்கிறது. இது அமெரிக்கன் எங்களுக்குத் தடை போட்ட உடனேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அமெரிக்கனால் எல்லாம் முடிந்து விடுமா என்ன"*

சதாம்மீது இருக்கும் கேள்விகளுக்கு அப்பால் அதன் நல்லது கெட்டதுக்ளுக்கு அப்பால், சதாம் ஒரு செயல் வீரன்தான் என்று எண்ணத் தோன்றியது.

அவருடனான அன்றைய தற்செயலான உரையாடலில் இருந்து நான் புறப்பட

**பிரவீன்**

வேண்டியவனானேன். என்னை அழைத்துச் சென்ற நண்பரின் நேரத்தை நான் தின்றுவிட இயலாதே. "இந்தவாரம் நான் இங்குதான் நிற்பேன். பின்பொரு தடைவை ஆறுதலாக உங்களுடன் கதைக்க ஆர்வமாக இருக்கிறேன். இது குறித்து உங்களுக்கு இடையூறாக இருக்காதா? "என்றேன்.

*"இல்லை. ஒருபோதும் இல்லை நிச்சயமாக நீங்கள் வரலாம்.வரும் போது ஒரு நாள் சேர்ந்து உணவருந்துவோம்"* என்றார்; மிகவும் நட்போடு.

(ஒரு வாரம் காத்திருக்க)

---

# நேர்நோக்கு

## மோசமடைந்து செல்லும்...

சிறிலங்கா படையினரின் சோதனை நடவடிக்கைகள் மீண்டும் அதிகரித்து வருவதனை கடந்தவாரச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. யாழ் குடாநாட்டிலும், மட்டக்களப்புமாவட்டத்திலும் இது அதிகரித்த போக்கில் காணப்படுகிறது.

இதன் உச்சமாக இவ்வாரம் வடமராட்சிப்பகுதி யில் மிகக்கடுமையான சோதனைநடவடிக்கைகளில் சிறிலங்காப் படையினர் ஈடுபட்டனர். வடமராட்சியின் நுழைவாயில்களில் உள்ள அனைத்து முகாம்களிலும் அனைவரும் கடும் சோதனை நடவடிக்கைகளுக்கு உள்ளாகினர்.

அதேவேளை மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிள் பிரிவினரினதும் புலனாய்வுப்பிரிவினரினதும் சோதனை நடவடிக்கைகள் மக்களை அச்சமூட்டும்வகையில் அமைந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை சிறிலங்காப் படையினரால் மட்டுமல்ல தேசிய துணைப்படையென்று கௌரவமாக சிறிலங்கா அரசாங்கத்தினால் அழைக்கப்படும் "ராசிக்" குழுவினர் கூட போராளிகளைக்கைது செய்யுமளவுக்கு நிலைமை வந்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அரசியல் பணிக்குச் சென்ற இப்போராளிகளைக்கைது செய்ததோடு நின்று விடாமல் அவர்கள்மீது கொலைக்குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் அரசியல் பணிமனைகளைச் சுற்றிவளைத்து சோதனையிடும் நடவடிக்கைகளும் இடம் பெற்றிருக்கிறது. இப்பணிமனைகளில் சக்திவாய்ந்த தொலைத் தொடர்பு சாதனம் இருப்பதாக படையினர் குற்றம் சாட்டியபோதும் அவ்வாறாக நிரூபிக்கப்படவில்லை.

பண்ணாகம் பகுதியில் போராளியின் பயணப் பொதியை ஒப்பந்த நடைமுறைக்கு மாறாக படையினர் சோதனையிட முயன்றிருக்கின்றனர்.

ஆனால் அதற்கு இணங்காது போராளி உறுதியாக நின்றமையால் அப்பைக்குள் சந்தேகத்துக்கு இடமான பொருள் எதுவுமில்லை என்பது நிரூபிக்கப்பட்டது.

அவ்வாறில்லாது போராளி அதற்கு உடன் பட்டிருப்பின் இராணுவமே சோதனை என்ற பெயரில் அதற்குள் ஏதாவது வெடிபொருளை வைத்துவிட்டு போராளி மீது பொய்க்குற்றச்சாட்டை சுமத்தியிருக்கக் கூடும்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஒரு புறமிருக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குமாறாக யாழ் குடாநாட்டில் புதிய படைமுகாங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. முகாம்களை இடமாற்றல் என்ற பெயரில் நடைபெறும் இந்த நடவடிக்கைகளால் மேலும் மக்கள் பாதிப்புக்கு உள்ளாவதே அதிகரிக்கிறது.

இந்த நடவடிக்கைகளை மக்களைப் பாதுகாத்தல் என்னும் பெயரில் படையினர் மேற்கொள்வது தான் வேடிக்கையானதும் வேதனையானதுமான விடயங்கள் ஆகும்.

யாழ்மையப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து அகற்றப்படுவர் என பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. யாழ்நகரின்மையப் பகுதியில் வேறொரு இடத்தில் முகாம் அமைத்தபின்பே தாம் அவ்விடத்திலிருந்து விலக முடியும் எனப்படையினர் விடாப்பிடியாக நிற்கின்றனர்.

படையினர் நிலை கொண்டிருப்பதால் தமது அன்றாடச் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன என்றேமக்கள் கூறுகின்றனர். ஆனால் அதனிலும் இடைஞ்சலான இடங்களில் முகாம்களை அமைத்து மேலும் மக்களுக்குத் துன்பத்தை விளைவிக்கவே படையினர் விரும்புகின்றனர். இதற்கு மக்கள் வாழும்பகுதியில் தாம் இருந்தால் தான் மக்களைப் பாதுகாக்கமுடியும் என்று வேறு கூறிக்கொள்கின்றனர்.

மக்களை அன்றாடம் நிகழும் திருட்டு கொள்ளை போன்ற சமூகவிரோதச் செயல்களிலிருந்து கூடப்பாதுகாக்க முடியாத இவர்கள், யாரிடமிருந்து பாதுகாக்கப்போவதாக கூறுகின்றனர்? இன்னமும் சொல்லப் போனால் இராணுவ பொலிஸ் முகாம்களால் சூழப்பட்ட இடங்களில் சாதாரணமாக மக்கள் நடமாட அஞ்சும் வேளைகளில் தான் இவ்வாறான சமூகவிரோதச் செயல்கள் நடைபெறுவது மக்களுக்கு பல ஐயப்பாடுகளை ஏற்படுத்துகிறது.

இவையெல்லாம் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகையில், மறுதரப்பான அரசாங்கத்தரப்பும் படைகளும் இவ் ஒப்பந்தத்துக்கு முரணான பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றால் பொதுமக்களும் போராளிகளும் பெரும்பாதிப்புக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

சமூகவிரோதச் செயல்களுக்கு எதுவித தடையும் இல்லாத அதேவேளை சாதாரண பொதுமக்கள் சோதனை என்ற பெயரில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றமை அவர்களைப் பெரும் விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது.

இவற்றையெல்லாம் கண்காணிப்புக் குழுக்களுக்கும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் முறையிட்டும் அவை குறைவடைவதாகக் காணவில்லை. மாறாக அதிகரித்துச் செல்லும் போக்கே காணப்படுகிறது. மக்கள் மகஜர்கள் கையளித்தும் சாத்வீகப் போராட்டம் நடத்தியும் பயனெதுவும் காணாதது மட்டுமல்ல அவ்வாறான போராட்டங்களை நடத்துவதுதான் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயலென அறிவுறுத்தவும் அச்சுறுத்தவும் படுகின்றனர்.

இந்நிலையில் சமூகவிரோதிகள் என மக்களால் இனங்காணப்பட்ட தமிழ்க்குழுக்களுக்கு தற்பாதுகாப்பு ஆயுதம் வழங்க வேண்டுமென சிறிலங்காவின் அதியுயர் தலைவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார். அதிகளவு ஆயுதம் வழங்கினால் பௌத்த பீடமும் இனவாதமும் தம்மீது சீற்றமடையும் என்ற அச்சம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதங்களை வழங்க அவர் கோருகிறார். இவ் ஆயுதங்கள் இப்பொழுதுள்ள சூழ் நிலையை மேலும் மோசமாக்கி அவர் ஆரம்பம்முதலே எதிர்த்து வரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவும் என்பது அவருக்கு நன்கு தெரியும் அவர் எதிர்பார்ப்பதுவும் அதுவே.

**வேலவன்**

---

உயிர்ராசி எதையும் பார்த்து நான் சிரிப்பது, அழாமல் இருக்க வேண்டும் என்பதற்கே. - வைரன்பிரபு.

# இடி விழுந்த இன்டர்நெட் காதல்

வாழ்க்கையில விதி எப்படி யெல்லாம் விளையாடுகிறது என்று நொந்து புலம்புபவர்கள் பலர் உண்டு.

45 வயது குபேரவா என்ற ரஷ்யப் பெண்மணியின் வாழ்க்கையில் இந்த விதி என்னமாதிரி விபரீதத்தை ஏற்படுத்தியது தெரியுமா? அது ஒரு சோகக்கதை.

கஜகஸ்தான் நாட்டில் பிறந்த வரான குபேரவா மாஸ்கோ நகர வாசி முதல் கணவரைப் பிரிந்த அவருக்கு 13 வயதில் அலெக்சாண்ட்ரியா என்ற ஒரு மகளும் உண்டு.

'இன்டர்நெட்'டில் குபேரவா உலாவியபோது அமெரிக்காவைச் சேர்ந்த சாண்டி புக்கர்(49) என்பவர் பழக்கமானார். இருவருக்குமிடையே காதல் தீ மூண்டது.

இன்டர்நெட் மூலமாகவே நூற்றுக்கும் மேலான 'காதல்' கடிதங்களைப் பரிமாறிக் கொண்டவர்கள் காதல் போரடித்ததால் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு செய்தார்கள்.

கடந்த ஆண்டு அக்டோபர்26-ந் திகதி சாண்டி புக்கர் அமெரிக்காவிலிருந்து மாஸ்கோவிற்குப் பறந்து வந்தார். குபேரவாவை அமெரிக்காவிற்கு அழைத்துப் போய் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார், அவர்.

அமெரிக்கா போவதற்காக அன்று காலையில் தான் குபேரவாவிற்கும், அவரது மகள் அலெச்சாண்ட்ரி யாவுக்கும் அமெரிக்க தூதரகத்தில் விசா கிடைத்து இருந்தது.

சாண்டி புக்கருக்குக் காதல் மனைவியை கைப்பிடிக்கப் போகும் சந்தோஷம், குபேரவாவிற்கோ அமெரிக்காவில் வாழ்க்கை நடத்தப் போகும் மகிழ்ச்சி, சிறுமி அலெக்சாண்ட்ரியாவுக்கோ நாடு விட்டு நாடு பறக்கப் போகும் குஷி.

மூவரது 'மூடு'ம் உற்சாகத்தில் மிதக்க அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள ஒரு தியேட்டருக்கு நடந்தே வந்தனர். டிக்கெட்டை வாங்கிவிட்டு தியேட்டருக்குள்ளும் சென்றனர். உள்ளே 'ஜோர்ட் ஓஸ்ட்' இசை நாடகம் ஆரம்பமானது. அப்போதுதான் அந்த விபரீதம் நடந்தது.


மகளின் கல்லறை முன்பாக குபேரவா

ரஷ்யாவில் தனி நாடு கேட்டுப் போராடி வரும் செசன்ய தீவிரவாதிகள் 40 பேர் வெடிகுண்டு, இயந்திரத் துப்பாக்கிகளுடன் 'திபு திபு'வென தியேட்டருக்குள் நுழைந்தனர். தியேட்டருக்குள் இருந்த 800 பேரையும் பிணைக் கைதியாகப் பிடித்துக் கொண்டனர்.

அடுத்து சில மணி நேரத்தில் ரஷ்ய இராணுவம் அதிரடி நடவடிக்கை யாகத் தியேட்டருக்கு விரைந்து முற்றுகையிட்டது. சக்தி வாய்ந்த மயக்க வாயுவைச் செலுத்தியது. அனைவரும் மயங்கி விழுந்தனர். என்ன கொடூரம், பிணைக்கைதி களில் 129 பேர் மயங்கிய நிலையிலேயே உயிரை விட்டனர். தீவிரவாதிகளும் பிடிபட்டனர்.

மயக்க வாயுவை அளவுக்கு அதிகமாகச் சுவாசித்ததால் அலெக்சாண்ட்ரியாவும், சாண்டி புக்கரும் பலியாகிவிட்டார்கள். குபேரவா அதிஷ்டவசமாக உயிர் தப்பிவிட்டார். அவ்வளவு தான் அவரது வாழ்க்கையே சூனியமாகிப் போனது.

மகள், வருங்காலக் கணவர் இருவரையுமே பறிகொடுத்த சோகத்தில் குபேரவா அமெரிக்கா விற்குப் போனார். சாண்டி புக்கர் வசித்த ஓக்லஹோமா நகருக்குப் போய்த் தங்கித் தற்போது அமெரிக்கவாசியாகவே ஆகிவிட்டார்.

அலெக்சாண்ட்ரியா, சாண்டி புக்கர் இருவரும் இறந்து போனதற்கு நஷ்ட ஈடாக ரஷ்ய அரசாங்கம் 90 ஆயிரம் ரூபாவை மட்டுமே வழங்கியுள்ளது.

ஆனால் 21 கோடி ரூபாய் கேட்டு குபேரவா ரஷ்ய அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார்.

"எனது மகளையும், வருங்காலக் கணவரையும் தியேட்டருக்குள் இருந்து ரஷ்ய அதிரடிப்படை உயிரு டன்தான் மீட்டது. ஆனால் தியேட்ட ருக்கு வெளியே வந்த பிறகு இருவ ருக்கும் சிகிச்சை கிடைக்காமல் இறந்து விட்டனர். ரஷ்யாவில் மனித உயிர் என்பது ரொம்பவும் மலிவாகி விட்டது" என்று மனம் நொந்து கூறுகிறார் இவர்.

குபேரவாவின் நிலையை எண்ணினால் பரிதாபமாகத் தான் இருக்கிறது!


## ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈசுபரர் கோவில் வருடாந்த ஆனி மகோற்சபம்

2003.06.28 ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருவிழா தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும். 2003.07.10ந் திகதி வேட்டைத் திருவிழா[13ம் திருவிழா]வும், 12ந்திகதி தேர்த்திருவிழாவும், 13ல் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். நோய் நீங்குவதற்காக வேடனாக நேர்த்தி செய்யும் பக்தர்கள் மிகப்பெருந்திரளாக ஆதிகால வேடர்கள் போல வேடமிட்டு கலந்து கொள்ளும் காட்சி இலங்கையில் எங்கும் காணமுடியாத பேராச்சரியமாகும். பல்வேறு போர் அனர்த்தங்களால் பெரும் சேதங்களுக்குறப்பட்டிருக்கும் கோவிலும், இலங்கையிலேயே மிகப்பெரிய, அதேசமயத்தில் கட்டடக்கலைநுட்பம்மிக்க தீர்த்தக்கேணியும் அவசரமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும். அதே சமயத்தில் பழைய கட்டுத்தேரும் சிதைவடையும் நிலையில் உள்ளது. தானாகத் தோன்றிய சிவலிங்கம் என்ற பெருமையையும் தோன்றிய காலத்தைக் கணக்கிடமுடியாத தொன்மையையும் பல்வேறு கர்ண பரம்பரைக்கதைகளைத் தன்னகத்தே கொண்டு, மூர்த்தி,தல,தீர்த்த விசேட சிறப்புமிக்க சரித்திர பிரசித்தி பெற்ற கோவில் இன்று பல்வேறு தேவைகளை வேண்டி நிற்கின்றது. அரசின் உதவியையும் கோரியுள்ளோம். பொதுமக்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

திரு. சி.சிவபாலகுரு
[தலைவர்]
ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவில்
முகாமைத்துவ சபை.

[சி-8173]



Advancer Advancer Advancer Advancer

A/L பரீட்சை எழுதி முடித்த மாணவர்களுக்காகவும் அலுவலகப்பணியாளர்களுக்காகவும் **Diploma in Ms-Office Application** பாடநெறியும் மற்றும் ஆரம்பக்கணனி அறிவைக் கொண்டவர்களுக்கு**Software Developing** இல் அனுபவம் வாய்ந்தவரால்**Visual Basic Programming** கற்பிக்கப்படுகின்றது.(உங்கள் சுய முயற்சியால் **Software Develop** செய்யும் தகமையை இப்பாடநெறி முடிவில் பெறலாம்)

வகுப்புகள்: சனி,ஞாயிறு
நேரம்: காலை 8.00-10.00
மாலை 4.00- 6.00

ஆரம்பம்: 21.06.2003 சனிக்கிழமை
அனுமதிகள் முன்கூட்டியே பெறப்படவேண்டும்.
மேலதிக தொடர்புகட்டு: நிர்வாகம்.


(சி-7753)

Advancer Computing Institution



## பதின்நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1972 - 04 - 21



மறைவு 1989 - 06 - 17

### செல்வன் தியாகராஜா கஜேந்திரன் (கஜன்)

பழைய மாணவன் பரி.யோவான் கல்லூரி
யாழ்ப்பாணம்

நித்தம் நித்தம் பூமியிலே
பூக்குதையா புத்தம் புது மலர்கள்
சித்தம் அவன் செயலோ
சென்றதுமேன் பாதி வழியில்
பத்துடனே நான் காண்டு
பறந்ததுவே பஞ்சாகி
சொத்தான எம் கஜனே
தீராது எம் கவலை

ஈர விழிகளோடு இதயம் நெகிழ்ந்திடும் அன்பு
அப்பா,அம்மா,உடன்பிறந்தவர்கள் மற்றும் மைத்துனர்,
மருமக்கள்

'கஜன் சென்ரர்'
இல.25,45,பேருந்து நிலையம்,
வவுனியா.
Tel:024-22476.

இல.5B,இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
Tel:024:22524

(சி-7969)






TECHNO WORLD



தரமான அச்சுப்பதிப்புகளுக்கு
கணனி முறையில்

## அழகன் பதிப்பகம்

யாழ் சாலை, கிளிநொச்சி.

இனிவரும் வெள்ளிநாதம் இதழ்களில் வாசகர்களாகிய உங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க காத்திருக்கிறேன் நான்.

உங்கள் கேள்விகளையெல்லாம்

அனுமார் பதில்கள்,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

என்ற எனது முகவரிக்கு எழுதுங்கள்.

போரின் சாட்சியாய்,
நீதியின் சாட்சியாய்,
காதலின் சாட்சியாய்,
அன்று இருந்தது
போல் இன்றும்,
உங்கள் கேள்விகளுக்காக
காத்திருக்கின்றேன்.





(2ம்பக்கத்தொடர்ச்சி)

தீவிரம் காட்டி செயற்படுவதை சர்வதேச சமூகம் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்க நினைக்கிறதா....

சிறிலங்காப் படைகளை- இந்தச் சமாதான சூழலிலும் பலப்படுத்த பயிற்சி களைவளங்களை நவநவீன போர்த்தளபாடங்களை யுத்தக் கப்பல்களை தாக்குதல் விமானங் களை தாராளமாக- இலவசமாக வழங்கி வரும் நாடுகள் தமிழ்மக்களை மட்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லுங்கள் என அழுத்தம் கொடுக்க முயல்வது அவர்களின் நடுநிலைத் தன்மையை சமாதானத்திற்கான அனுசர ணையை சந்தேகிக்கவே வைக் கிறது.

இது தமிழ் மக்களை அச்சுறுத்தும் பேரினவாத அரச யந்திரத்திற்கு ஆதரவு வழங்கும் சமாதான விரோத நடவடிக்கைகளாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

கடலில்- சர்வதேசக் கடல்பரப்பில் விடுதலைப் புலிகளின் சரக்குக்கப்பலைத் தேடிச் சென்று தாக்கி மூழ்கடித்துள்ள கடற் படை இதேபோன்ற தனது தொடர் நடவடிக்கையால் யுத்தத்தை மீளத் தொடங்க வைக்கும் போர்வெறி முனைப்புடன் செயற் பட்டு வருவது வெளிப்படையான விடயம்.

கடற்படைத் தளபதி சந்தகிரி சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் அபிலாசைகளுக்கு அனுசரணையாகச் செயற்படும் ஒருவரே.... ரணிலின் அதிகார மற்ற அரசின் 'சமாதான, செயற்பாட்டை குழப்புவது தான் அவரது பிரதான இலக்கு.

எனவே கடற்பரப்பே சமாதானத்தின் புதைகுழியாக மாறும்சாத்தியம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுமோ என்ற அச்சம் பரவி வருவதையும் தவிர்க்க முடியாமல் உள்ளது.

சந்தகிரியின் மூர்க்கத்தனம் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் அவர் இல்லை என்பதையே வலியுறுத்துகிறது.

யாழ்குடாவில் - சமாதான சூழலை யுத்த சூழலாக மாற்ற இராணுவம் பகீரதப் பிரயத்தனம் எடுப்பதையே - அவர்களின் அண்மைக்கால அத்துமீறல் செயற்பாடுகளின் அதிகரிப்பு உணர்த்துகிறது.

தீவுப்பகுதி பிரச்சினையில் குவிமையம் கொண்டு பெண் போராளிகளின் இடுப்புப்பட்டிப் பிரச்சினையில் தீவிரம் கொள்ளத் தொடங்கிய இராணுவத்தினரின் அமைதி விரோத நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக மூர்க்கத் தனம் கொள்ளத் தொடங்கியுள்ளது.

சுழிபுரம் பகுதியில் அரசியல் நடவடிக்கைப் போராளிகளின் முகாம்களை ஆயுதமுனையில் சுற்றிவளைத்தமை...

வடமராட்சி தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் புதிய முகாம்களை அமைக்கும் பணியிலீடுபட்டு வருகின்றமை...

தீடீர்ச் சோதனை நடவடிககைகளை தீவிரப்படுத்தி மக்களையும் போராளிகளையும் அவலத்திற்கும் அவமதிப்பிற்கும் உள்ளாக்கத் தொடங்கியுள்ளமை...

வடமராட்சி திக்கத்தில் தமிழ் இளைஞர் ஒருவரை கட்டித்தூக்கி சித்திரைவதை செய்தமை... எனத் தொடரும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் சமாதானம் அவர்களின் 'மூர்க்கத்தனத்தை' எந்த விதத்திலும் குறைக்கவில்லை என்பதையே வலியுறுத்துவதாக வுள்ளது

இவையனைத்தும் படைத்தரப்பின் 'போர்வெறி, சமாதான நடவடிக்கைகளால் கனிந்து விடவில்லை. இது நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பதையே உணர்த்துவதாயும் உள்ளது.

பேரினவாதத் தலைமைகள் ஊதும் போது அது கனன்று எரியவே செய்யும்.

போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவும் சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகமும் என்ன விலை கொடுத்தும் சமாதானம் என எக்காளமிடும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் இந்த நிலை குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றன என்பதே இன்றைய கேள்வி.

விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கான அர்ப்பணிப்புடன் அளவற்ற பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிக்கிறார்கள்.

சமாதானம் இதனாலேயே இன்னமும் நிலைக்கிறது.

இந்த நிதானத்தையும் பொறுமையையும் பயன்படுத்தி அவர்களைப் பொறியில் சிக்க வைக்கும் நோக்குடன் அரசும் படைதரப்பும் எல்லாவற்றிற்கும் மேலாக சிறிலங்காவின் சனாதிபதியும் 'மூர்க்கத்தனத்துடன்' இயங்குவதன் மூலம் அவர்களின் பொறுமையைச் சோதிக்க முயல்வது புத்திசாலித்தனமான ஒரு நடவடிக்கையே அல்ல...

'அவதந்திரம் தனக்கந்தரம்' என்ற முன்னோர் வார்த்தையை சம்பந்தப்பட்ட அரச தரப்பினர் அனைவருக்கும் கூறிவைப்பது இந்த நிலையில் அவசியமாகின்றது. ●

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –23



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –23

.............................................................
.............................................................
.............................................................
.............................................................

பெயர் : .............................................
முகவரி : .............................................
.............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்—22



**கதிரவேலு. புஸ்பாஞ்சலி,**
**4ம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

### பரிசுக்குரிய வரிகள்

கைவிடப்பட்ட காவலரணுக்குள்
எதை எடுக்க போகிறீர்கள்
உள்ளே செல்வதற்குமுன் சிந்தியுங்கள்
அடுத்துவைக்கும் அடி உங்கள் கால்களைப் பறிக்கலாம்

### பாராட்டுக்குரிய வரிகள்

*சிறுமியே உன் உள்ளம் யாரைத்தேடுகிறது*
*உன் அன்னை அவளை கண்டு விட்டாயா*
*என்ன? செய்வது மரபு வெளிக்குள்*
*உன் உள்ள குமுறல் என்ன அம்மா*

ஆ.சுதர்சிகா,
கிளி/முருகானந்தா.ம.வி,

*என்ன செல்வங்களே - உங்கள்*
*முகங்களில் என்றுமில்லாத புன்னகை*
*புலிமாமாக்களை கண்டதும் - உங்கள்*
*பஞ்சம்பசி பறந்து போனதுவா?*

இ.நிலா,
அம்பாள்குளம், கிளிநொச்சி.

*ம்....ரோக்கியோவிற்கும் சிட்டாகப்பறந்து சென்று*
*கட்டாகக் காசு கொண்டு வந்து விட்டார்களாம்*
*பார்ப்போமே குறுக்க இருக்கின்ற - இந்தக்*
*கம்பியையாவது நறுக்க உதவுகிறார்களா என்று.*

இ.ராஜ்குமார்,
மு/புதுக்குடியிருப்பு.ம.வி

*சிற்றாடை கட்டி சிட்டெனப் பறக்கவேண்டிய*
*நீ - குளிக்கப் போவது பாதுகாப்பு வலயத்தில் தானா*
*இங்கே போனவர் கிணற்றில் முக்குளித்துப் போனது தான்*
*மிச்சம் - கவனம் நீ வாழ வேண்டியவள்*

மே.மதி,
கனகபுரம், கிளிநொச்சி.

*ஊருவிட்டு ஊருபோயி*
*கேடு கெட்டுத் திரும்பி வந்தும்*
*வேலி தாண்ட முடியலயே*
*நம்ம வீடு சேர வழியிலையே*


சி. ரவிக்குமார்,
யாழ்சாலை, முறிகண்டி

*முட்கம்பி வேலிக்குள் மகாமிட்டு முடக்கி விட்டோம்*
*தமிழினத்தின் விடிவிற்கான வேட்கையினை - என்று*
*பகல் கனவு காணும் பாதகர்களுக்கு - நிச்சயம்*
*பதில்சொல்ல வருவார்கள் என்ற ஆனந்தஎதிர்பார்ப்பா இது!*

திருமதி.மீ.இதயசிவதாஸ்,
சிவநகர், உருத்திரபுரம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

சிறப்பு என்பது பெரும்பாலும் பெரும் வெற்றியைக் குறிக்கும் மரியாதைச் சொல்லே. – ஸேம்யல் ஜான்ஸன்



சிறுவர்கள் போரில் ஈடுபடுதல் பற்றி அதிகம் முழங்கும் நாடுகளே இன்று அதிகம் அவர்களை போரிடத்தூண்டும் விதமாகநடந்துகொள் கின்றன. கொங்கோவில் போரிடும் ஒரு கொங்கோ குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் ஏ.கே.47 துப்பாக்கியுடன் அவனது அதிகாரி ஒருவருக்கு பாதுகாப்பை வழங்குகிறான்.


## வெள்ளிநாதம் விளம்பரக் கட்டணம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| 1 பக்கம் | 12000/= | 20000/= |
| அரைப்பக்கம் | 6000/= | 10000/= |
| காற் பக்கம் | 3000/= | 5000/= |
| ஒரு கொலம் 1cm | 60/= | 100/= |





பல மாளிகைகளை தம்வசம் வைத்திருந்த சதாம் அமெரிக்காவின் தாக்குதலின் பின் ஈரான்—ஈராக் எல்லையில் உள்ள எங்கோ ஓர் மூலையில் சாதாரண குடிமகனுக்கே உரித்தான படுக்கையொன்றில் இராணுவச் சீருடையுடன் தன் மகளுடன் கொஞ்சி விளையாடும் இப்புகைப்படம் சதாமுக்கு நெருக்கமான தரப்பில் இருந்து பத்திரிகைகளுக்கு கிடைத்துள்ளது. சதாமை உயிருடன் பிடிப்பது என்ற அமெரிக்காவின் எண்ணத்துக்கு இப்புகைப்படம் எண்ணை ஊற்றியது போல் உள்ளது.

சீனாவில் அதிகம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதென கூறப்படும் சார்ஸ் நோய் இன்னும் அவர்களின் உடலில் ஏற்பட்ட முகமூடித்தழும்புகளை மாற்றவில்லையே!


TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA

**TOSHIBA**

**சேமிப்புக்கலங்கள்**




- ✸ஹெவி டியுட்டி- நீண்ட கால பாவனைக்கு
- ✸விசேஷமா மணிக்கூடுகள், கமராக்கள், செவிப்புலன் கருவிகள், கல்க்யுலேட்டர்கள், வானொலிப்பெட்டிகள், விளையாட்டுப்பொருட்கள் ஆகியவற்றிற்கு உகந்தது.
- ✸தகடு உறை. கசிவு அற்றது

மேலும்,
எந்தத் தேவைக்கும் உகந்த
TOSHIBA மின்கல தொகுதி உண்டு

ரூ.13.50க்கு மேல்

மின்கல நிபுணர்கள்
**மக்னட் செல்ஸ் (தனி) வரை**

தலைமை அலுவலகம்:7, மாயா அவன்யு, கொழும்பு 6 தொலை:591456,594755
விற்பனை நிலையம்: லக்கி ப்ளாஸா, கொழும்பு 6 தொலை:574675 பக்ஸ்: 94-1-582530
E-mail: magnet@eureka.lk

**TOSHIBA**
கனிசமாய் விற்கும் கலம்

TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA TOSHIBA


## சார்ஸின் கொடுமை




**பொன் கவீன் கலர் லாப் வீடியோ அன் ஸ்ரூடியோ**

தனியார் பஸ்தரிப்பு நிலையம் வவுனியா

எமது கலையகத்தில் உங்கள்
அனைத்துவிழாக்களுக்கும் தரமான
படப்பிடிப்பு தேவைகளை செய்து வந்த
எமது 17 வருட
நிறைவுடன் -விரைவு சேவை

**பொன் கவீன் கலர் லாப் வீடியோ அன் ஸ்ரூடியோ**

4R படங்கள் 10/= மட்டுமே
(குறிப்பிட்ட சில காலம் வரை)

## விநாயகா டிரேட் சென்ரர்

**வவுனியா மாநாகரில் புதியதோர் உதயம்**

எங்களிடம் மலிவான விலையில் தரமான அலுமினிய பார்வகை, ஒட்டுப்பலகை,mofபோட்,PVC வெள்ளை போட், சிப்போட், எம்போஸ் சீட், தரைவிரிப்புகள், ரெக்சின் வகை, வெல்வெட் துணி, பிளைவுட் கதவுகள், போமிக்கா சீட், குசன் செற்றிகள், அனைத்து வகையான கைப்பிடிகள்,பூட்டுகள், ஏர்கு,ஏர்கு,(EIITEL Antax செய்ய தேவையான பொருட்கள், மேசைக்கண்ணாடி, ஜன்னல் கண்ணாடி, பிளாஸ்டிக் கண்ணாடிகள், மெகிபோட், நோட்டீஸ் போட் கூலின் ஸ்டிக்கர் வகைகள் மற்றும் சகல விதமான அலுமினிய பிட்டிங் வேலைகள் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**குறிப்பு:**
எம்மிடம் பிட்டிங் வேலைகள், கட்டிங்களுக்கான கதவு, ஜன்னல்,பாட்டிசன், கேட்டின் பிட்டிங், பென்டரி கபட் பிட்டிங், வியாபார ஸ்தாபனத்திற்கு தேவையான சோகேஸ்கள், கண்ணாடி சோரும்,ராக்கைகள் என்பன மற்ற இடங்களை விட குறைவான விலையில் கூடுதலான உறுதியுடன் செய்து தரப்படும்.

இல: 102, முதல் மாடி, பஸ் நிலைய கட்டிடம், வவுனியா. TP— 071—2355563


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.